

அம்பாந்தோட்டை சுடலைஞானம் !



தீமையின் திசைவழியே...

நவம்பர் 20- நவம்பர் 26, 2011 | November 20 - November 26, 2011 | பக்கங்கள் -28 | 25.00



REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்

இணையங்களுக்கும் செக்

# திசை திருப்பப்படும் தேசியவாதம்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# பேத்தி பிறந்ததில் அமிதாப் மகிழ்ச்சி

நடிகை ஐஸ்வர்யா ராய்க்கு கடந்த 16ஆம் திகதி காலை 10 மணி அளவில் சுக பிரசவத்தில் அழகிய பெண் குழந்தை பிறந்தது. நடிகை ஐஸ்வர்யா ராய் கர்ப்பமாக உள்ளார் என்று என்றைக்கு அவரது மாமனார் அமிதாப் அறிவித்தாரோ அன்றில் இருந்து மீடியாக்களின் பார்வை ஐஸ்வர்யா மீது தான். நவம்பர் இரண்டாம் வாரத்தில் குழந்தை பிறக்கும் என்று மருத்துவர்கள் அறிவித்ததில் இருந்து ஐஸ்வர்யாவின் ரசிகர்களும், மீடியாக்களும் எப்பொழுது குழந்தை பிறக்கும், என்ன குழந்தை பிறக்கும் என்று ஆர்வம் கொண்டிருந்தனர். இந்நிலையில் ஐஸ்வர்யவை பிரசவத்திற்காக மும்பையில் உள்ள செவன் ஹில்ஸ் மருத்துவமனையில் சேர்த்தனர். இதையடுத்து அந்த மருத்துவமனைக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டது. கடந்த 11-11-11ம் திகதி குழந்தை பிறக்கும் என்று ஆளாளுக்கு பந்தயம் கட்டினர். அவ்வாறு நிகழவில்லை. இதையடுத்து அவர் பிரசவ விடுதிக்கு கொண்டு செல்லப்பட்டு 16ஆம் திகதி 10 மணி அடிக்க சில நிமிடங்களே இருக்கையில் அவருக்கு சுக பிரசவத்தில் அழகிய பெண் குழந்தை பிறந்தது என்று மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன. இது குறித்து அபிஷேக், அமிதாப் ஆகியோர் டுவிட்டரில் தங்கள் மகிழ்ச்சியை தெரிவித்துள்ளனர்.



# டை (Tie) பார்த்திருப்பீர்கள் இப்படியான டையை பார்த்திருக்கிறீர்களா?

ஆண்களில் சிலர் எப்போதும் தன்னை அனைவரும் பார்க்க வேண்டும் என்றே நினைப்பார்கள். அப்படியான ஆண்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு. இப்படியான டை அணிந்து போனால் உங்களைத்தான் அனைவரும் பார்ப்பார்கள். பிறகென்ன கிக்கு தானே.













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இது இரண்டு கிழமைக்கு முந்திய பழைய செய்தி. பரவலாக அடிபட்ட செய்தியாக இருந்த போதிலும் வாராந்த எழுத்துக்களில் கண்டுகொள்ளப்பட்டதாக தெரியவில்லை.இந்த பகுதியில் பிரசுரிக்கப்படும் கட்டுரை மாதிரியான ஒன்று வெளிவருகின்ற போது செக் வைக்கப்பட்டிருக்கும் இணையத்தளங்கள் மீதான தடை நீக்கப்பட்டிருக்கலாம். ஆனால் இதனையும் பதிவுசெய்து வைக்கவேண்டிய தேவையுண்டு."

### ஏன் இந்தப் பதிவு?

இலங்கை இன்று சர்வதேச ரீதியாக எதிர் கொள்ளும் அழுத்தங்களுக்கு இணையத்தளங்கள் வழியாக கசியவிடப்படும் தகவல்கள் பிரதான காரணம். உள்நாட்டளவில் இலங்கையரசிற்கு எதிரான தகவல்களை வெளியிடும் இணையத் தளங்கள் இதில் முதன்மையானவை. எனவே அவற்றுக்குச் செக்.

அடுத்து,புலிகள் போரியல் ரீதியாக தோற் கடிக்கப்பட்ட பின்னரும் அவர்களின் சர்வதேச ரீதியிலான வலைப்பின்னல் இப்போதும் பலமாய் இருக்கின்றதென்பது இலங்கை அடிக்கடி முன் வைக்கும் ஒரு பிரச்சாரம்.அந்த வலைப்பின்னலின் ஊக்கியாகச் செயற்படுபவை இந்த இணையத் தளங்கள் தான்.இவை எப்போதும் புலிகளுக்கு ஆதரவான செய்திகளை வெளியிட்டு வருவதுடன் அவர்களின் பிரச்சார தளங்களாகவும் செயற் பட்டு வருகின்றன. எனவே இதற்கும் ஒரு செக்.

இப்போதும் இலங்கையில் பார்க்கக்கூடியதாக இயங்கும் சில தமிழ் இணையத்தளங்கள் விடு தலைப்புலிகள் பற்றிய செய்திகளையும் நினைவுக ளையும் வெளியிட்டு வருபவையாகவுள்ளன. இம்முறை கூட மாவீரர் தின கொண்டாட்டங்கள் இணைய வழிகளில் களைகட்டியிருக்கின்றன. இவ்வாறான தொரு பின்னணியில் இயங்கியதால் தான் 2007 ஆம் ஆண்டில் தமிழ்நெற் இலங் கையரசால் தடைசெய்யப்பட்டது. மின்னலைக ளில் கூட விடுதலைப்புலிகளின் நினைப்பு இருக்ககூடாது என்பதற்காக மேலுமொரு செக்.

இப்படிப் பல காரணங்களுக்காக இணையங் கள் மீதான பதிவுகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின் றன.

# இணையங்களுக்கும் செக்



■ ஜெரா


### அருத்த அறிமுகம்

சர்வதேச ரீதியில் ஊடக சுதந்திரத்தைக் கவனிக் கும் அமைப்புக்கள் இலங்கையை அவ்வப்போது தமது கண்காணிப்பிற்குட்படுத்தும். அதன் போது இலங்கையில் நிலவும் ஊடக சுதந்திரம், ஊடகங் களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல் கள் என்பவற்றை அடிப்படையாக வைத்து புள்ளியிடல்கள் வழங்கப்படும். சிலவேளைகளில் தரவரிசைகளில் முன்னேறும்.பல வேளைகளில் வறுமையின் தர வரிசையில் முன்னணி வகிக்கும் சோமாலியா மட்டத்திற்கு இலங்கையும் கணிக் கப்படும்.அண்மைக் காலமாக இந்தத் தரக் கணிப் பீடுகள் பற்றிய செய்திகள் வரவில்லை.இது இலங் கைக்கு நல்ல வரப்பிரசாதமாகிவிட்டது.

இலங்கையில் இயங்கும் இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்கள் அனைத்தும் இக்காலப் பகுதிக்குள் உத்தியோக பூர்வமற்ற செய்தித் தணிக் கைக்குள் கொண்டு வரப்பட்டு விட்டன. ஊடக வியலாளர்களைக் கடத்துதல், பொல்லுகளால் இனந்தெரியாத நபர்களைக் கொண்டு தாக்குதல், பத்திரிகை அலுவலகங்களை தீக்கிரையாக்குதல், தொலைபேசி வழியிலான மிரட்டல்களை விடு தல், தனிப்பட்ட ரீதியிலான சந்திப்புக்களில் மிரட்டுதல்,பணத்தால் விளையாடுதல் என ஏகப்பட்ட நற்காரியங்களூடாக இலங்கையின் பெரும்பாலான ஊடகங்கள் பணியவைக் கப்பட்டு விட்டன.அவற்றையும் மீறிச் செய்தி களை வெளியிடும் ஊடகங்கள் எப்போதும் தீவிர கண்காணிப்பிலேயே இருக்கும்.

இவ்வாறு எல்லா உள்நாட்டு ஊடகங்க ளையும் தமது கட்டுக்குள் கொண்டுவந்ததும் இணையத்தளங்கள் மீதான வேட்டை ஆரம்பிக் கப்பட்டுள்ளது. அதன்படி இனிமேல் இலங்கை பற்றிய தகவல்களை வெளியிடும் உள்நாட்டு, வெளிநாட்டு இணையத்தளங்கள் அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டுள் ளது. அதனையும் மீறி செய்திகளை வெளியிடும் இணைத்தளங்கள் இலங்கையரசின் சட்ட நடவ டிக்கைகளுக்குள்ளாக நேரிடும் என எச்சரித்துள் ளது. இணையத்தளங்கள் இலங்கையரசையும் அரசியல்வாதிகளையும் தவறான முறையில் விமர்சிக்கின்றனவாம். அதனைத் தடுப்பதற்கா கவே இந்த நடவடிக்கை எனவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

இது உலகத்தில் எந்த நாட்டிலும் இல்லாத ஒரு நடைமுறை எனப் பலரும் கருத்து தெரிவித் திருக்கின்றனர். இது ஒரு முட்டாள்தனமான நடவடிக்கை என எதிர்க்கட்சிகள் கூறியுள்ளன. பதிவு செய்யப்படுவதற்காகத் தரப்படும் விண் ணப்பப்படிவத்தில் கேட்கப்படும் தகவல்கள் சுயாதீனமான ஊடகச் செயற்பாட்டிற்கு பெருந் தடையாக அமைகின்றது என பாதிப்புக்குள்ளாக் கப்படும் இணையப் பதிவாளர்கள் தெரிவித்திருக் கின்றனர். இவை எதையும் கவனத்தில் எடுக்காத இலங்கையரசு தனது காரியத்தில் மிகவும் விடாப் பிடியாக இருக்கின்றது. கட்டாயம் அனைவரும் பதிவு செய்தே ஆக வேண்டும்...



### ஆபத்தான இணையப்போக்கு

பிராந்திய ரீதியலான அடையாளங்களை மரபு களை முன்னிலைப்படுத்தும் இணையத்தளங்கள் என்ற வகையில் பதிவுகளை மேற்கொள்ளும் பதிவர்கள் இன்று பல்கிப் பெருகிவிட்டனர். ஒவ் வொரு கிராமத்தின் பெயரிலும் கலாசார மையங் களின் பெயரிலும் இணையத்தளங்கள் நாளாந்தம் அறிமுகமாகிக் கொண்டேயிருக்கின்றன. இலவச மாகக் கிடைக்கும் இணையப் பதிவிற்கான சலு கைகளைப் பயன்படுத்திக் கொண்டும் புலம் பெயர் நாடுகளில் இருந்து கொண்டும் இதனை இயக்குபவர்கள் தமது சாதனைகளை ஈட்டிக் கொள்கின்றனர். பல நேரங்களில் இந்த இணை யங்களில் வரும் செய்திகள் மற்றும் கட்டுரைகள் எவ்விதமான சமூகப் பொறுப்புமின்றி ஊடக தர்ம மின்றி தகவல்களை வெளியிடுகின்றன. தவறான தகவல்களுக்கும் சம்பந்தப்பட்டவர்களின் பெயர் களும் புகைப்படங்களும் பயன்படுத்தப்படுகின் றன. இதனால் குறித்த இணைய ஊடகம் நோக் கர்கள் மத்தியில் பெற்றுக் கொள்ளும் இலவச மான சுய விளம்பரத்தைத் தவிர வேறெதுவும் நடக்கப்போவதில்லை. சமூக மாற்றத்திலும் அதன் பிறழ்விலும் அக்கறையுள்ளவர்கள் போல காட்டிக் கொள்ள இந்த இணைய வழிகளைப் பயன்படுத்தி லாபமீட்டிக் கொள்கின்றனர்.இது நமக்கு தெரிந்த இணையங்களின் போக்கு மட்டுமல்ல.இலங்கையில் வாழும் அனைத்து இனங்களின் சாயலிலும் இவ் ஆபத்து மிகுந்த வலைத்தளங்கள் பொது மக்கள் பார்வையிலி ருக்கின்றன. உண்மையில் ஊடகங்களைக் கட்டுப் படுத்தும் அல்லது கவனிக்கும் அரச ஊடகத் துறை யும் இலங்கைப் படையின் புலனாய்வாளர்களும் இப்படியானவற்றையே தம் கவனத்திற்கு கொண்டுவருதல் வேண்டும். அதைவிடுத்து அர சின் மக்கள் விரோதப் போக்கை கண்டித்தும் விமர்சித்தும் எழுதும் இணையங்களைத் தடை செய்வதானது ஜனநாயகத்தினை புதைக்கும் செயலாகும்.

### இது சாத்தியமாகுமா?

இப்போதைக்கு என்னதான் பதிவுகளை மேற் கொண்டு தடைகளைக் கொண்டு வந்தாலும் இணையங்களை தடுப்பது மிகக் கடினம். அதுவும் அரசுக்கு எதிரான தகவல்களை வெளியிடும் வெளிநாட்டு இணையத்தளங்களை தடைசெய்வ தென் பது சாத்தியமற்ற ஒரு விடயம். விக்கிலீக் ஸையோ அல்லது சனல் 4வையோ அமெரிக்கா வினால் கூட தடைசெய்ய முடியாது. கடந்த ஆண்டுகளில் விக்கிலீக்ஸ் மீது தொடர்ச்சியான சைபர் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்ட போதி லும் ஒரு சில வாரங்களில் அது மீண்டும் செயற் படத் தொடங்கியது. ஜனநாயகம் பேசும் நாடொன்றில் யாரையும் புண்படுத்தாத வகையில் செய்திகளை வெளியிட முடியும். இதுவே ஊடக அறமும் ஆகும். அதற்கென்று அதிகாரத் துஸ்பிர யோகங்களை விமர்சிப்பதையெல்லாம் கணக்கி லெடுத்து அதிகாரத்திலிருப்பவர்கள் அதனை தடைசெய்ய முடியாது.அது சாத்தியமற்றது மாகும். இலங்கையிலும் இப்போது இந்நிலை தான். அப்படி சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப் படுமாயின் இப்போது தடைசெய்யப்பட்டிருக் கும் 3 அரசியல் சார்ந்த இணையத்தளங் களைவிட மோசமான பாலியல் எண்ணங்களை வெளியிடும் இணையங்களை இலங்கையில் பார்வையிடலாம். உண்மையில் மக்கள் மீது கரிச னையுள்ள அரசெனில் அதனையே தடைசெய்தி ருக்க வேண்டும்.



**நாங்கள் தடை செய்யப்பட்டவர்கள்**

- www.lankaenews.com
- www.srilankamirror.com
- www.srlankaguardian.com
- www.paparacigossip9.com
- www.lankawaynews.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடவுள் எங்கே இருக்கிறார்?


■ நெடுந்தீவு மகேஷ்



கனகராஜா எனது பள்ளி நண்பன். வகுப்பறையில் அவனது கற்றல் திறன் அபாரமானது. பாடப் புத்தகங்களுக்கும் மேலாகப் பத்திரிகைகள் வாசிப்பான். அவனிடத்தில் சிறப்பாக இடதுசாரி சிந்தனை வியாபித்திருந்தது. அன்றைய நாள்களில் பிரசித்தி பெற்றிருந்த அரசியல் கட்சிகளான சமசமாசக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி போன்றவற்றின் வர்க்கப் போராட்ட சிந்தனை அவனிடம் இருந்தது. அத்தோடு கடவுள் இல்லையென்று வாதிடவும் அவன் தயங்குவதில்லை.

ஒருநாள் கடவுள் இல்லையென்ற வாதம் அவனிடத்தில் மேலோங்கியபோது அங்கே வந்த எங்கள் தமிழ் ஆசிரியர் செல்லரத்தினம் அவர்கள் அவனது வாதத்திற்கு எதிர்வாதமாக ஆறுமுகநாவலர் சொன்ன கதையொன்றை எமக்குச் சொன்னார்.

இரண்டு சிறுவர்கள் தமக்கிடையே கடவுள் இருக்கிறாரா? இல்லையா? என்ற வாதத்தில் இறங்கினார்கள். அவர்களில் ஒருவன் கடவுள் இல்லையென்று வாதிட்டான். "கடவுள் எங்கே இருக்கிறார் காட்டு?" என அவன் அடுத்தவனைத் தொல்லை செய்தான். அதனால் அவனால் மறுமொழி பதில் சொல்ல இயலவில்லை. அப்பொழுது அந்த வீதியால் வந்த ஒரு பெரியவரிடத்தில் இருவருமே தமது வாதத்தை எடுத்துச் சொன்னார்கள். உடனே அந்தப் பெரியவரோ கடவுள் இல்லையென்று வாதிட்ட சிறுவனைப் பார்த்து தம்பி "கடவுள் இல்லையென்று சொல்லுகிறாய். கடவுள் எங்கே இருக்கிறார் காட்டு என்றும் கேட்கிறாய். கடவுள் இருக்கும் இடத்தைக் காட்டுவதற்கு முன்னர் நீ இந்த உலகத்தில் கடவுள் இல்லாத இடமொன்றை எனக்குக் காட்டு?" என்றார். அதைக்கேட்ட சிறுவன் ஆச்சரியத்தோடு அவனைச் சூழ்ந்திருந்த இயற்கையைப் பார்த்தான். இத்தனைக்கும் மேலாக நிலவும் இயக்கத்தைச் சிந்தித்தான். இத்தனைக்கும் மேலான ஒரு சக்தி இருப்பதாக அவனுக்குத் தோன்றியது. அவனால் கடவுள் இல்லாத இடத்தைக் காண்பிக்க இயலவில்லை. அதனை அவதானித்த பெரியவர் "இவ்வாறுதான் கடவுள் இருக்கிறார். என்ற வாதத்திற்குப் பொருத்தமாகக் கடவுள் இருக்கும் ஓர் இடத்தைக் குறிப்பிட்டுக் காட்ட இயலாது" என்றார். ஆனால் கடவுள் எங்கும் இருக்கிறார்." என்றார் அந்தப் பெரியவர்.



அந்தக் கதையைக் கேட்ட பின்னரும் கனகராஜாவின் அதீதமான நம்பிக்கை மாற்றமாகத் தெரியவில்லை. நான் அதன் பின்னர் அவனோடு அது பற்றிப் பேசிப் பொழுதை வீணாக்குவதிலும் இறங்குவதில்லை.

நாம் பல காலங்கள் கடந்தோம். கைக்கு பல நிலைகளுக்கும் இடம் மாறின. படிப்பு, குடும்பம் என வாழ்வு விரிக்க பெரிது நாம் எங்கேயோ அவன் எங்கேயோ எனக் கலைந்து சென்றோம்.

இவ்வாறு கடந்த பல நாட்களின் பின்னர் ஒருநாள் கனகராஜாவை நல்லூர் கந்தசாமி கோவிலின் அருகில் பார்த்தேன். தலை மீது கைகளைக் கூப்பிக் கண்களை மூடியவாறு கோவிலின் முன்னே கும்பிட்ட வண்ணம் நின்றிருந்தான். திடீரென்று நெடுந்தொண்டி கிடையாய் விழுந்தும் கும்பிட்டான். எனக்கு ஒரே ஆச்சரியம். கடவுள் இல்லையென்று பள்ளிக் காலத்தில் வாதிட்டவன் இன்று இவ்வாறு பக்திமானாக. அவனைக் கண்டபோது அவனுடன் கதைத்தேன் அந்த பக்தி நிலை பற்றியும் விசாரித்தேன்.

பள்ளிக் காலத்து வாழ்க்கையில் நாம் பெற்றோருடன் மகிழ்ச்சியாக இருந்தோம். துன்பம் துயரங்களை மறந்து அவர்களின் அன்பின் அரவணைப்பில் வாழ்க்கையைக் கடத்தினோம். அப்பொழுது கடவுளை எம்முடனிருந்து எம்மை வழி நடத்தியவர்கள் எமது பெற்றோர் என்பதை நாம் கண்டு கொள்ளவில்லை. ஆனால் பாக்கியமாக ஒரு வாழ்க்கையும் குடும்பம் மனைவி பிள்ளைகள் என்றும் வந்தபோதுதான் கடவுளை வெளியே தேடும் அவசியம் எமக்கு ஏற்படுகின்றது. கடவுளின் காட்சியை இப்பொழுது வெளியிலே தேடினேன், தேடுகின்றேன் என்றான் கனகராஜா.

எனது சிந்தனைக்கும் மேலாகக் கடவுள் பற்றிய அவனது அனுபவம் தெளிவானதாக இருப்பதைக் கண்டேன். வாழ்வின் காலவோட்டத்தில் பருவங்கள் மாறுகின்றன. காட்சிகள் மாறுகின்றன. அவ்வாறே மனித நடத்தைகளிலும் மாற்றங்கள் நிகழ்வதெல்லாம் அனுபவத்தின் மாற்றம் தானே.

எது எது எப்படி எப்படி நடக்கவேண்டுமோ! அது அது அப்படி அப்படி அந்தந்தக் காலத்தில் நடக்கத்தானே செய்யும். அவனின் அனுபவம் பேசியது. நான் மௌனமானேன்.

# அம்பிகை அருளாலே...

■ தர்மினி பார்த்திபன்

பக்திப் பாடல்கள் அநேகமாய் பெற்றவை. அந்த வரிசையில் சிறப்பான இசையில் அதுமட்டுமல்ல ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் மீது பாடப்பெற்ற அருட் பாடல்களின் இறுவட்டுத் தொகுப்பு வெளிவந்துள்ளது. இனிமையுடன் பக்திப் பயன் விளைக்கும் பத்துப் பாடல்களும் அம்பிகை அருளாலே... என்ற இந்த இறுவட்டில் இடம் பெற்றுள்ளன. இசை கலந்த தமிழிலே எழுதப்பட்டுள்ள பாடல்கள் யாவும் அம்பிகையின் அருள் வேண்டிப் பாடுவதற்குப் பொருத்தமாகச் சுவை அமைந்திருக்கின்றன. பாடல்களை ... செய்துள்ளவர் ... ... பாடல்களை அழகுற ... மதுசகம் ... உமாசதீஸ் ஆகியோரால் எழுதப்பட்டுள்ள பாடல்களும் இறுவட்டில் இடம் பெற்றுள்ளன. அம்பிகை அருளைப் பாடும் இசை பக்தி உணர்வூட்டிப் பரவசப்படுத்துகிறது. உமாசதீஸ் அவர்களின் நெறியாள்கையின் ஊடாக ... ... ஆகியோரின் மேற்பார்வையில் இந்த இறுவட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளது.

பாடல்களைப் பல புகழ் தமிழகத்தின் பிரபல்யமிக்க பாடகர்களின் இசைக்குரல் ஆறுமலை புவனேஸ்வரி அம்மாளின் திருவடியைக் காண அம் அருள்நிலை எமக்களிக்கவும் பக்திப் பயன் சொரிய இசைக்கின்றது.

... நித்யஸ்ரீ, ... ... என்ற தமிழகத்து இசை மேதைகளின் குரலில் பாடல்களைக் கேட்கும்தோறும் உள்ளம் இறையருளை நாடி பாடி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மாளின் திருவடியைத் தேடிச் செல்லுகிறது. மிகவும் அருமையான பக்திப் பாடல்கள் கொண்ட இந்த இறுவட்டிலிருந்து இசை கேட்டு இன்புற அம்மாளின் பக்தர்கள் ஒவ்வொருவரின் வீட்டிலும் இருக்க வேண்டிய இறுவட்டு இதுவாகும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போரின்றி சமாதானமில்லை

இலங்கை இனப்பிரச்சினை மற்றும் தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடர்பிலான கடந்த கால, நிகழ்கால சர்வதேச நிலைப்பாடுகள் அண்மைய வாரங்களில் வெளியாகியிருக்கின்றன. தமிழ் தேசியக் கூட்டமைப்பை அமெரிக்கா வரை அழைத்துச் சென்று மூடிய அறைகளுக்குள் பேசியவைகள் சர்வதேச சமூகத்தின் நிகழ்கால நிலைப்பாடுகள் தொடர்பானவையாக இருக்கலாம் என தமிழ் மக்கள் நம்புகின்றனர். தமிழ் மக்களின் அதிக வாக்குகளைப் பெற்று அவர்களின் அரசியலைப் பேசுகின்ற ஒரே அரசியல் கட்சி என்ற வகையில் அவர்களோடு சர்வதேச சமூகம் வேறெதுவும் பேசுவதற்குச் சந்தர்ப்பங்கள் குறைவு. இதனால் தான் அந்த மூடிய அறைப் பேச்சுவார்த்தைகள் பற்றிய இவ்வாறானதொரு முடிவிற்கு வரவேண்டியுள்ளது. வெளிநாட்டு சந்திப்புக்கள் முடிந்த பிறகு அங்கே என்ன விடயங்கள் பேசப்பட்டன என்பது தொடர்பாக தமிழ் மக்களுக்கு தெளிவுபடுத்தப்படும் என்று ஏற்கனவே தமிழ் தேசியக் கூட்டமைப்பினரால் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை எந்தவிதமான தெளிவுபடுத்தல்களும் உத்தியோக பூர்வமாக வெளியிடப்பட்டமைக்குச் சான்றுகள் இல்லை. இந் நிலையிலும் அவ்வாறானதொரு முடிவிற்கு வரவேண்டியுள்ளது.

அதற்கு அடுத்ததாக தென்னாசிய பிராந்தியத்தில் பல தசாப்தங்களாக நீடித்து வந்திருக்கின்ற தமிழர் பிரச்சினையை சர்வதேச சமூகம் எவ்வாறானதொரு மன நிலையோடு கடந்த காலங்களில் அணுகியது என்ற உண்மையும் முதன்முறையாகப் பொது வெளியொன்றில் வைத்து பரகசியப்படுத்தப்பட்டுள்ளது. இது ஏன்? இந்தச் சமாதான மீளாய்வு அறிக்கையினும் உண்மையுள்ளதா? இதிலும் சர்வதேச சமூகம் தம் நலன்களைத் துறந்து இதய சுத்தியோடு பங்குகொண்டுள்ளனவா?

**தம்பி**



## தடுமாறி விழுந்த தடம்

1999,2000,2001 ஆண்டுகள் தென்னாசியாவின் படையியல் ரீதியிலான சூறாவளிக்காலம். அந்தப் புயற் பொழுதை தொடக்கி வைத்தவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகள். இந்த வருடங்களில் அவர்கள் நிகழ்த்திய மின்னல் தாக்குதல்களின் ஊடாக இந்தப் பிராந்தியத்தைக் கந்தகப் பிரகாசங்களுக்கு உட்படுத்தினர். இந்தப் பெரும் வெடி மருந்துப் பிரகாசங்களுக்குள் தென்னாசியாவின் கேந்திரங்களாக இருக்கும் இலங்கையும் இந்தியாவும் மறைந்தே போயின. அவற்றை நோக்கிய துரித மீட்டலொன்று அப்போதைய நிலையில் தேவைப்பட்டது. இராணுவ ரீதியில் மிக மோசமாக நலிவடைந்திருந்த இலங்கைக்கும் உடனடி உதவியின் அவசியமும் உணரப்பட்டது. எப்போதும் ஐரோப்பாவில் சமாதான தேவதையாகத் தன்னை அலங்காரப்படுத்திக் கொள்ளும் நோர்வேயும் இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுத் தயார் ஒப்பந்தங்களோடு கறுப்பு வெள்ளை மனிதர்கள் களமிறக்கப்பட்டனர். அவர்களுள் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகள் முக்கிய சமாதான பொறுப்புக்களை எடுத்துக் கொண்டனர். அந்த வெள்ளை அதிகாரிகளிடம், தமக்குக் கட்டுப்படுகின்ற கிளிநொச்சியை உருவாக்கி விட்டு வெளியேறுதல் என்ற நோக்கம் பிரதானமாக இருந்தது. ஆனால் சமாதானத்தை வேண்டி நின்ற தென்னாசிய கேந்திரங்களுக்கு கிளிநொச்சியை எப்படியாவது அழித்துத் தமது நேரடி இராணுவ ஆதிக்கத்திற்குட்படுத்துவது என்ற இரட்டுத் திட்டம் மறைந்திருந்தது. இரு நிலைப்பட்டவர்களும் கிளிநொச்சிக் களத்தில் பணியாற்றத் தொடங்கினர். யார் மனதிலும் உண்மையிருக்கவில்லை. வெள்ளை நிற வஞ்சக சிரிப்புக்கள் நோர்வேயிலும் ஒஸ்லோவிலும் நியூயோர்க்கிலும் விரிக்கப்பட்டன. கிளிநொச்சி வலையில் விழுந்தது. மரணத்தை நோக்கிய பயணத்திலும் அந்தப் புரட்சி நகரம் கண்டது அந்தவகை மாய வலைகள் போராளிகளின் கண்களிலிருந்து மறைந்திருந்திருந்தன. சமாதான இழுத்தடிப்புக்கள் தம்மைப் பலியெடுத்துக் கொண்டிருப்பதைப் புரிந்த கிளிநொச்சி உடனடிச் சுதாகரிப்பொன்றுக்குள் வாழ்முடியாமல் காலம் செல்லப்பட்டிருந்தது. கடைசியில் தன் ஒற்றை உயிரையாவது காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்ற காரணத்திற்காக கிளிநொச்சி, பழைய குருதி கறவை திறவடி நிலைக்கு வந்தது. அவசரமாய்த் திறக்கப்பட்ட போர்க்கதவுகள் 2009 ஆம் ஆண்டோடு இறுகப் பூட்டப்பட்டன. கிளிநொச்சியும் பாழ்நகராகியது. இந்தியாவும் சீனாவும் இலங்கையும் எட்டின அற்ற அந் நகரை ஆக்கிரமித்துக் கொண்டன. அவைகளின் வெற்றியிலாலும், தமது திட்டத் தோல்வியினாலும் கொதிப்படைந்த வெள்ளை மனிதர்கள் என்றைக்காவது பழிவாங்குவோம் என்ற பத்திரங்களுடன் வெளியேறினர். அவர்களின் பழிவாங்கல்களுக்கான சந்தர்ப்பங்கள் வேகமாக வந்தன. போர்க்குற்றம், மனித உரிமை மீறல்கள், இனப்பிரச்சினைக்குச் சரியான தீர்வின்மை, இலங்கையரசு தமிழர் பிரச்சினையைக் கருத்தில் எடுக்கவில்லை என்று வாறு வளர்ந்தன எதிர்க்கதைகள்.

## புலிகளை ஒழிப்பதிலேயே குறியாக இருந்தது இந்தியா..

அப்படி வளர்ந்த கதைகளில் ஒன்றுதான் நோர்வே இலங்கையில் மேற்கொண்ட சமாதான நடவடிக்கைகளின் மீளாய்வு அறிக்கை. கடந்த வாரத்தின் பிரதான தலைப்புச் செய்தியாக இது தான் இருந்தது. அந்தச் செய்திகளிலெல்லாம் சமாதான நடவடிக்கைகளில் காட்டப்படாத உண்மை ஊறிக்கிடந்தது. அதில் முதன்மை பெற்றிருந்த உண்மை, இந்த சமாதான நடவடிக்கைகளை இந்திய அரசு எப்போதும் நயவஞ்சகத்துடனேயே அணுகியது என்ற விடயம். தனக்குத் தேவைப்பட்டது இலங்கையும் சிங்கள மக்களுமே தவிர தமிழ் மக்கள் அல்ல என்ற மனோநிலையிலிருக்கும் இந்தியா விடுதலைப் புலிகள் அந்நாட்டை கைவிட்டதிலிருந்து அவர்களை பூண்டோடு அழிக்கும் சந்தர்ப்பத்திற்காகக் காத்திருந்தது. தமிழ் மக்களின் தார்மீக விடுதலையின் உண்மைத் தன்மை பலமானதாக இருந்ததால் அது போரியல் ரீதியாக சாத்தியப்படாமல் போய்விட்டது. எனவே இந்தியாவுக்குக் கிடைத்ததெல்லாம் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கையரசுக்கும் இடையிலான இந்த சமாதான காலப்பகுதிதான். புலிகளை இலங்கையரசு முற்றாக அழிப்பதற்கான முழு ஆதரவையும் வழங்கியது. ரகசியமான ஆயுத வழங்கல்கள் உட்பட புலிகளின் நடமாட்டம் தொடர்பான முழுப் புலனாய்வுத் தகவல்களையும் இந்தியா வழங்கித் தமிழர்களை கொன்றொழித்தது. மேற்கு நாடுகளின் சமாதான நடவடிக்கைகளைக் கூட கட்டுப் படுத்தியே வந்துள்ளது. விடுதலைப் புலிகளின் சர்வதேச விவகாரங்களை இராஜதந்திர நோக்கோடு அணுகி வந்த அன்ரன் பாலசிங்கத்தைக் கூட அவர்களிடம் இருந்து பிரிப்பதில் காரியமாற்றிய இந்தியா சமாதானநடவடிக்கைகளில் அந்த மா மேதையின் பங்களிப்பைத் தவிர்ப்பதற்கான கைங்கரியங்களையும் மேற்கொண்டு வந்துள்ளது. இவ்வாறு இந்தியா ஒருபோதும் தமிழ் மக்களுக்கு சார்பானதாகவோ அல்லது விடுதலைப்புலிகளுக்கு சார்பானதாகவோ எந்த முடிவுகளையும் எடுக்காது அவர்களுக்காக செயற்படக் கூடியவர்களையும் கட்டுப்படுத்தியே வந்துள்ளது என்ற யதார்த்தம் அந்த அறிக்கைக் கதையில் தெளிவாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## சர்வதேசம் விடுதலைப் புலிகளை தீவிரவாதிகளெனத் தவறாக எடையிட்டது.

உலகில் தேசிய இனங்களின் விடுதலைக்காகப் போராடிவரும் போராளிக் குழுக்கள் தொடர்பாக இருண்டவன் கல்லறையில் மறைந்ததெல்லாம் பேய் என்ற நிலைப்பாட்டைத்தான் ஒஸாமா பின்லேடன் கொல்லப்படும் வரை அமெரிக்கா வைத்திருந்தது. விடுதலைப் புலிகளையும் அவ்வாறானதொரு தவறான எடுகோள்கள் அடிப்படையில், 2001 ஆம் ஆண்டு தீவிரவாத இயக்கமாகத் தடை செய்தது. ஆயினும் சர்வதேச சமூகத்திலுறும் தனது இருப்பின் மீது கொண்ட நலன்களாலும் அவர்களுக்கு ஜனநாயக முலாம் பூசி முற்படுத்தி தோற்றது. அந்தத் தோல்விகள் புலிகளைத் தொடர்ந்தும் தீவிரவாதிகள் என்ற கணிப்பில் வைத்திருக்க வேண்டிய நிலையை ஏற்படுத்தியிருக்கலாம். ஆனால் தென்னாசியப் பிராந்திய அரசியலைக் கையாள்வதற்கு இந்நிலைப்பாடு தவறானது என்ற எண்ணம் கொஞ்சமும் உணரப்படவில்லையென்பது வெளிவந்த உண்மைகளில் ஒன்று. இது ஒரு புறமிருக்க இப்போது மீண்டும் விடுதலைப் புலிகளின் பிரவேசம் நிகழ்ந்தால், அதனை அமெரிக்கா விடுதலைப் போராட்ட இயக்கமாக அங்கீகரிக்கும் என்ற ஒரு செய்தியும் சொல்லப்பட்டிருக்கின்றது. எல்லாம் [illegible] [illegible] தானே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் ஒளி

20, நவம்பர் - 26 நவம்பர், 2011

85, ஜேதுக மல்லிகாராச்சி மாவத்தை,
கொழும்பு-14. தொலைபேசி: 0115738005
பக்ஸ்: 0115817944 -5
E-mail: editorial@sudaroli.com


## நல்லவர்கள் களமிறங்க வேண்டும்

யாழ்ப்பாண சமூகத்தில் நல்லவர்கள் பலர் இருக்கின்றனர். இவர்கள் நடந்தால் புல்லும் சாகாது என்பார்கள். இங்கு படித்தவர்கள், புத்திஜீவிகள் ஏராளமாக இருக்கின்றனர். ஆனால் இவர்களில் தாம் சார்ந்த சமூகத்திற்கான செயற்பாட்டாளர்கள் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றனர்.

இவ்வாறான ஓர் கருத்து சிலதினங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நூலறிமுக நிகழ்வு ஒன்றின் போது வெளிப்படுத்தப்பட்டது. இரு மருத்துவர்களே தங்களின் கருத்துரைகளின் போது இவ்வாறு அடித்துக்கூறினார். இவ்வாறான கருத்தை வெளிப்படையாகக் கூறக்கூடிய தகுதி பெற்றவர்கள் இம்மருத்துவர்கள் என்பதும், இவர்கள் மருத்துவத் துறையில் தீவிரமாக கடமையாற்றி வருவதோடு மட்டுமல்லாமல் தாம் சார்ந்த இனம், சமூகம் தொடர்பான அக்கறையுடன் களத்திலிறங்கி செயலாற்றி வருபவர்கள் என்பதும் சுட்டிக்காட்டத்தக்கது. இன்று தமிழ்ப் பிரதேசங்களில் நடைபெறும் குற்றச்செயல்கள், பிறழ்வுகள், சீரழிவுகள் தொடர்பான விடயங்கள் குறித்து குறிப்பிடும் போதே இம்மருத்துவர்களால் மேற் குறித்தக் கருத்து வெளிப்படுத்தப்பட்டது.

இங்கு கல்வியாளர்கள், புத்திஜீவிகள் எல்லோரும் தங்கள் நலன் சார்ந்து மட்டும் சிந்திக்கின்ற, இயங்குகின்ற நிலைமையினையே தற்போது அவதானிக்க முடிகின்றது. ஆனால், சமூகம் குறித்த அக்கறையற்ற கல்வியும், புத்திஜீவித்தனமும் பயனற்றதாகும்.

போர் முடிவுற்றதன் பின்னால் தமிழ் பிரதேசங்களில் பல்வேறு மாற்றங்கள், பாதிப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ் மக்களின் குடிப்பரம்பலைக் குலைக்கும் குடியேற்றங்கள் தொடக்கம் சமூகச்சீரழிவு வரை இப்பாதிப்புகளைக் குறிப்பிடலாம். அரசியல் விடயங்கள் தொடர்பாக தமிழ் அரசியல்வாதிகளும், தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டு வருகின்றனர். பத்திரிகையாளர்கள் சிலர் இவை குறித்து எழுதி வருகின்றனர்.

இங்கு தமிழ் அரசியல்வாதிகள் என்று குறிப்பிடும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையே குறிப்பிட முடிகின்றது. இவர்களும் நாடாளுமன்றம் மற்றும் வெளிநாடுகளிலும் குரலெழுப்பி வருகின்றனரே தவிர பாதிக்கப்பட்ட மக்களைத் திரட்டிப் போராட்டங்களை நடத்தும் நிலையில் இல்லை. தமிழ் மக்கள் பாதிக்கப்படுகின்றபோது, அவர்களின் வாழ்வுரிமை பறிக்கப்படுகின்றபோது அந்தந்தப் பிரதேசங்களில் அம்மக்களைத் திரட்டிப் போராட்டங்களை மேற்கொள்வதன் மூலம் பாதிக்கப்பட்ட மக்களின் பிரச்சினைகளை வெளிப்படுத்துவதில் மேலும் ஒரு பரிமாணத்தை எட்ட முடியும்.

அடுத்த விடயம் - தமிழ் சமூகத்திற்குள் தற்போது ஊடுருவியுள்ள சீரழிவுகள். இதனால் பெண்கள், சிறுவர்கள் அதிகம் பாதிப்படைந்து வருகின்றனர். இங்கு சிறுவர், பெண்கள் நலன் பேணும் அமைப்புகள் இயங்கி வருகின்றன. அவை தங்களின் இருப்பை மட்டும் வெளிப்படுத்துவதற்கான கூட்டங்களை நடத்திக் கொண்டும் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டும் மட்டுமே உள்ளதை அவதானிக்க முடிகின்றது. களத்தில் இறங்கிச் செயற்படுகின்ற நிலை இல்லை. பல தொண்டு அமைப்புக்களும் இவற்றைக் கண்டும் காணாமலேயே இருக்கின்றன. இந்நிலையில் எமது பல்கலைக்கழகம் கூட ஒரு 'பெரிய பள்ளிக்கூடம்' என்கிற வகையில் மட்டுமே செயற்பட்டு வருகின்றமை கவலைக்குரியது.

புத்திஜீவிகள் சமூகத்திலிருந்து எவ்வகையிலேனும் பிரிந்து நின்று இயங்க முடியாது. ஒரு இனம் சமூகம் சீரழிக்கப்படுகின்றபோது அதன் பாதிப்பு அவர்களையும் அவர்களின் சந்ததியினரையும் தொடரவே செய்யும்.

எனவே 'சோலி வேணாம் சும்மா இருப்பம்' என்ற நிலையில் வாழும் நல்லவர்களான கற்றோர் புத்திஜீவிகள் தமிழ் சமூகத்தில் இன்று ஏற்பட்டுள்ள மோசமான பாதிப்புக்கள் குறித்து தீவிரமாகச் சிந்திக்க வேண்டும். இதற்காக களத்தில் இறங்கிச் செயற்பட முன்வரவேண்டும்.



# தீமையின் திசைவழியே...

■ ஹரிஸ்

தமிழ் மாணவர்களின் ஒழுக்கமும் கட்டுப்பாடும் இன்று இருள் சூழ்ந்த திசையொன்றில் பயணமாகிக்கொண்டிருக்கிறது. எதையும் அறிய வேண்டும், பரீட்சித்துப் பார்க்க வேண்டும் என்கிற எண்ணம் உளவியல் ரீதியாக இளம் வயதினருக்கு ஏற்படுவது இயல்பானதே. ஆனால், அவற்றின் சாதக பாதக தன்மைகளை இனம் காண்பது அவசியம். நல்ல புறச்சூழமைவுகள் சில வேளைகளில் இளம் வயதினரை நல்ல வழிகளில் செல்லத் தூண்டும். தீய புறச்சூழல் அவர்களை இருள் சூழ்ந்த பயங்கரமான, கற்கள் முட்கள் நிறைந்த எதிர்காலம் நோக்கி இழுத்துச் சென்று தள்ளி விடுகின்றது. இளவயது நண்பர் குழாமின் ஒன்று கூடல்கள் இவர்களின் செயற்பாடுகளைத் தீர்மானிக்கும் முக்கியமான ஒன்றாக அமைந்துள்ளது. நண்பர்களின் கூட்டம் இழுத்துச் செல்லும் வழியில் பயணிக்கும் நிலையிலேயே வயதும் இளமையும் அமைந்து விடுகின்றது. நல்ல நட்புச் சேர்க்கையுடைய இளைஞர்கள் நாடே போற்றும் அறிவாளிகள் பட்டியலிலும், தீய தொடர்பு உள்ளவர்கள் சமூகத்தால் ஒதுக்கப்பட்டு புறந்தள்ளப் பட்டு குற்றவாளிகள் பட்டியலிலும் இணைந்து விடுகின்றனர். கடந்த காலத்தில் தமிழ் பிரதேசங்களில் இடம் பெற்ற சுற்றிவளைப்புக்கள், கைது, காணாமல்போதல், அடையாள அட்டைகள் பறிப்பு, எங்கும் எதுவும் நடக்கலாம் என்ற சூழ்நிலை தமிழ் இளைஞர் சமூகத்தை கட்டுக்கோப்புக்குள் வைத்திருந்தது. இதனால் அவர்களின் அன்றாட செயற்பாடுகள் பாடசாலை, தனியார் கல்வி நிலையம், வீடு என்ற ஒரு புள்ளியில் மட்டுப் படுத்தி வைக்கப்பட்டிருந்தது. காலையில் பாட சாலை சென்று அதன் பின் தனியார் கல்வி நிலையம் சென்ற பிள்ளை 6 மணிக்குள் வீடு திரும்பா விட்டால் பெற்றோர்கள் அடையும் அச்சம் வார்த்தையில் சொல்ல முடியாதவை. இவ்வாறு வயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டு பெற்றோர்கள் பிள்ளைகளின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். பிள்ளைகளும் பெற்றோரது கண்காணிப்பின் மத்தியிலேயே எப்போதும் இருக்கும் நிலை இருந்தது.

ஆனால் இன்றைய சூழ்நிலை உலக்கை தேய்ந்து உளிப்பிடியான கதையாகவே உள்ளது. போர் அகன்ற பின்னர் பாதைகள் திறக்கப்பட்டு தகவல் தொடர்பாடல், தொழில்நுட்ப சாதனங்களின் பாவனை என்பன கட்டுமீறிய வகையில் அமைந்துள்ளன. வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையிலான உறவுப்பாலம் போர் முடிவின் பின்னர் நெருக்கமடைந்துள்ளது. இதனால் தென்னிலங்கைக்கும் தமிழ் பிரதேசங்களுக்கும் இடையிலான தொடர்புகள் இன்னும் அதிகரித்துள்ளன. இவை தமிழ் மக்களில் பொருளாதாரம், பண்பாடு, கல்வி எல்லாவற்றிலும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. நன்மைகளை விடவும் தீமைகளே அதிகம் இப்பாதையூடாக உள்நுழைந்து பயணித்துக் கொண்டிருக்கின்றன. அந்த வகையில் தமிழ் மக்களின் உயர் பண்பாட்டு விழுமியத்தின் இருப்பிடமாக விளங்கும் யாழ் மண்ணில் மாணவர்கள் ஹெரோயின் போதைப் பொருள் பயன்பாடு பற்றிய செய்தி அனைவரிற்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

யாழில் பிரபலமான பாடசாலை மாணவர்கள் அதுவும் பிரபலமானவர்களின் பிள்ளைகள் ஹெரோயின் பாவனையில் ஈடுபட்டமை மிகவும் அதிர்ச்சி தரும் செய்தியாகவே அண்மைய சில நாட்களாக அமைந்துள்ளது. இச்சம்பவத்தில் ஈடு பட்ட யாழ் நகரப்பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்பட்ட பின் விடுவிக்கப்பட்டனர் என யாழ் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சமன் சிகேரா தெரிவித்திருக்கின்றார். ஹெரோயின், அபின், கஞ்சா போன்ற போதைப்பொருள்கள் குறிப்பாக யாழ் நகர பாடசாலைகளில் கற்கும் சாதாரண உயர்தர வகுப்பு மாணவர்களுக்கு விநியோகிக் [illegible] பட்ட மாணவர் ஒருவர் 14 வயதுடையவர் என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது. இச்செய்திகள் குடாநாட்டின் எதிர்காலச் சந்ததி சென்று கொண்டிருக்கும் மோசமான பாதையை அப்பட்டமாக படம் பிடித்துக் காட்டுகின்றது. இதேவேளை மாணவர்கள் பலர் போதைப் பொருள்களுடன் தொடர்புடையவர்களாக இருப்பதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் நாட்டின் பல பகுதிகளில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்திருக்கிறார். இதேவேளை, மன்னாரிலும் போதைப்பொருள் பாவனை அதிகரித்து காணப்படுவதாகவும் இதுவரை 10பேர் மன்னாரில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரும் பொலிஸ் பதில் ஊடகப் பேச்சாளருமாகிய மெஸ்ஸி புறக்டர் தெரிவித்திருக்கிறார். இதேவேளை குடாநாட்டின் உள்ளூர் பிரதேசங்களில் மதுபானம், சிகரெட் பாவனையில் மாணவர்கள் பலர் ஈடுபடுவது கண்டறியப்பட்டுள்ளது. இது நாட்டின் கல்வித் துறையின் எதிர்காலப் போக்கை சூனியமாக்கும் நிலைக்கு இட்டுச் செல்லும் என அஞ்சப்படுகின்றது. இந்த நிலை தொடருமாயின் தமிழ் சமுதாயத்தின் கல்விப் பெறுமானம் வீழ்ச்சியடைவதோடு மாணவர்களின் ஒழுக்கப்பெறுமானமும் அதல பாதாளத்திற்குள் வீழ்வது தவிர்க்க முடியாததாகிவிடும்.

எனவே நாட்டின் எதிர்காலச் சிற்பிகளான மாணவ சமுதாயம் விழிப்புடனும் பொறுப்புடனும் நடந்து கொள்ளவேண்டும். தமிழ் மக்களின் பெருமையையும் பண்பாட்டையும் கட்டிக்காக்க வேண்டும். பெற்றோர்களும் ஆசிரியர்களும் இந்த விடயத்தில் பூரண கவனமும் அக்கறையும் எடுத்து மாணவர்களைக் கண்காணிப்பதனூடாக அவர்கள் சரியான திசைவழியில் செல்ல உதவமுடியும். இந்தப் பொறுப்பை தட்டிக்கழித்தால் தமிழ் மக்கள் தமது இனத்தின் சுயகௌரவத்தையும் தமிழ் கல்வித் துறையின் எழுச்சியையும் இழப்பது தவிர்க்க முடியாகி விடும். ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திசை திருப்பப்படும் தேசிய மயம்

■ சந்திரசேகர ஆசாத்

அண்மையில் நட்டத்தில் இயங்கும் மற்றும், குறைந்த வருமானம் ஈட்டும் நிறுவனங்களை அரசுடைமையாக்கும் சட்டம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது பால்வேறு தரப்பினரா லும் எதிர்ப்புக் குரல்கள் எழுப்பப்பட்டன. முத லாளித்துவ சக்திகளின் பிரதிநிதிகள் எனக்கருதப் படும் ஐக்கிய தேசியக் கட்சியினர் இச் சட்ட மூலத்திற்கு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது மட்டுமன்றி இது தொடர்பாக நீதிமன்றம் செல்லப் போவதாகவும் தெரிவித்துள்ளனர். ஏற்க னவே இந் நடவடிக்கை தொடர்பாக வழக்குக ளும் நீதிமன்றத்தில் உண்டு. அதேவேளையில் தனிச்சொத்துடைமைக் கொள்கையை எதிர்க்கும் ஜே.வி.பி. கூட இச்சட்டமூலத்திற்கு வலுவான ஆதரவைத் தெரிவிக்கவில்லை. எனினும் சட்டம் நிறைவேற்றப்பட்டு இரு சீனித்தொழிற்சாலைகள் உட்பட சில நிறுவனங்கள் அரசுட மையாக்கப் பட்டுள்ளன.

ஒரு ஜனநாயக நாட்டில் அதாவது முதலாளித் துவப் பொருளாதார அமைப்புநிலவும் ஒரு நாட்டில் சில பொருளாதார நெருக்கடிகள் காரணமாக தொழில் நிறுவனங்கள் நட்டம் அடையும் போது அவற்றை தேசிய மய மாக்குவதோ அல்லது அவற்றிற்கு நிதி உதவி வழங்கி அவற்றை இயங்க வைப்பதோ வழ மையாக மேற்கொள்ளப் படும் ஒரு நடைமுறை தான். அண்மையில் ஏற்பட்ட உலகப் பொருளா தார நெருக்கடியின் போது அமெரிக்க நிதிநி றுவனங் கள் பெரும் நெருக்கடி களை சந்தித்தன. அப் போது அமெ ரிக்க அரசு தனது திறைசேரியில் இருந்து நிதி வழங்கியி ருந்ததையை நாம் நினைவு கூரலாம். அதாவது முதலா ளித்துவ நிறுவனங்கள் இயங் கமுடியாத நிலை ஏற்படும் போது அவற்றை அரசு ஏதோ ஒரு விதத்தில் காப்பாற்றுவது என்பது முத லாளித்துவ பொருளாதாரத்தின் தவிர்க்க முடியாத தேவை யாகும்.



அப்படியானால் ஏன் ஐக்கிய தேசியக்கட்சி இச்சட்ட மூலத்தை எதிர்த் தது?. பொதுவுடமை பேசும் ஜே.வி.பி ஏன் இதற்கு பெரும் ஆதரவை வழங்க வில்லை?. இவற்றிற்கு சரியான மூல நோக்கத்தை புரிந்து கொள்ள முடியும்.

பொதுவாக தனிச் சொத்து எனப்படும் போது ஒரு மனிதனின் காணி, வீடு பாவனைப் பொருட்கள் என்பன கூட அவனின் உடமைகளாகக் கருதப் படுகின்றன. அவை உண்மையில் அவனுடைய உடமைகள் என்றாலும் கூட அரசியலில் தனிச்சொத்து என்பது விளைநிலம், தொழிற்சாலை, இயந்திரங் கள் போன்ற உற்பத்திசாதனங்களே கருதப்படுகின்றன. அவ்வகையில் மனித குலம் தோன்றிய காலம் தொட்டு இன்றுவரை தனிச்சொத்து என்ற வார்த் தையின் அர்த்தம் காலத்திற்கு காலம் மாறுபட்டு வந்திருக்கின்றது.

காட்டில் வேட்டையாடித் திரிந்த மனிதன் மிருகங்களைக் கொல் வதை விட அவற்றைப்பிடித்து வளர்த்து பால், இறைச்சி என்பவற்றை பெற்று பயனடையத் தொடங்கிய போது மிருகங்களே மனிதனின் தனிச் சொத்தா னது. வேட்டைக்கான காடுகள், மேய்ச்சல் நிலங்கள் என்பவற்றைத் தேடி ஒரு மனிதக் கூட்டம் இன்னொரு பிரதேசத்திற்கு இடம் பெயர்ந்த போது ஏற்க னவே அங்கு வசிப்பவர்களுடன் மோதல்கள் ஏற்பட்டுள்ளன. முதலில் வெல்பவர்கள் தோற்றவர்களைக் கொன்று போட்டாலும் காலப் போக்கில் தோற்பவர்களை அடிமைகள் ஆக்கி வேலை வாங்கத் தொடங் கினர். இப்படி அடிமைச் சமூகம் உருவான காலத்தில் மிருகங்கள் மட்டு மன்றி அடிமைகள் ஆக்கப்பட்ட மனிதர்கள் கூட ஆண்டான்களின் தனிச் சொத்துக்கள் ஆகினர்.

பின்பு ஓரிடத்தில் தங்கி பயிர் செய்து வாழும் நிலை தோன்றிய பின் மிரு கங்கள், அடிமைகள் மட்டுமன்றி நிலமும் தனிச்சொத்து என்ற வட்டத்துக் குள் இணைந்து கொண்டது. அடிமைகளின் தொடர்ச்சியான போராட்டங் கள் காரணமாக அடிமைமுறை இல்லாது போன பின்பு நிலப் பிரபுத்துவ சமூக அமைப்பில் நிலமே பிரதான சொத்துடமை ஆகியது. மிருகங்கள், பண்ணை அடிமைகள், கூலி உழைப்பாளர்கள் அனைவருமே நிலம் என்ற உற்பத்திச் சாதனத்தின் சொந்தக்காரர்களுக்காக உழைப்பவர்களாகவே விளங்கினர். கைத்தொழில் வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ சமூக அமைப் பில் பெரும் விவசாய நிலங்கள், கைத்தொழில் நிறுவனங்கள், இயந்திரங்கள் அவற்றோடு தொடர்புபட்ட ஏனைய உற்பத்தி சாதனங்கள் என்பனவே தனிச் சொத்துக்களாக என்ற எல்லைக்குள் வந்தன. எனவே இன்றைய சமூக அமைப் பில் கைத்தொழில் நிறுவனங்கள் அவைசார்ந்த உற்பத்திசாதனங்கள் என்பனவே தனிச்சொத் துக்களாகவே விளங்குகின்றன. இவை தனிப்பட்ட நபருக்கோ அல்லது தனி நபர்களுக்கோ சொந்தமானது என்பதால் இவை தனிச்சொத்துடமை ஆகின்றன. ஒரு பொதுவுடமை சமூக அமைப்பில் தனிச் சொத்துக்கள் எனப்படும் உற்பத்தி சாதனங்கள் அரசுடைமையாக்கப்படுகின் றன. முதலாளிகள் இன்றி அந்நிறுவனத்தின் தொழிலாளர்களே அதை நிர்வகிக்கும் நிலை ஏற்படுகின்றது.

இலங்கை ஒரு பொதுவுடமை நாடு அல்ல. ஆட்சியில் இருப்பவர்க ளும் பொதுவுடமைக் கொள்கையை ஏற்றுக் கொண்டவர்களும் அல்ல. எனினும் இங்கு 1956ஆம் ஆண்டிற்கு பின்பும் பல தேசிய மயமாக்கல் நிகழ்த்தப்பட்டன. அதேவேளையிலே ஏற்கனவே அரசுடைமையாக இருந்த பல சொத்துக்கள் தனியாருக்கு விற்கப்பட்டன. 1956தொடக்கம் 1960வரை, பின்பு 1970 தொடக்கம் 1977வரை இலங்கையில் இடம் பெற்ற தேசிய மயமாக்கல்கள் முக்கியத்துவம் வாய்ந் தவை. அவை ஒரு தேசிய எழுச்சியின் வெளிப்பாடு என்றே கூற வேண்டும். ஏற்கனவே 1956ற்கு முன்பு ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக்கட்சி அப்பட்டமான ஏகாதிபத்திய சார்புடைய முதலாளித்துவ ஆட்சியாக இருந்தது. இலங்கையில் முக்கிய பொருளாதார வருவாயை ஈட்டும் பெருந்தோட்டங்கள், ஏற்றுமதி இறக்குமதி போன்ற முக்கிய மூலங்கள் அந்நிய நிறுவனங்களின் [illegible]

இலங்கை ஒரு விவசாய நாடாக இருந்த போதிலும் அரிசி, மா போன்ற முக்கிய உணவு பொருட்கள் வெளிநாடுகளில் இருந்தே இறக்குமதி செய்யப்பட்டன.

1956 இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா ஆட்சிக்கு வந்த பின்பு பல முக்கிய தேசிய மயமாக்கல்கள் இடம் பெற்றன. திருகோணமலைத்துறைமுகம், கட்டுநாயக்கா விமானத்தளம் என்பன தேசிய மயமாக்கப்பட்டு அங்கு நிலை கொண்டிருந்த பிரிட்டிஷ் படையினர் வெளியேற்றப்பட்டனர். இலங்கையில் போக்குவரத்தை தனது கட்டுப்பாட்டுக் குள் வைத்திருந்த 'பஸ்' கொம்பனிகள் தேசிய மயமாக்கப்பட்டு இலங்கை போக் குவரத்து சபை உருவாக்கப்பட்டது. பெற்றோல் விநியோக உரிமை அமெரிக்க நிறுவனங்களிடம் இருந்து பறித்தெடுக்கப் பட்டு நாட்டுடைமையாக்கப்பட்டது. கொழும்பு துறைமுகம் தேசிய மயமாக்கப்பட்டு ஏற்றுமதி இறக்குமதி அரசின் கைகளுக்கு கொண்டு வரப்பட்டது. பெரும் தேயி லைத் தோட்டங்கள் பிரிட்டிஷ் நிறுவனங் களிடம் இருந்து பறிக்கப்பட்டு தேசியமயமாக்கப் பட்டன. நில உச்ச வரம்பு கொண்டுவரப்பட்டு ஐம்பது ஏக்கருக்கு மேல் காணி வைத்திருப்ப வர்களின் நிலம் பறிக்கப்பட்டு நிலம் அற்ற ஏழைகளுக்கு கொடுக்கப்பட்டன. துல்கிரிய ஆடை நிறுவனம், இரும்புக் கூட்டுத்தாபனமும் என்பன தேசிய மயமாக்கப்பட்டன. விவசாய உற்பத் திப் பொருட்களின் இறக்குமதி கட்டுப்பாட் டுக்குள் கொண்டுவரப்பட்டு விவசா யிகள் தங்கள் உற்பத்தி பொருட்களுக்கு நியாயமான விலை பெறும் உரிமை உரு வாக்கப்பட்டது.

இதன் காரணமாக அமெரிக்காவின் பி.எல். 480 உதவித்திட்டம் நிறுத்தப் பட்டமை உட்பட இலங்கையின் மீது பல பொருளாதார நெருக்கடிகள் திணிக்கப்பட் டன. 1950 தொட்டு 1959வரை பண்டார நாயக்காவும் 1970 தொடக்கம் 1977வரை திருமதி. ஸ்ரீமாவோ பண்டார நாயக்க அவர்களும் இந் நெருக்க டிகளுக்கு முகம் கொடுத்து நாட்டை ஒரு சுய சார்பு பொரு ளாதார நிலையை நோக்கி வேகமாக முன் கொண்டு சென்றனர். அந்நிய நாடுகளின் பொருளாதாரத் தடைகள் காரணமாக மக்கள் பசி பட்டினி போன்ற நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்தாலும் கூட வெகுவிரைவிலேயே நாடு ஒரு சுபிட்சத்தை நோக்கி முன்னேற ஆரம்பித்தது. வாகனங்கள் சொந்த மாக எடுத்து விவசாயம் செய்யுமளவிற்கு விவசாயிகளின் வாழ்க்கைத்தரம் உயர்வடைந்தது. நாணயமதிப்பும் கூட இலங்கையில் 80 சதத்திற்கு இந்தியாவின் ஒரு ரூபா சமனாகும் அளவிற்கு உயர்வடைந்துள்ளது.

இன்று இலங்கையின் இரண்டு ரூபா 25சதத்திற்கு இந்தியாவில் ஒரு ரூபா சமன் என்ற அளவிற்கு எமது நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைந்துவிட்டது. எப்படி இருந்த போதிலும் இந்த இரு காலப்பகுதியிலும் இடம் பெற்ற தேசிய மயமாக்கல்கள் நாட்டை ஒரு புதிய யுகத்திற்கு இட்டுச் சென்றன. எவரிலுமே தங்கியிராத ஒரு சுதந்திரப் பொருளாதாரம் மூலம் நாட்டு மக்களும் ஒரு சுபிட்சத்தை நோக்கி முன்னே றினர்.

1977ல் ஜே. ஆர். ஜெயவர்த்தனா தலைமையில் ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக்கு வந்த பின்பு திறந்த பொருளாதாரக் கொள்கை அமுலுக்கு வந்தது. தேசிய மயமாக்கப்பட்டவற்றில் பல நிறுவனங்கள் மீண்டும் அமைப்பாள ரிடம் கையளிக்கப்பட்டன . முற்று முழுதாகவே நாடு ஏற்றுமதி இறக்கு மதியில் தங்கியிருக்க வேண்டிய ஒரு தங்கு நிலைப் பொருளாதாரத்திற்கு மாற் றப்பட்டது

அதற்குப்பிறகு ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதிகளான ரணசிங்க பிரேமதாசவாலோ திருமதி. சந்திரிக்கா விஜயகுமாரரணதுங்கவினாலோ அதிலிருந்து விடுபட முடியவில்லை. எனினும் மோசமாக போகாமல் பார்த்துக்கொண்டனர்.

ஆனால் இன்றைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச ஆட்சிக்கு வந்த பின்பு இந்த தங்குநிலைப்பொருளாதாரம் துரிதகதியில் வளர்ச்சியடையத் தொடங்கியது. ஆடைஏற்றுமதி, சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலை வாய்ப்பு போன்றவற்றிலேயே எமது பொருளாதாரம் தங்கியிருக்க வேண்டிய மோசமான நிலை ஏற்பட்டுள்ளது. சுய தேவைப் பூர்த்திப் பொருளா தாரம் என்பது எட்டாக்கனியாகிவிட்டது. முழுக்க முழுக்க உலக வங்கி சர்வதேச நாணயநிதியம் என்பவற்றின் கட்டளைகளுக்கு அமையவே பொருளாதார திட்டங்கள் வகுக்கவேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டு விட்டது. இப்படியான நிலையில் தான் நட்டத்தில் இயங்குவதாக கூறப்பட்டு 37 நிறுவனங்கள் தேசிய மயமாக்கப்படவுள்ளன. ஏற்கனவே ரயில்வே, இலங்கை போக்குவரத்து சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் போன்ற அரச நிறுவனங்கள் பெரும் நட்டத்தில் இயங்குகின்றன. இந்நிலையில் 37 நட்டமடையும் நிறுவனங்களும் தேசிய மயமாக்கப்படுகின்றன. இன்றைய தேசியமயம் என்பதே இந் நிறுவனத்தின் பங்குகளை அந்நிய முதலீட்டாளர்களுக்கு விற்று அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தின் மூலம் துண்டு விழும் வரவு செலவுதிட்டத்தை சமாளிக்கும் ஒரே நோக்கத்தை தவிர வேறு எதுவும் இல்லை. 1950, 1970 காலப்பகுதியில் இடம்பெற்றவை போன்ற தேசிய நலன்களின் அடிப்படையில் இடம் பெறும் தேசிய மயமாக்கல் அல்ல இவை. இன்னும் சொல்லப்போனால் உள்நாட்டு முதலாளிகளின் சொத்துக்கள் பறிக்கப்பட்டு அந்நிய நிறுவனங்களுக்கு பங்கு விற்பனை என்ற பெயரில் விற்கப்படப் போகின்றன என்பது தான் எதிர்கால நடப்பாக இருக்கும்.

எனவே, தேசியமயமென்பது நாட்டை சுயதேவை பொருளா தாரத்திற்கு இட்டுச் செல்லும் வகையில் அமைந்தால் மட்டுமே நாட்டுக்கு நன்மையளிக்கும். இல்லையேல் இது கடன் வழங்கும் நிறுவனங்களை திருப்திப்படுத்தும் ஒரு கைங்கரியத்தை மட்டுமே செய்வதாக அமைந்து விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




■ அ.சூரியன்

கணப்பொழுதில் தமது உயிர் காப்பாற்றப் பட்ட சந்தோசத்தில் மிதந்து கொண்டிருந்த வேற்றுக்கிரக வாசிகளான செதிலுக்கும் சதுயா வுக்கும் ஆபத்திலிருந்து மீண்டது பற்றி கணட கூறத் தொடங்கியது.

"என் அருமை நண்பர்களே நான் கூட ஒரு முறை விக்கித்துப் போய்விட்டேன். எப்படி பிளாக்கோளின் ஈர்ப்பு விசையிலிருந்து மீள்வ தென யோசித்தேன். ஈர்ப்பு விசையிலிருந்து தப்புவதெனில் எனக்கு அதிக சக்தி தேவையாக இருந்தது. அது மட்டுமல்ல எனது சக்தி முதல்க ளான ஐதரசன், யுரேனியம் போன்றவற்றை சேமிக்க வேண்டிய தேவையுமிருந்தது. அத்து டன் சிறிது யோசிக்க வேண்டியுமிருந்தது." "அதனால்"....

சதுயா இடை மறித்துக் கேட்டாள். "அத னால்..., என்னுடைய மின்குமிழ்கள் எல்லாத் தையும் அணைத்துவிட்டு எனது செயற்பாட் டின் முக்கால் வீதத்தை நிறுத்திவிட்டு யோசிக்க ஆரம்பித்தேன். இறுதியில் ஓர் ஐதரசன் வெடிப்பை ஏற்படுத்தி திடீரென்று என் வேக த்தை அதிகரித்தேன். நான் நினைத்தது நடந்தது. பிளாக்கோளின் ஈர்ப்பு விசையையும் மீறி நாம் வெளியே வந்து விட்டோம்"... எனக் கூறி முடித் தது கணட.

கணட கூறியதைக் கேட்டு சதுயா வாய் பிளந்து ஆ...வென்றிருக்க செதில் கூறினான்.

"வெரிகுட் என் தோழனே தக்க சமயத்தில் உன்னையும் காப்பாற்றி எம்மையும் காப்பாற்றி விட்டாய்".

"அது எனது கடமை பிரபு. பொறுங்கள் இன்னுமொரு செய்தி கூறக் காத்திருக் கிறேன்."

சதுயா திடுக்கிட்டு "என்ன... ஏதாவது ஆபத்து மீண்டும் வந்துவிட்டதா..." என்றாள்.

"இல்லை அம்மணி. நாம் பால்வீதியை நெருங்கி விட் டோம். அதோ வெலவியாத் திரையை அவதானியுங்கள். பால் வீதியின் வடி வத்தை" "அப்படியென்றால் அது பூமி இருக்கும் அண்டம்தானே" இது செதில். "ஆம் பிரபு." இவர்களின் சம்பாசனையைக் கேட்ட சதுயா வெலவியாத் திரையை அவதானித்து விட்டு "வாவ்...

பால்வீதி சுப்பரா இருக்கிறது. சூரியன் என்ற நட்சத்திரத்தைச் சுற்றி ஒரு நீள் வட்டப் பாதையில் மிக அழகாக கோள்கள் வலம் வரு கின்றனவே. இவ் அண்டத்தின் சக்தி சூரியன். இதுதான் பூமியில் உயிரினம் வாழப் பிரதான மானது என்றது." கணட.



தூரத்தும் அந்த மரங்கள் முறிபடுகின்ற ஓசை ஸ்தம்பித்துப் போக, ஓடிய களைப்பில் சற்று ஓய் வெடுக்க எண்ணி சுதாவும், நிகிதாவும் மரத்தின் வேர் ஒன்றில் சாய்ந்தார்கள். முற்றி விளைந்து மண்ணின் மேற்பரப்பில் வீங்கிய தோற்றத்தில் காட்சி தந்த அந்த வேர், இவர்கள் அமர்ந்த சிறிது நேரத்தில் மெலிதாக அசைய ஆரம் பித்தது. வேகமாக ஓடிக் களைத்த இருவரும் அந்த அசைதலைப் பொருட்படுத்தாது உரை யாட ஆரம்பித்தனர்.

"சுதா என்னவாக இருக்கும் அந்தச் சத்தம்?. "ஏதாவது காட்டு மிருகங்களாயிருக்கும்"

"ஆனால், அது நம்மையே துரத்துவதுபோல வந்ததே" "பெரிய மிருகமொன்று தனது இரை யைக் துரத்திருக்கலாம்." "ஏன் அந்தச் சத்தம் இப்போது இல்லை?" "பயப்படாதே நிகி. சில வேளை இரையை அது பிடித்திருக்கலா மில்லையா...?."

"என்ன சுதா நீ பயப்படவே மாட்டாயா?." "ஏன்? பயமில்லாமலா இவ்வளவு தூரம் மூச்சிரைக்க ஓடி வந்தேன்...?" அப்பொழுது மர வேர் பெரிதாக அசைய ஆரம்பித்தது. "ஐயோ... என்ன இது" அலறியவாறு துள்ளி எழும்பினாள் நிகிதா.

சுதாவும் துள்ளலுடன் எழுந்து வேரை ஆராய்ந் தான் அப்பொழுது...

"கடவுளே... அது மரவேரில்லை மலைப் பாம்பு."

"நிகி, ஓடு... ஓடு.. இதுவேரில்லை... மலைப் பாம்பு"... என்று சத்தமிட்ட சுதா நிகிதாவையும் இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கினான். மறுபடியும் ஓட்டம். இப்பொழுது காடு மேடு தாண்டி ஒரு கிலோமீற்றர் தூரம் வரை ஓடி மூச்சிரைக்க நின்றார்கள். "முடியாது சுதா... இனி... என்னால.. ஓட முடியாது." "இனி ஆபத்தில்லை.. நிகி.. சற்று இளைப்பாறு வோம்" என்று கூறிய சுதா புல் வெளியைத் தேடி அமர்ந்து கொண்டான்.

"எங்களைப் பார்க்கவில்லையா மலைப் பாம்பு?"

"இல்லை நிகி. நல்ல வேளையாக அது நம் மைக் கவனிக்கவில்லை. சற்று முன்னர்தான் அது பெரியதொரு இரையை விழுங்கியிருக்க வேண் டும். அது பேசாமல் இருப்பதற்கு இதுதான் காரணம்."

சுதா இவ்வாறு கூறிய சமயம் மீண்டும் மரம் செடி கொடிகள் முறிபடுகின்ற ஒலி பெரிதாகக் கேட்கத் தொடங்கியது.

அதை அவதானித்த நிகிதா பதட்டமாகிட சுதா "இம்... ஹீம்... இது நம்மை விட ஏது போலிருக்கு பொறு நிகி. நான் மரத்தில் ஏறி பார்த்து வருகின்றேன்." என்று கூறிவிட்டு சரக் ... சரக்கென்று மரத்தில் தாவி ஏறி அவதானித்தான் சுதா.

மறுகணம் கூறினான். "நிகி பெரியதொரு ஆபத்து நம்மை நோக்கி வந்து கொண்டிருக் கிறது...."

(தொடரும்)

## பாண்துண்டுகளால் சாதனை!

சாண்ட்ரா விட்ஸ்வியில் எனும் மூதாட்டி தனது பிறந்தநாளை கடந்த வருடம் வெகு விமரிசையாகக் கொண்டாடியுள்ளார். இந்த பிறந்ததினத்திற்காக இவருக்கு பரிசளிக்கப்பட்ட ஒன்று உலக சாதனையாக மாறியுள்ள சம்பவம் பற்றி உங்களுக்கு தெரியுமா? இவரது மருமகனான 27 வயதுடைய வாரா என்பவர் வேகவைக்கப்படாத கிட்டத்தட்ட 10ஆயிரம் பாண் துண்டுகளைக் கொண்டு தனது மாமியாரின் உருவப்படத்தை உருவாக்கி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளார். இந்த முயற்சிக்காக 9852 பாண் துண்டுகள் சரியாக பயன்படுத்தப்பட்டுள்ளது. இது முகப்புத்தக நண்பர்கள் 40 பேரின் உதவியுடன் நிறைவேற்றப்பட்டுள்ளது. உருவாக்கப்பட்ட உருவப்படமானது நீள அகலங்கள் முறையே 42 அடி 8 அங்குலமாகவும் 32 அடி 8 அங்குலமாகவும் காணப்படுகின்றது. இது கின்னஸ் சாதனையாக பதியப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர்த்தளப் புயல்

# நெப்போலியன்

06



# டுலான் துறைமுகத் தாக்குதலில் பங்குபெறும் வாய்ப்பு நெப்போலியனுக்கு கிடைத்தது.

பிரான்ஸின் தென் பகுதிக் கடற்கரை, உலகப் படத்தில் ஒரு சின்ன மூக்கைப்போல அழகாக வளைந்திருக்கும் - அந்த மூக்கின் நுனியில் உள்ள டுலான், அந்நாட்டின் மிக முக்கியமான துறைமுகங்களில் ஒன்று. தெற்கிலிருந்து கடல் வழியே அந்நாட்டினுள் நுழைய விரும்புகிறவர்கள் எல்லோருக்கும் டுலான்தான் நுழைவாயில்.

இதனால், டுலானுக்கு ராணுவ முக்கியத்துவம் அதிகம். கடல்வழித் தாக்குதலிலிருந்து அவர்கள் தங்களைப் பாதுகாத்துக்கொள்ள வேண்டுமானால், டுலான் துறைமுகத்தை பிரான்ஸ் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது அவசியம்.

அப்போதைய ஐரோப்பாவின் சூப்பர் ஸ்டார் இங்கிலாந்து, மிகவும் பலமான கடற்படையைக் கொண்டிருந்தது. கொஞ்சம் அசந்தால், கடற்கரை நெடுகிலும் வரிசையாகக் கப்பல்களைக் கொண்டுவந்து நிறுத்தி, பிரான்ஸை மொத்தமாகச் சிறைப்படுத்திவிடுவார்கள்.

ஏற்கெனவே உள்நாட்டுக் கலவரத்தில் திணறிக் கொண்டிருந்த பிரான்ஸ், அப்படியோர் ஆக்கிரமிப்புக்குத் தயாராக இல்லை. ஆகவே, முன்பு எப்போதையும்விட அதிகமாக, டுலானைப் பாதுகாக்க வேண்டிய அவசியம் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது.

ஆனால், பிரான்ஸின் கெட்ட நேரம், டுலான் நகரத்தைச் சேர்ந்தவர்களுக்கு இந்தப் புரட்சியும் பிடிக்கவில்லை, புதிய அரசாங்கமும் பிடிக்கவில்லை. அவர்கள், பழைய போர்பன் (Bourbon) வம்சத்து லூயி மன்னர்களின் ஆட்சி மீண்டும் வரவேண்டும் என்று விரும்பினார்கள்.

டுலான் மட்டுமில்லை, அப்போதைய பிரான்ஸின் பல நகரங்கள் இப்படிப் புரட்சிக்கு எதிரான கருத்தைக் கொண்டிருந்தன. இதனால், புரட்சிக்கு எதிரான கலவரங்கள் நாடு முழுவதும் ஆங்காங்கே நடந்து கொண்டிருந்தன. நெப்போலியன் போன்ற படை வீரர்கள், இந்த எதிர்ப்புரட்சிகளைக் கட்டுப்படுத்தி, அடக்கும் பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்கள்.

மற்ற பகுதிகளில் நடக்கும் கலவரங்களைக் கூட, 'போனால் போகிறது' என்று அலட்சியப்படுத்தி விடலாம். டுலானை அப்படி நினைப்பதற்கில்லை. காரணம், பிரான்ஸின் கடல் சாவி அவர்களிடம் இருக்கிறது. புதிய ஆட்சியின்மீது கோபப்பட்டு, அவர்கள் எதிரிகளை உள்ளே அனுமதித்து விட்டால், முதலுக்கே மோசமாகிவிடும்.

ஆனால், டுலான் நகர நிர்வாகம் அதைத்தான் செய்தது. இந்தப் புரட்சி, ஆட்சியெல்லாம் எங்களுக்கு வேண்டாம், பழையபடி லூயிகளை ஆட்சிக்குக் கொண்டுவரவேண்டும், அந்தக்கால வழியைப் பாருங்கள் என்று பிரிட்டன், ஸ்பெயினுக்குக் கதவைத் திறந்துவிட்டார்கள். போதாதா? ஏகப்பட்ட கப்பல்களில் போர் வீரர்கள், ஆயுதங்கள், வெடி மருந்துகள் என்று கொண்டு வந்து குவித்து விட்டது பிரிட்டன். அங்கே கம்பீரமாக உட்கார்ந்து கொண்டு, சுற்றியிருக்கிற பிரெஞ்சுப் பகுதிகளை ஆசையோடு பார்க்கத் தொடங்கினார்கள்.

பிரான்ஸின் அரசியல் நிலையற்றத் தன்மையைப் பயன்படுத்தி, அந்நாட்டை ஆக்கிரமித்துவிடலாம் என்பது இங்கிலாந்தின் ரகசியக் கணக்கு. இதற்கு வசதியாக, அவர்களை வெற்றிலை பாக்கு வைக்காதகுறையாக அழைத்து, உள்ளே அனுமதித்துவிட்டது டுலான்.

டுலான் துறைமுகத்தை இங்கிலாந்துப் படைகள் முழுமையாக ஆக்கிரமித்திருந்தன. உள்ளூர்க் கோட்டைகள் எல்லாம் பறிபோயின. உள்ளூர்க் காரர்களின் ஆசீர்வாதத்துடன், ஆயிரக்கணக்கான படைவீரர்கள் நன்றாக அமர்ந்து கொண்டு, துப்பாக்கியும் கையுமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

உடனடியாக ஏதேனும் செய்தாகவேண்டும் என்று பரபரத்தது பிரான்ஸ் ராணுவம்.

அவர்களுக்கு எதிராக, பிரான்ஸ் எத்தனை பெரிய படையைக் குவித்தாலும், இங்கிலாந்துக்குக் கவலை இல்லை. கடல் திறந்து கிடக்கிறது, எவ்வளவு கப்பல்களை வேண்டுமானாலும் அவர்களால் வரவழைக்கமுடியும்.

இத்தனை தடைகளைத் தாண்டி, டுலானை மீண்டும் கைப்பற்றுவது எப்படி? பிரான்ஸ் ராணுவம் சந்தித்துக்கொண்டிருந்த 'தலைபோகிற பிரச்சினை' அதுதான்.

அவர்களும் என்னென்னவோ முயன்று பார்த்தார்கள். இளம் வீரர்கள், வெவ்வேறு படைத்தளபதிகள், வித்தியாசமான தாக்குதல் முயற்சிகள் என்று அவர்கள் பயன்படுத்திய உத்திகள் எவையும், இங்கிலாந்துப் படைகளின் முன் பலிக்கவில்லை. ஆக்கிரமிப்பும் எதிர்த் தாக்குதலும் மாதக் கணக்காக நீடித்துக் கொண்டிருந்தது.

டுலான் துறைமுகத்தை இங்கிலாந்துப் படைகள் முழுமையாக ஆக்கிரமித்திருந்தன. உள்ளூர்க் கோட்டைகள் எல்லாம் பறிபோயின. உள்ளூர்க் காரர்களின் ஆசீர்வாதத்துடன், ஆயிரக்கணக்கான படை வீரர்கள் நன்றாக அமர்ந்து கொண்டு, துப்பாக்கியும் கையுமாக ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சூழ்நிலையில்தான், டுலான் துறை முகத்தாக்குதலில் பங்கு பெறுகிற வாய்ப்பு நெப்போலியனுக்குக் கிடைத்தது.

அப்போது நெப்போலியன் ஒருசாதாரணப் படைவீரன்தான். ஆனாலும், டுலானைக் கைப்பற்றுவதற்காக பிரெஞ்சு ராணுவம் எடுத்திருக்கும் முயற்சிகளில் என்னென்ன ஓட்டைகள் இருக்கின்றன என்று அவனால் கண்டு கொள்ளமுடிந்தது.

டுலான் தாக்குதலுக்குப் பொறுப்பாளியாக நியமிக்கப்பட்டிருந்த பிரெஞ்சுப் படைத்தளபதிக்கு, போர் அனுபவம் போதாது. அவரால் எதையும் உருப்படியாகச் செய்யமுடியவில்லை என்பதைப் புரிந்துகொண்டு ராணுவம், அந்த இடத்துக்கு இன்னொருவரைக் கொண்டுவந்தது.

இந்தப் புதிய தளபதியின் நடவடிக்கைகளும் நெப்போலியனுக்குப் பிடிக்கவில்லை. அதனால் இந்த ஆளும் தேறமாட்டான் என்று மேலிடத்துக்குக் கடிதம் எழுதினான்.

எந்த ராணுவத்திலும், இதுமாதிரியான அதிகப் பிரசங்கித்தனம், ஒழுங்கீனத்துக்கு இடம் இல்லை. தளபதி மாற்றப்பட்டார். அதைவிட முக்கியம், முதன்முறையாக, இந்தப் பொடியன் சொல்வதில் ஏதோ விஷயம் இருக்கிறது என்று யோசிக்கத் தொடங்கியது பிரெஞ்சு ராணுவம்.

பையனிடம் என்னென்னவோ புதுப் புது யோசனைகள் இருப்பதாகத் தோன்றுகிறது. அவன் சொல்வதையும் கொஞ்சம் காது கொடுத்துக் கேட்போமே, என்ன குடியா மூழ்கிவிடும்?

புதிதாக வந்த படைத் தளபதி, நெப்போலியனுடன் பொறுமையாக உட்கார்ந்து பேசத் தொடங்கினார், எல்லோர்மீதும் குறை சொல்லும் பொடிப் பையா, நீ எப்படி டுலானைக் கைப்பற்று வாய்? அதைச் சொல்லு!


தனக்குக் கிடைத்திருக்கும் இந்த அபூர்வமான வாய்ப்பின் முக்கியத்துவம் நெப்போலியனுக்குப் புரிந்தது. ஆகவே, அத்தனை நாள்களாகத் தன்னுடைய மனதினுள் கட்டமைத்திருந்த ஆக்கிரமிப்புத் திட்டங்களையெல்லாம் அவரிடம் விரிவாக விளக்கத் தொடங்கினான்.

நெப்போலியன் பேசுவதைக் கேட்கக் கேட்க, அவனுடைய தளபதிக்கு ஒரு விஷயம் தெளிவாகப் புரிந்துவிட்டது. இவன் சொல்வதெல்லாம் யதார்த்தத்தில் சரிப்படுமா என்று தெரியாது. ஆனால், இந்தப் பையனிடம் வேகம் இருக்கிறது, விஷயம் இருப்பதாகவும் தோன்றுகிறது. இவனுக்கு ஒரு வாய்ப்புக் கொடுத்துப் பார்த்தால் என்ன?

கொடுத்தார்.

நெப்போலியன், மௌனமாகச் சம்மதித்துவிட்டு, தன்னுடைய திட்டங்கள் சரியானவை தானா என்று நிதானமாக உட்கார்ந்து யோசிக்கத் தொடங்கினான்.

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கடந்த இதழின் தொடர்ச்சி)

# சிறுவனின் விலை இரண்டு லட்சம் பவுண்!

உண்மைச் சம்பவம்



■ தமிழில் ஜெகன்

இந்தக் கொடுமையான செய்தி உண்மையானதல்ல என்பதை ரோனி புரிந்துகொண்டார். மகனைக் கடத்திச் சென்றவர்கள் சங்கேதச் சொல்லைச் சொல்லாமல் எதையும் தெரிவிக்க மாட்டார்கள் என்பது அவருக்குத் தெரியும்.

மே மாதம் 29ம் திகதி தொலைபேசி மணி அடித்தது. ரோனி போனை எடுத்ததும், ஆணின் குரல் கேட்டது. "இது மிர்கோ. பிரதான வீதி சந்திப்பிற்குப் போங்கள் உங்களுக்கு ஏதாவது கிடைக்கும்" என்று கூறியவன் போனை வைத்து விட்டான்.

பாஸ்கோ சாலைச் சந்திக்குச் சென்றபோது அங்கு ஒரு குறிப்பு காணப்பட்டது "அப்பா இவர்களுக்கு விரைவாகக் கொடுத்துவிடு.. இல்லாவிட்டால் இவர்கள் என்னைக் கொன்று விடுவார்கள். அம்மா உன்னை நான் மிகவும் நேசிக்கிறேன். இது நாள்வரை உன்னைக் காணாதது வருத்தமாக இருக்கிறது." என அதில் எழுதப்பட்டிருந்தது. அத்துடன் சிறுவனைக் கடத்திச் சென்றவர்களின் குறிப்பும் இருந்தது. அவர்கள் இரண்டு லட்சம் பவுண் கேட்டிருந்தார்கள்.

ரோனி தனது சொத்து முழுவதையும் கணக்கிட்டுப் பார்த்தார். மூன்று உல்லாச விடுதிகள், ஒரு சிறு தொழிற்சாலை, இவற்றை விற்றுப் பணமாக்கக் காலதாமதமாகலாம். என்ன செய்வது? தாமதமின்றிப் பணம் சேகரிக்க வேண்டும் என்று முடிவு செய்தார்.

அடுத்த தொலைபேசி அழைப்பு யூன் மாதம் மூன்றாம் திகதி வந்தது. "மொத்தப் பணத்தையும் ஒரு பையில் போடுங்கள் ஐந்தாயிரம், பத்தாயிரம் நோட்டுகளாக (இத்தாலியப் பணத்தில்). அவை இருத்தல் வேண்டும். நோட்டுகளில் எந்த ஒரு அடையாளமும் குறிப்பிடக்கூடாது. அடுத்த செய்தியை எதிர்பாருங்கள்."

கடத்தல்காரர்களின் அடுத்த கட்டளை வந்தது ரோனி பணப்பையை எடுத்துக் கொண்டு ஒரு குறிப்பிட்ட பூங்காவிற்குச் சென்று குறிப்பிட்ட மரத்தடியில் வைக்கவேண்டும் என்பதே அதுவாகும்.

அவ்விதமே ரோனி கடத்தல்காரர்களின் கட்டளைக்கமைவாக பணத்தைப் பையில் போட்டு எடுத்துச்சென்று அவர்கள் குறிப்பிட்ட மரத்தடியில் வைத்துவிட்டு வந்தார்.

நான்கு நாட்களாயிற்று. ரோனி, ஓரியானோ இருவரும் மனம் இடிந்து உட்கார்ந்துவிட்டனர். பிள்ளையைப் பற்றிய செய்தி எதுவுமே கிடைக்கவில்லை.

யூன் மாதம் 9ம் திகதி பகல் 1.40 மணிக்கு கடைசியாக தொலைபேசி அழைப்பு வந்தது. "இது மிர்கோ உங்களுக்குத் தேவையானது, நீங்கள் விரும்புவது, பாஸ்டிடா கிராமத்துச் சாலையில் கிடைக்கும் போங்கள்."

ரோனி தவிப்புடன் தாவிக்காரினுள் உட்கார்ந்தார். கார் மிக வேகமாகச் சென்றது. நான்கு மைல் தூரம் சென்று பாஸ்டிடா கிராமத்துச் சாலையை அடைந்தார்.

என்ன ஆச்சரியம்!? அங்கே அவர் மகன் மிர்கோ தனியாக உலாவிக் கொண்டிருந்தான் இருபது நிமிடங்களுக்குப் பிறகு ஓரியானா தன் மகன் மிர்கோவைக் கட்டி அணைத்து ஆனந்தக்கண்ணீர் விட்டுக் கொண்டிருந்தாள்.

பதினெட்டு நாட்கள் கடத்தல்காரர்களிடம் தங்கியிருந்த ஏழுவயதுப் பையன் மிர்கோ தாயிடம் நடந்தவற்றை இவ்வாறு சொன்னான். "முதலில் நான் ஒரேயடியாகப் பயந்துவிட்டேன். பின்னர் அழவில்லை. நான் கண் விழித்தபோது ஒரு அறையில் இருந்தேன் தரையில் ஒரு பாயில் படுத்திருந்தேன். தலையணையும், போர்வையும் இருந்தன. கைகளில் விலங்கு பூட்டப்பட்டிருந்தது. ஒரு காலில் சங்கிலியைப் பிணைத்து அதைச் சுவரில் மாட்டியிருந்தார்கள். தொப்பி அணிந்த ஒருவன் வந்தான். விலங்கையும், சங்கிலியையும் அவிழ்த்தெடுத்துச் சென்றான். சற்றுப் பின்பு வந்து "சாப்பிட உனக்கு ஏதாவது வேண்டுமா?" என்று கேட்டான். நான் வேண்டியதைக் கூறவே அவன் சிறிது ஜாம் தடவிய ரொட்டியைக் கொண்டு வந்து தந்தான்.

ரொட்டியைச் சாப்பிடக் கடித்ததும் நான்கு சிறு மாத்திரைகள் பல்லில் சிக்கின அதில் மூன்றை நான் துப்பிவிட்டேன். ஒன்று மாத்திரம் வாயில் இருந்தது. அங்கிருந்த ஒரு பெண்மணி அதைப் பார்த்துவிட்டாள். அவள் ஒரு கோப்பை தண்ணீர் கொண்டு வந்து கொடுத்து மாத்திரைகளை விழுங்கும்படி கூறினாள்.

அதன்பிறகு தூக்கம்தான். என்னால் எழுந்திருக்கவே முடியவில்லை. ஒரே சோர்வாக இருந்தது. பிறகு எனக்காக ஏராளமான புத்தகங்கள், பத்திரிகைகள் வாங்கி வந்தார்கள். அவ்வளவு புத்தகங்களைப் படித்ததேயில்லை. அவர்கள் என்னிடம் அன்புடன் நடந்து கொண்டார்கள். நான் கேட்டது அனைத்தையும் வாங்கித் தந்தார்கள்.

கடிதங்கள் எழுதச் சொன்னார்கள். அந்தக் கடிதங்கள் அத்தனையும் அப்பாவுக்குத்தான். நான் கடிதத்தின் அடியில் கையெழுத்திட்டதும், அன்றைய திகதியைப் பத்திரிகையில் இருந்து கத்தரித்து அடியில் ஒட்டுவார்கள். நாட்கள் கடந்து கொண்டேயிருந்தன. எனக்குப் பயமாகிவிட்டது. என்னால் எதையும் சாப்பிடவும் முடியவில்லை."

எத்தனை லட்சம் பவுண்கள் போனாலும் ஆருயிர் மகன் கிடைத்த பூரிப்பில் மிர்கோவை அழைத்துக் கொண்டு கர்த்தருக்கு நன்றி செலுத்த ரோனியும் ஓரியானோவும் புனித பீட்டர் தேவாலயத்திற்குக் காரில் புறப்பட்டனர்.

(முடிவுற்றது)





[Universities participating in the UK fair]

University of East London www.uel.ac.uk
University of Bedfordshire www.beds.ac.uk
Anglia Ruskin University www.anglia.ac.uk
University of West London www.uwl.ac.uk
Glyndwr University www.glyndwr.ac.uk
University of Wales, Newport www.newport.ac.uk
University of Worcester www.worc.ac.uk

SPOT ADMISSIONS FOR JANUARY AND SEPTEMBER 2012 INTAKES
POSTGRADUATE AND UNDERGRADUATE COURSES


MBA, Architecture, Civil, Electrical, Electronic Engineering, Computing, Bio Medical Sciences, Pharmacology, Nursing, Social Sciences, Business Management, Media, Art, Education, Research and PhD.


SCHOLARSHIPS AVAILABLE

DATE: Monday 21st November 2011
VENUE:GALLE FACE HOTEL - LOTUS "A" ROOM
TIME: 11.00AM TO 7.00PM

CONTACT : MR.LOHO - Lohos Group
Mobile:0777 917929 / Office 011-2577768
தமிழில் தொடர்புகளுக்கு : Dr.இந்திராணி - Tel: 0773498660
Email: lohosgroup@sltnet.lk Website: www.lohosgroup.com
Please visit the Fair with your original certificates and a set of photocopies
ENTRANCE FREE


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# லண்டன் 2012 சிற்பக் கலை வடிவம்

உலகின் சுற்றுவட்டப் பாதையில் 'லண்டன் 2012' சிற்பக் கலை வடிவம் முடிவடையும் தருவாயில், லண்டன் நகர ஒலிம்பிக் பூங்காவில் அனிஷ் கபூர் என்பவரால் வடிவமைக்கப்பட்ட சிற்பக்கலையம்சம் கொண்ட 115 மீற்றர்கள் உயரமான பிரித்தானியக் கலை வேலைப்பாடுகள் கொண்டதாம். உச்சியில் வீடுகளும் ஓர் அவதானிப்புத் தளமும் உடைய நிரந்தரமான கட்டமைப்பு பூர்த்தியாகும் நிலையில் உள்ளது.


Hotel & Gastro formation



ஹோட்டல் துறையில் மேல்ப் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுணத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வர் வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். படிப்புக் காலங்களுக்கு வேலையிடத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேரடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

www.progresso-lehrgang.ch

| Hotel & Gastro formation | Eichistrasse 20 | 6353 Weggis
| Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
| progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch

உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்சு, இத்தாலி, நெதர்லாந்து, டெனிஸ், சுவிடிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி உங்கள் கையடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்.

மொழி படிப்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய சுற்றுப் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு பொருள்.

தொடர்புகளுக்கு மூர்த்தி மாஸ்டர்,

இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 56 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில் für Handy



10 மொழி அகராதி

Sprache Wörterbuch

ஏஜென்டுகளுக்கு நல்ல கமிசன்

Sudar Oli

வார மலரை ஐரோப்பாவில்

தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்

இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.

பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்

மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August, Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சிறுத்தை'யின் உயரத்தைத் தாண்டணும்!

## — கார்த்தி

**அதென்ன படத்துக்கு 'சகுனி'ன்னு பேரு?**

அதானே.. பார்த்தா ஏதோ வில்லன் கரத்துக்கு இருக்கு இல்ல?! ரொம்பக் கரடு முரடா எல்லாம் முதல் ரெண்டு படத்துலேயே பண்ணியாச்சு. 'பையா'வுல கூட பொறுப்பில்லாம இருக்கிற மாதிரிதான் இருக்கும். ஆனா 'சகுனி' முழுக்க வேற மாதிரியான படம். மகாபாரதத்துல கிருஷ்ணருக்குப் போட்டியா வருபவர் சகுனி. அவர் வர்ற எல்லா இடங்களுமே கலகலப்பா இருக்கும். அவர் யார் தலையையாவது உருட்டிக்கிட்டே இருப்பார். ஆனா அவர் டென்ஷன் ஆக மாட்டார்.

படத்துல அவ்வளவு தந்திரங்கள் இருக்கு. கிராமத்துல இருந்து நகரத்துக்கு வர்ற ஒருவனோட பயணம்தான் கதை. ஆனா படத்துல நான் சந்திக்கிற மனிதர்கள், சம்பவங்கள், பிரச்சினைகள், அதுக்கான தீர்வுகள்னு நிறைய விருந்து ரசிகர்களுக்காகக் காத்திருக்கு. நாசர் சார், கோட்டா சீனிவாசராவ், ராதிகா, ரோஜா, பிரகாஷ்ராஜ்னு அவ்வளவு கேரக்டர்கள் இருக்காங்க. இவங்களுக்கு இந்த சகுனியால என்னென்ன பிரச்சினைகள் வருது, அதுக்கு எப்படித் தீர்வு கிடைக்குது என்று சொல்லியிருக்கோம். படத்துல நிறைய அரசியல் இருக்கு. ஆனா இது அரசியல் படமில்லை.

**படத்துல வேற என்ன ஸ்பெஷல்?**

இந்தப் படத்துல சந்தானம் ரொம்ப ஸ்பெஷல். படம் முழுக்கவே என்கூட வர்றார். 'சிறுத்தை' மாதிரியே இந்தப் படத்துலேயும் எங்களோட காமெடி ரொம்ப பேசப்படும். படத்துல அவரும் நானும் சேர்ந்து அடிக்கிற லூட்டி நிச்சயம் பரபரப்பா பேசப்படும்னு நினைக்கிறேன்.

**திருமணத்திற்கு முன், திருமணத்திற்கு பிறகு.. என்ன வித்தியாசம்?**

நிறைய இருக்கே! ம்ம்.. நான் ஷூட்டிங் முடிஞ்சா நேரா வீட்டுக்குப் போற டைப்தான். ஆனா இதுக்கு முன்னாடி ஷூட்டிங் எத்தனை மணிக்கு முடிஞ்சாலும் அதைப் பற்றியெல்லாம் பெருசா கவலை ஏதும் இருக்காது. ஆனா, இப்போ அப்படி இருக்க முடியலை. நமக்காக ஒருத்தி வீட்ல காத்துக்கிட்டு இருக்கான்னு உள்மனசுல அலாரம் அடிக்கும். ஷூட்டிங் சமயத்துல 11 மணியைக் கடந்து போகும். நான் வீட்டிற்குப் போகும் வரைக்கும் ரஞ்சனி சாப்பிடாமல் காத்துக்கிட்டிருக்கிறது இன்னும் கவலையைத் தரும். அதனால சீக்கிரமா முடிச்சிட்டு வீட்டுக்குப் போகணும்னு இன்னும் பொறுப்புகள் கூடியிருக்கு.

**குடும்பத்துல பாதி பேர் எப்பவும் பிஸியாயிருக்கீங்க. சந்திச்சுக்கிறது, பேசறதெல்லாம் எப்போ?**

இரை தேடப் பறவைகள் உலகம் முழுக்க பறந்து திரிஞ்சாலும், திரும்பவும் கூட்டுக்கு திரும்பித்தானே ஆகணும்? எங்க எல்லாருக்கும் தனித்தனியா நேரங்கள் கிடைக்கும். ஆனா எல்லாரும் சேர்றது டின்னருக்கு தான். குறைந்தபட்சமா சனிக்கிழமை சாயந்தரமாவது எல்லாரும் சேர்ந்து டின்னர் சாப்பிடுவோம். அது வீட்லே போவா இல்லை ஹோட்டலாங்கறதெல்லாம் எங்க வீட்டு பெரிய மனுஷங்க இயா, தேவ் கைலதான் இருக்கு. என்ன மெனு, எங்கே போறோம்ங்கறதெல்லாம் அவங்களோட செலக்ஷன் தான். எங்களை அப்படித் தான் எங்க அப்பா கொண்டாடினார்.



**சிவகுமார், சூர்யா, ஜோதிகான்னு சாதிச்ச குடும்பம். இதில் உங்களோட லெவல் என்ன? என்னைக்காவது உங்களை இவங்களோட கம்பேர் பண்ணியிருக்கீங்களா?**

எப்பவுமே கிடையாது. முதல் படம் 'பருத்திவீரன்' பண்ணும்போது அந்தப் படம் மட்டும்தான் என்னோட இலக்கு. நிச்சயமா ஜெயிக்கும் என்று தெரியும். ஆனா இவ்வளவு வரவேற்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கலை. அந்தப் படத்துக்காக ஓடிக்கிட்டு இருக்கும்போது மனசுல வேற எதுவுமே தெரியலை. முழுக்க அந்தப் படத்தோட ஞாபகம் மட்டும் தான். ஆனா 'பருத்தி வீரன்' ரிலீஸாகறதுக்கு முன்னாடியே 'ஆயிரத்தில் ஒருவன்'ல கமிட் ஆகியாச்சு. செல்வராகவன் சார் எடுக்கப் போற காட்சியைச் சொல்லிட்டு, இதுதான் இந்தக் கேரக்டர். இதை இப்படிச் செய்தால் நல்லாயிருக்கும். உன்னால இதை இன்னும் நல்லா பண்ண முடிஞ்சா, என்ன தோணுதோ அதை இன்னும் பெட்டரா பண்ணு என்று சொல்வார். நிறைய புதுசு புதுசா கத்துக்கிறதுக்கான வாய்ப்புகள் அதிகமிருந்தது. 'பையா' வேற மாதிரியான டிரீட். லிங்குசாமி சார் கொடுத்த சுதந்திரம், அவருக்குள்ள நீயாய் வேலைப் பார்க்கிற இயக்குநர் பிசாசுன்னு நிறைய புது அனுபவங்கள்.

ரொம்ப கம்மியான படங்களில் தான் இதுவரை நடிச்சிருக்கேன். ஆனா இப்போ கிடைச்சிருக்கிற பேர் ரொம்ப பெருசுன்னு நிச்சயமா புரியுது. இதுவரைக்கும் சம்பாதிச்சிருக்கிற ரசிகர்களையும், எடுத்திருக்கிற பெயரையும் தக்க வெச்சுக்கிற துக்காகவே ரொம்ப உழைக்கிறேன். இதுல என்னை யாரோடும் ஒப்பிட முடியாது. அதுக்கான நேரமும் இல்லை. என்னோட அடுத்த படத்துல 'சிறுத்தை'யின் உயரத்தைத் தாண்டணும். ஒவ்வொரு படமும் பேசப்படணும். நிறைய கனவுகள் இருக்கு...

# சில்லாக்ஸ் 'குத்து' கிடையாது!

## பாடகி சாருலதா



**செகண்டா வந்த உங்க 'சில்லாக்ஸ்' குத்து இப்போ ஹிட் ஆகிடுச்சே? என்று கேட்டதும் சாருலதா முகத்தில் குஷி பளிச்சிடுகிறது.**

ஹைய்யோ. டி.வி. சேனல்கள், டீக்கடைகள்னு பல இடங்களில் 'சில்லாக்ஸ்' அதிருது. சில எஃப்.எம்.களின் டாப் 10 லிஸ்ட்டில் இந்தப் பாட்டுக்குத்தான் முதல் இடம். சினிமாவில், பட்டையைக் கிளப்புற மாதிரி ஒரு பாட்டு பாடணும்ங்கிறது என்னோட நெடுநாள் கனவு. தொடர்ந்து விஜய் படங்கள் மூலமா அந்தக் கனவு நிறைவேறுறதுல எனக்கு டபுள் சந்தோஷம். முதல்ல இசையமைப்பாளர் விஜய் ஆண்டனிக்கு நான் நன்றி சொல்லணும். 'சில்லாக்ஸ்' பாட்டுப் பாட அவர் என்னைக் கூப்பிட்டப்போ, அது விஜய் படத்துக்காகத்தான்னு எனக்குத் தெரியாது. ரிக்கார்டிங் முடிஞ்சு சில வாரங்களுக்குப் பிறகுதான் எனக்கு விஷயம் தெரியும்.

என் குரல் நல்லா செக்ஸ் அப்பீல் கொடுக்கும். அதை நல்லா பயன்படுத்துற மாதிரி ஹஸ்கி வாய்ஸ்ல 'சில்லாக்ஸ்' பாட்டு அமைஞ்சது. இன்னொரு ஸ்பெஷாலிட்டி, இந்தப் பாட்டு நீளமான ஆலாபனையில் ஆரம்பிக்கும். அங்கங்கே அராபிக் பிட் போடணும். நடுவில் நிறைய ஜதிகள் வரும். கர்நாடக இசையில் நல்ல பயிற்சி இருக்குறவங்கதான் இதைப் பாட முடியும். அதனால் சில்லாக்ஸ் 'குத்து' கிடையாது. ஃபாஸ்ட் பீட்ல அமைஞ்ச டியூன்!

**சில்லாக்ஸுக்கு சினிமா வட்டாரத்தில் ரெஸ்பான்ஸ் எப்படி?**

'இந்தப் பாட்டுக்கு உங்க வாய்ஸ் பெரிய ப்ளஸ்'ன்னு டைரக்டர் ராஜா சொன்னார். பாட்டுக்கு ஆடிய ஹீரோயின் ஹன்சிகா மோத்வானியை படத்துக்கான ஒரு ப்ரமோஷன் நிகழ்ச்சியில் பார்த்தப்போ, என்னைக் கட்டிப்பிடிச்சு முத்தம் கொடுக்காத குறையா பாராட்டினார்.

**சரி. உங்க சொந்த வீடான கர்நாடக இசை வட்டாரத்தில் இதுபோன்ற சினிமா பாடல்களுக்கு ரியாக்ஷன் எப்படி இருக்கும்?**

கர்நாடக இசையில் என்னோட ரோல் மாடல் அருணா சாய்ராம். நான் ஜாலியா சினிமா பாடல்களை எடுத்துவிட்ட ஒரு ஃபங்ஷனுக்கு அவங்க வந்திருந்தாங்க. முதல் வரிசையில் கணவரோட ரொம்ப நேரம் உட்கார்ந்திருந்து ஒவ்வொரு பாட்டையும் கைதட்டி ரசிச்சாங்க. சுதா ரகுநாதன், நித்யஸ்ரீ மகாதேவன், உன்னிகிருஷ்ணன் போன்றவர்கள் பல நிகழ்ச்சிகளில் என்னைப் பாராட்டியிருக்காங்க.

**சில கர்நாடக இசைப்பாடகர்கள் சினிமாவை விலக்கி வைக்குறதை விரதம் போல கடைப்பிடிக்குறாங்க. அவங்ககிட்டருந்து ஏதாவது விமர்சனங்கள்?**

எனக்கு எது வருமோ அதை நான் பண்றேன். எனக்கு கர்நாடக இசை பிடிக்கும். அதை தியானம் மாதிரி அனுபவிச்சுப் பாடுறேன். அதே சமயம் ஜாலியான அவுட்லெட்டும் எனக்குத் தேவை. அமைதியான சபாக்களில் பாடுறதும் எனக்குப் பிடிக்கும். லைட் மியூசிக் கச்சேரிகளில் 'சியர் அப்'ன்னு ரசிகர்களை நோக்கி கத்திக்கிட்டு, மூவ்மெண்ட்ஸ் கொடுத்துட்டே பாடுவதும் பிடிக்கும். எனக்குப் பிடிச்ச வாழ்க்கையை நான் வாழ்றேன். மற்றவங்களோட விமர்சனத்தைப் பற்றி கவலையே படுறதில்லை. ரசிகர்களும் சினிமா பாடல்களை ஒதுக்கி வைக்குறதில்லை. சமீபத்தில் ஒரு கர்நாடக இசை நிகழ்ச்சிக்குப் பாடப் போயிருந்தப்போ, ஒரு மாமி என் கையைப் பிடிச்சிட்டு, 'நீ பாடுன 'சில்லாக்ஸ்' ரொம்ப நல்லாருக்குடி. சில்லாக்ஸுக்கு என்ன அர்த்தம்?'ன்னு கேட்டாங்க. 'சில் அவுட் ப்ளஸ் ரிலாக்ஸ்'ன்னு அர்த்தம் சொல்லிட்டு வந்தேன், என்று சிரிக்கிறார் சாருலதா மணி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## நீ தந்த வெகுமதி



பெண்ணே!
விளைவைத் தந்து
விழிகள் கேட்டாய் — தந்தேன்.
புல்லாங்குழல் தந்து
சுவாசம் கேட்டாய் — தந்தேன்.
மலர்களைத் தந்து
உறக்கத்தைக் கேட்டாய் — தந்தேன்.
புன்னகையைத் தந்து
கண்ணீர் கேட்டாய் — தந்தேன்.
பெண்ணே!
ஏதேதோ தந்து என்னென்னவோ
கேட்டாய் நீ...
உன்னைத் தந்து என்னைக்
கேட்பாய் என்றிருந்தேன்
நீயோ! உன் திருமண
அழைப்பிதழைத் தந்து என்னை
தீயினில் தள்ளி விட்டாய்




— நந்து

## உன்னை விட்டு..

உன்னைச் சேர முடியாதா
என்று எண்ணம்
தவிக்கிறது என்னில்

கடமையென்று
உணர்வைக் கூட
தள்ளி வைக்கிறது
உன் மீதான என்மனம்.



இருந்தாலும் கூட
என்
நினைவுகளெல்லாம்
புறக்கணிக்கப்பட்டு
உன் பிம்பம் மட்டும்
என்றும்
என் இதயத்தில்
மறையவில்லை.

உன்னைச் சேராமலும்
நீங்காமலும்
அல்லாடும் இந்த வாழ்க்கை
சூனியமாய் நகர்கிறது

இதனால் தான்
தூரப் போக நினைக்கிறேன்
உன்னைவிட்டு
ஆனால்....
உன்
நினைவை விட்டல்ல....

—மிகாயன்

## காகித ஓடங்கள்



இரவு நீயென்றால்
நிலவு நான் என்றாய்
தென்றல் நீயென்றால்
பூவாசம் நானென்றாய்
பொங்கும் கடலிலே
தங்கப்படகுகள்
நாம் என்றும் பிரியாத
இளம் குமிழ்கள்
என்றெல்லாம் சொன்னவள்!
நேற்று வந்த காற்றோடு
நெடுந்தூரம் ஏன் சென்றாய்?

— புதுக்கவி



## ஆறுதல் சொல்ல யார்?



சுகந்தி என்று அழைத்த
சுகமான காலங்கள்
எங்கே....?
பறுசி என்று அழைத்த
இனிமையான
காலங்கள் எங்கே....?
மலரும் இனிமையும்
சேர்ந்த பொழுதுவே.
அந்நியனின்
அநியாயத்தால்
இழந்து தவிக்கின்றேன்.

ஆறுதலுக்கு யாருமின்றி
அரவணைக்க யாருமின்றி
அந்நிய தேசத்தில்
அகதி என்ற
அவமானப் பெயருடன்

ஒரு மூலையில்
சுருண்டு படுத்து
எழும்ப வலுவில்லாது
நெஞ்சிலே வலியும்
மனதிலே பாரமும் — நிரம்பி
உள்ளிருந்து வாடுகின்றேன்
ஆறுதல் சொல்ல
யார் உள்ளார்...?

— ராணிமகள் ரெஜிந்தா

## நாளை...

வருடா வருடம்
நூறாயிரம் பூக்கள்
முகிழ்ப்பு

புலுனிக் குருவிகளின்
தத்தித் தத்தி
புது புலப்பு



கடலை
கரை தொட்டு
திரை தழுவிப்பு

மண்புதைக்கப்படாத
மரம் செடிகளின்
எதிர்பார்ப்பு
புதிய காதலர்களின்......
உதிப்பு
மக்கள் மனசுகளின்
எல்லாம்
ஒன்றிப்பு

விடியலை தேடியே
எங்கள் பயணிப்பு
தொடரட்டும்

- ஆ.முல்லைதங்கன்

## உன் பாதங்கள்.

தோழியே!
நம்மிருவரது பாதைகள்
மாறிப் போனாலும்
நம் பயணங்கள்
முடிவதில்லை. உன்
பாதங்கள் மட்டும்
என் நிழலை விட்டு
விலகிச் செல்கிறது-
கவனம்.
வெப்பம் தாழாமல் அலறிப்
போகிறது - உன்
பாதங்கள்.......!
உண்மைகள் மரணித்து
ஊமையாகி விட்டன
மௌனங்கள் மட்டும்
உயிரோடு இருக்கட்டும்
நான் உனை உணர!

- உமாதவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விமர்சனம்

# சதுரங்கம்




திரையில் இயல்பான ஒரு பத்திரிகையாளனைப் பதிவு செய்த விதத்தில்... முதல் சபாஷ்!

நேர்மையான நிருபர் ஸ்ரீகாந்த் எழுதும் புலனாய்வுக் கட்டுரைகளால் அமைச்சர்கள், அதிகாரிகள், தாதாக்கள் எனப் பலரும் பாதிக்கப்படுகிறார் கள். ஸ்ரீகாந்த்தின் காதலி சோனியா அகர்வால் கடத்தப்படுகிறார். சோனியா வைக் கடத்தியது யார்? அவர் மீட்கப்பட்டாரா என்பதைப் பரபரப்பாக, விறு விறுப்பாகச் சொல்கிறது சதுரங்கம்.

கூட்டத்தில் அமெரிக்க அதிபருக்கே சவால்விடும் அரசியல்வாதி, பீச்சில் அக்கம் பக்கம் பற்றி அக்கறைப்படாமல் நடந்து கொள்ளும் காதலர்கள், அண்ணா சாலையில் உச்சா அடிப்பவர் என்று வருகிற ஆரம்பக் காட்சிகளும் அதையடுத்து வரும் ஆடுவோமே... பள்ளுப் பாடுவோமே பாடலும் இயக்குநர் கரு.பழனியப்பனைப் பளிச்சென்று அடையாளம் காட்டுகின்றன.

மிரட்டுபவர்களை அலட்சியமாக எதிர்கொள்வது, சோனியாவிடம் சுகமான ரொமான்ஸ் செய்வது, சோனியாவைத் தேடி ஏரியாவாரியாக அலைந்து திரிவது என ப.திருப்பதிசாமி கேரக்டரில் பந்தமாகப் பொருந்துகிறார் ஸ்ரீகாந்த். ஆனால், காதலியைத் தேடி போலீஸ், நண்பர்கள் என்று யாருடைய துணையும் இல்லாமல் தனி ஆளாகப் போவதும், சண்டை போடுவதும் ஹீரோயிஸ 'பில்ட்அப்' கள்.

பழைய, துள்ளும் இளமையில் சோனியா அகர்வால். கண்டவுடன் காதல் இல்லாமல் காரணங்களோடு காதல் வருவது யதார்த்தம். ஸ்ரீகாந்த்திடம் காதலைச் சொல்ல முடியாமல் தவிக்கும்போதும், நானாத்தான் உன்னைத் தேடி வந்தேன். நீயா எனக்காக எதையும் செய்யலை... என்று ஏங்கும் போதும் பிரமாதம்!

முதல் பாதியில் நிதானமாகக் கவிதை கோர்க்கும் திவாகரின் ஒளிப்பதிவு, இரண்டாம் பாதியில் தடதடவென அதகளம் காட்டுகிறது. வித்யாசா கரின் இசையில் ஆடுவோமே பள்ளுப் பாடு வோமே, என்ன தந்துவிட்டாய் ஆகிய இரண்டு பாடல்களும் இதயம் நிறைக்கின்றன. விழியும்... விழியும் பாடலில் அறிவுமதியின் வரிகளும் வித்யாசாகரின் இசையும் மயக்கம்!



எங்களை மாதிரி தப்பான ஆளுங்க ஜெயிப்போம்னு நம்புறோம். ஆனா, உங்களை மாதிரி நல்லவங்க தோத்துருவோம்னு பயப்படுறீங்க. போலீஸ்காரன் போலீஸ் வேலை பார்க்கிறான். டாக்டருக்குப் படிச்சவன் டாக்டர் வேலை பார்க்கிறான். ஆனா, பத்திரிகைக்காரன் மட்டும் ஏன்டா எல்லா வேலையும் பார்க்குறீங்க? என்று படம் நெடுக வரும் அழுத்தமான வசனங்கள். விறுவிறுப்பாக நகரும் படத்துக்குக் க்ளைமஃக்ஸ் திருஷ்டிப் பொட்டு.

## காதலர்கள் திருந்தும் படம்

தெலுங்கில் பூமிகா தயாரித்த 'தகிட தகிட' படம் தமிழில் துள்ளி எழுந்தது காதல் என்ற பெயரில் டப் ஆகிறது. இது காதலர்களைப் பார்த்து காதலர்கள் திருந்தும் படம். காதலின் பெயரால் நடக்கும் தவறுகளை ஆணித்தரமாகச் சுட்டிக்காட்டும் படம். தெலுங்கில் ஹிட்டானதால் தமிழுக்கு கொண்டு வருகிறோம் என்றார் இயக்குனர் ஸ்ரீஹரி நானு.



## மாற்றான் படத்தில் கஜல்!



மாற்றான் படத்தில் சூர்யாவுடன் நடிக்கிறேன். இப்படத்தின் ஷூட்டிங் ரஷ்யாவில் நடந்தது. ரஷ்யாவின் ஒவ்வொரு பகுதிக்கு சென்றபோதும் ஒவ்வொரு சரித்திரம் சொன்னார்கள். சாதனைகள் படைக்கப்பட்ட பல்வேறு இடங்களில் ஷூட் டிங் நடத்துவதில் ஆர்வம் காட்டினார் இயக்குனர் கே.வி.ஆனந்த் என்றார் கஜல்.



## ஜெனிலியாவுக்கு தெலுங்கில் நடிக்கத் தடை!

தெலுங்கு நடிகர் சங்கத்தில் உறுப்பினராக சேரச் சொல்லி பலமுறை வலியுறுத்தியும், இதுதொடர்பாக ஜெனிலியாவிடமும் பலமுறை எடுத்து கூறப்பட்டும். ஜெனிலியா இதைப் பற்றி கவலைப்படவே இல்லை. இந்நிலையில் பொறுத்துப் பொறுத்துப் பார்த்த நடிகர் சங்கம், உறுப்பினர் ஆகும் வரை தெலுங்கு படங்களில் நடிக்க ஜெனிலியாவுக்கு தடை விதித்துள்ளது.



## நிஜமான கேரக்டரில் நடிப்பது சவால்

ஒவ்வொரு கேரக்டரையும் தேர்ந்தெடுத்துதான் நடிக்கிறேன். சில நிஜமான கேரக்டரில் நடித்துள்ளேன். நிஜ கேரக்டரில் நடிப்பது சவாலான விஷயம். காரணம் சம்பந்தப்பட்டவர்கள் படத்தை பார்க்கலாம் என்ற பயம் இருந்து கொண்டே இருக்கும் என்கிறார் அஞ்சலி.



## விரத... முடித்...

ஒஸ்தி படத்...
யூலில் முடித்...
அவரை வைத்து ...
தயாரிப்பாளர்களி...
வராத குறை. போ...
மட்டும் மூன்று ...
துக் கொண்டிரு...
என்ன பூகம்ப...

## கமலைப் பார்த்து ...

கமல் இயக்கி நடிக்கும் வி...
நியூயோர்க் நடிகை பூஜா கும...
நடிக்க வாய்ப்பு அமைந்தது...
அதிர்ஷ்டம் தான். ஏற்றுக்...
முடிக்க ஒரு நாளைக்கு 15 ...
வரை கமல் உழைக்கிறார் ...

கவர்ச்சி ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## விக்ரமின் தாண்டவம்!

விக்ரமின் புது அவதாரமாக, தாண்டவம் உருவாகிறது என்றார் இயக்குனர் விஜய். இதுவரை அவரது சினிமா வாழ்க்கையில் இப்படியொரு படம் செய்ததில்லை என்று சொல்லலாம். அடுத்த மாதம் முதல் ஷூட்டிங் நடக்கும் என்கிறார் விஜய்.



## புற்று நோயிலும் தளரவில்லை

நீண்ட இடைவெளிக்கு பிறகு மீண்டும் தமிழுக்கு வந்துள்ளார். மம்தா மோகன் தாஸ். இம்முறை அருண் விஜய் ஜோடியாக 'தடையற தாக்க' படத்தில் நடிக்கிறார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டாலும் நான் துவண்டுவிட வில்லை. தொடர்ந்து'சினிமாவில் நடிப்பேன் என்கிறார்.



## கிளாமர் எனக்குத் தூரம்!

கன்னடத்தில் என் முதல் படம் ஜோஷ் ரிலீசான பிறகு எனக்கு அங்கு வரவேற்பு கிடைத்திருக்கிறது. தமிழில், சமீபத்தில் கார்த்தியுடன் நடிக்கக் கேட்டனர். இரண்டு ஹீரோயின் சப்ஜெக்ட் என்றார்கள். மேலும், பாடல் காட்சிகளில் கவர்ச்சியாக நடிக்க வேண்டும் என்றார்கள். கிளாமர் எனக்குப் பொருந்தாது என்பதால், அந்த வாய்ப்பை மறுத்து விட்டேன் என்கிறார் பாவனா.



நடிகர் தனுஷ் மயக்கம் என்ன படத்தில் நடித்திருப்பதோடு, அனைத்து பாடல்களையும் எழுதியுமிருக்கிறார். அந்த பாடல்களில் காதல் என் காதல் என்ற பாடல் இளைஞர்கள் முணுமுணுக்கும் பாடலாகியிருக்கிறது. இதனால் அடுத்தடுத்து தான் நடிக்கும் படங்களிலும் பாடல் எழுதுவது, பின்னணி பாடுவது என்று திட்டமிட்டு வருகிறார்.

## ...பிரதத்தை ...டித்த சிம்பு

...படத்தை ஒரே ஷெட் ...முடித்திருக்கிறார் சிம்பு. ...வைத்து படமெடுக்கும் மற்ற ...ளர்களின் காதுகளில் புகை ...ப. போடா போடி படத்தை ...ன்று வருடங்களாக இழுத் ...ண்டிருக்கிறார் சிம்பு. புகை ...பூகம்பமே வரும்.



## ...த்து நடிகை பூரிப்பு!

...கும் விஸ்வரூபம் படத்தி... ...ஜா குமார் நடிக்கிறார். இதில் ...மந்தது என்னுடைய ...ற்றுக்கொண்ட வேலையை ...க்கு 15 முதல் 20 மணிநேரம் ...கிறார் என்று நடிகை கூறினார்.

கார்த்திகா

## ...ர்ச்சி இல்லாமலும் ஜெயிக்கலாம்!



வெற்றிபெறுவதற்கு கிளாமர் முக்கியமில்லை. தற்போது தமிழில் சேவற்கொடி படத்தில் கிராமத்துப் பெண்ணாக நடித்திருக்கிறேன். இன்னும் இரண்டு படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறேன். இதில் எதிலுமே கிளாமராக நடிக்கவில்லை என்று நடிகை பாமா கூறினார்.

## அன்னக்கொடி படத்தில் 'கோ' நாயகி

பாரதிராஜா இயக்கப் போகும் கனவுப் படமான அன்னக்கொடியும் கொடி வீரனும் படத்தின் நாயகியாக 'கோ' பட நாயகியும், பாரதிராஜாவின் மோதிரக் கையால் குட்டுப்பட்டு நாயகியாக அறிமுகமானவரான ராதாவின் மகளுமான கார்த்திகா நடிக்கப் போவதாக தகவல்கள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மீனினம்

■ அரியாலை
**செல்வதாசன்**

சந்தையால் வந்த நேரம் தொடக்கம் கனகலிங்கத்தாருக்கு கோபமும், எரிச்சலுமாக வந்தது. இங்கு வீட்டிற்கு வந்தால், அங்குவேறு தொல்லை. மழை பெய்து கோவிலைச் சூழவர நின்ற வெள்ளத்துள், குஞ்சு குஞ்சு மீன்களைப் பிடித்து வந்து கோர்லிக்ஸ் போத்தலுள் ஓட விட்டுப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்த தனது ஒரே ஒரு மகனுக்கு ஓங்கி ஒரு அறை கொடுத்தால் என்ன என்று இருந்தது.

கனகலிங்கம் சந்தையால் வந்த களைப்பு மாறுமுன் மனைவி சரஸ்வதி மகனைப் பற்றிச் செய்த 'கொம்பிளைன்ற்' அவரைக் கடுப்பேற்றிவிட்டது. "எத்தினை நாகங்களைக் கழுவிக்கொண்டு வாற வெள்ளத்துக்குள்ளை போய் உந்த மீனுகளைப் பிடிச்சுக்கொண்டு வந்து வளர்க்கிறான். அடுத்த வருசம் ஸ்கொலசிப் சோதினை. பக்கத்து வீட்டு அருந்தனோடை போய் மீன் பிடிக்கிறது, கொண்டு வந்து வளர்க்கிறது தான் வேலையாய்ப் போய்ச்சுது. அவன் அருந்தன் இந்த முறை ஸ்கொலசிப்பிலை அறுபது மாக்ஸ் எடுத்தது போலத்தான் உவனும் அடுத்த வருசம் ஐம்பதோ, அறுபது மாக்ஸ் எடுக்கப் போறான்?" காலிருந்த எரிச்சல் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தாள் சரஸ்வதி.

உது போதாதா கனகலிங்கத்தாருக்கு..... அதுவும் அன்று சந்தையில் நடந்த விடயங்கள் மண்டையில் வந்து பிச்சுப் பிடுங்க - இந்த முறைப்பாடுகளும் சேர்ந்தால் எப்படி இருக்கும்.

திருநெல்வேலிச் சந்தையில் கனகலிங்கம் ஒரு தனிக் காட்டு ராசா. மொத்தமாகக் கீரை வாங்கி, சில்லறையாகவும் விற்றுக்காசு எண்ணிக் கொண்டு போவதுதான் அவரின் தொழில்.

உரும்பிராய், கோண்டாவில், கொக்குவில் என்று பல பக்கத்தாலும் கீரைப்பிடிகள் வரும். ஒரு பெட்டியில் 75- 100 கட்டு என்று விவசாயிகள் கொண்டு வருவர். அப்படி ஒரு ஏழெட்டு விவசாயிகள் இவரிடமே கீரைப் பிடிகளை ஒப்படைத்துக்காசு வாங்கி சந்தைக் குத்தகைக் காசையும் கொடுத்துவிட்டுச் செல்வர். நூறு பிடி கீரைக்கு அறுநூறு ரூபா சந்தைக் குத்தகைக் காசு விவசாயின் முப்பது ரூபா கொடுத்து விட்டுப் போவர்.

கீரை விளை கொஞ்சம் 'குடி' என்றால் அறுநூறு ரூபாவை விவசாயிக்குக் கொடுத்துவிட்டு அந்த முப்பது ரூபாவையும் குத்தகைக்காரருக்குத் தானே கொடுப்பதாக கனகலிங்கம் ஒத்துக்கொண்டு - வியாபாரம் முடிய அதனைச் 'செற்றில்' பண்ணிவிடுவார்.

இன்றைக்கு கனகலிங்கத்தாருக்கு ஒரு பிரச்சினை வந்துவிட்டது. அது அப்படி ஒன்றும் பெரிய பிரச்சினை இல்லை. அன்று அவருக்கு கீரைக் கடைக்கு ஒரு எதிர்க்கடை வந்துவிட்டது.

அது வேறு ஒருவருமில்லை. கடந்த ஒரு மாதமாக அவருக்குக் கீரை கொண்டுவந்து கொடுத்த மருதலிங்கம் என்பவர். வன்னியில் இருந்து இடம்பெயர்ந்து வந்தவர். உரும்பிராயிலை அவற்றை மச்சான் குணம் வீட்டில் இருப்பவர்.

மருதலிங்கம் வன்னிக்குப்போய் பலவருசமாச்சு. பலாலிதான் அவற்றை இடம். சண்டை தொடங்கி அங்கு சீவிக்க முடியாது என்ற நிலை வந்ததும் புதுக்குடியிருப்புப் போனவர். அங்கு 'செற்றிலாகி' நல்ல காணி, வீடு, வயல், தோட்டம் எனக் கடும் உழைப்பாளி.

இந்த இழவு விழுந்த மனிதநேய நடவடிக்கை வந்து, ஒரு காலில குண்டடிபட்டு எல்லாவற்றையும் இழந்து வந்தவர். பலாலிக்கும் சொந்த வீட்டிற்குப் போகமுடியாது உரும்பிராயில மச்சான் குணம் நாலு பரப்புத் தோட்டக்காணி பயிர்செய்யக் கொடுக்க அதில் கீரையும் போட்டு, கொஞ்ச மரக்கறியும் பயிரிட்டார். நன்றாக ஓடிக் கொண்டிருந்தது.

திருநெல்வேலியில் கீரை கொண்டுவந்து கனகலிங் கத்திடம் கொடுப்பார். அவர் சில நாளைகளில் ஒரு பிடி கீரை, ஆறு ரூபாவிற்கு எடுப்பார். சில நாள்களில் ஒன்பது ரூபா, பத்து ரூபா இப்படிப்போகும்.

கனகலிங்கம் ஆறுரூபாவுக்குக் கீரை எடுக்கிற நாள்களில் ஆறுமொ [illegible] க்கும் பத்துப் பன்னிரண்டு ரூபா வரை விற்பார். சந்தை களைந்தலையத்தொடங்க நான்கு ரூபாவிற்கும் விற்றுத் தீர்த்துவிட்டு, சாக்கைச் சுருட்டி வாழைப்பழக்கடை வைத்திருக்கும் தன் சகலியாரிடம் கொடுத்துவிட்டு மாறிவிடுவார்.

காலை ஆறுமணிக்குத் தொடங்குகிற 'பிஸ்னஸ்' பத்துப் பதினொரு மணியளவில் நிறைவிற்கு வந்து விடும்.

சில்லாலை, நாவாந்துறை, கொழும்புத்துறை, அரியாலை கடைக்காரர் எல்லோரும் வந்து கனகலிங்கத்திடம் தான் பதினைந்து இருபது பிடி கீரை என வாங்கிச் செல்வர். சந்தைக்கு வருகின்ற தனிப்பட்ட ஆள்களும் ஒன்றிரண்டு பிடிகள் என வாங்கிச் செல்ல, அறுநூறு எழுநூறு பிடிகள் ஓடும்.

செவ்வாய், வெள்ளி நாள்களில் ஆறு ரூபா, ஒன்பது ரூபா, பத்து ரூபாவிற்கு வாங்குகின்ற கீரைப்பிடிகளை பதினான்கு, பதினெட்டு.... சில வேளை ஒரு பிடி கீரை இருபது ரூபாவிற்கும் கனகலிங்கம் விற்பார். இருபத்தைந்து முப்பது ரூபா கொண்டுவந்து அதற்கும் கீரை கிடைக்காது திரும்பிச் செல்லும் வாடிக்கையாளரும் உண்டு.

அவ்வாறான நாள்களில், கனகலிங்கத்தார். வீட்டுக்கு கொஞ்சம் கலகலப்பாகத்தான் போவார். வீடு ஒரே பம்பலாக இருக்கும்.

ஆனால் அன்று...... வன்னியில் இருந்து வந்த மருதலிங்கம் எல்லாவற்றையும் குழப்பிவிட்டார்.

கடந்த ஒரு மாதமாக ஒழுங்காக கனகலிங்கத்துக்கு கீரை 'சப்ளை' பண்ணுபவர்களில் மருதலிங்கமும் ஒருவர். தான் சந்தையில் கீரை கொடுக்கும் விலையையும் அதனைக் கனகலிங்கம் விற்றுத்தீர்க்கும் விலையையும் மனத்துக்குள் எடைபோட்டுப் பார்த்தார். கனகலிங்கத்திடம் நேரடியாகக் கொடுக்காமல் தானே நின்று விற்றுத் தீர்த்தால் என்ன என்று யோசித்தார். கடந்த இரண்டு மூன்று வாரங்களாக இதே சிந்தனை அவரின் மனத்துள் அலைமோதிக் கொண்டிருந்தது.

கடந்த சில நாள்களாக இந்தக் கோதாரி விழுந்த கால்.... உன்னி எடுக்க முடியாமல் எலும்பில் சொருகிக் கொண்ட 'ரவுண்ட்ஸ்' காயம் உறுத்தவே தோட்டப்பக்கம் போக முடியாமல் போனது மருதலிங்கத்துக்கு. கீரை பிடுங்கி ஒழுங்கு படுத்தி, கட்டி, கழுவி, சாக்கில் சுற்றி, சயிக்கிளில் சந்தைக்குக் கொண்டுவர காலவலி இடம் தரவில்லை.

அன்று ஒரு ஆயிரம் ரூபாவையும் எடுத்துக் கொண்டு சந்தைக்கு வந்தார். மருதலிங்கம் தானும் ஒரு பக்கத்தில் சாக்கினை விரித்து, கீரைகளை வாங்கி அடுக்கினார். 'பிஸினஸ்' ஜோ என்று ஓடியது. வீடு செல்லும் போது சில்லறைகளையும் தாள்களையும் எண்ணினார். ஒரு நாலாயிரத்து ஐம்பது ரூபா வரையில் அவர் கொண்டுவந்த காசை விடக் கூட இருந்தது. சந்தை நிலவாடகையும் கொடுக்க, நாலாயிரம் ரூபா 'நெற்புறொபிற்'. மகிழ்ச்சியுடன் தாண்டித்தாண்டி நடந்து வீட்டுக்குச் சென்றார் மருதலிங்கம்.

கனகலிங்கத்துக்கு இருப்புக்கொள்ளவில்லை. சாய்வு நாற்காலியில் படுத்துக்கொண்டு ஒரு புகை இழுத்துவிட்டார். அந்த நேரம் பார்த்து அருந்தன், இன்னொரு 'ஜாம்' போத்தலில், ஓடித்திரிகின்ற மீன்களைக் கொண்டு வந்தான். வெள்ளிப் பளிங்கு போல் உள்ளே வட்டமிட்டபடி நீந்திக்கொண்டிருந்தன.

இப்போ பக்கத்து வீடுகளில் எல்லாம் தொட்டியில் வர்ண வர்ண மீன்கள் வளர்ப்பது 'பாஷனாகி' விட்டிருந்தது. கடந்தவாரம் தனது மகனுக்கு ஒரு மீன் தொட்டி வாங்கித் தருவதாக வாக்களித்திருந்தார் கனகலிங்கம். புகை அவரின் மூக்கினால் வெளியேறிக் கொண்டிருந்த போது அந்த வாக்குறுதியும் அவருக்கு ஞாபகத்திற்கு வந்தது. அடுத்தநாள் எப்படியும் வாங்கிக் கொடுக்க, தன்னளவில் உறுதி எடுத்துக் கொண்டார்.

அடுத்தநாள் ஒரு அளவான 'சைஸில்' [illegible] தொட்டியுடன் அழகான வர்ணங்களுடன் ஓரளவு பெரிய மீன்கள்......ஓட்டோவில் கொண்டு வந்து இறக்கினார் கனகலிங்கம். திண்ணையில் அதை இறக்கி வைத்து, தனது மகனைக் கதிரையை அருகில் இழுத்துவந்து போட்டு மீன்களை இரசித்தபடி இருந்தார். வாயில் புகையும் கூடவே..........

மகன் தான் குளத்தில் பிடித்த அந்தச் சின்னஞ்சிறிய மீன்களையும், போத்தலுடன் கொண்டோடி வந்தான்.

கனகலிங்கத்தாரின் மனதுள் எப்படியும் தனது எதிர்க் கடைக்காரனை எதிர்கொள்வது என்ற சிந்தனையே ஓடிக்கொண்டிருந்தது. புகை, வளையங்களாகி வெளிச் சென்று கொண்டிருந்தன. ஏதாவது தீர்வினை அப்புகை வளையத்துள் கனகலிங்கத்தின் கண்கள் துழாவின.

'ஜாம்' போத்தலிலிருந்த ஒரு சிறிய மீனை அவதானமாகப் பிடித்து, தனது தந்தை கொண்டுவந்த மீன் தொட்டியில் கவனமாக இட்டான் மகன்.....ஆஹா...... என்ன அழகாக நெளிந்து அழகு காட்டி ஓடுகிறது. சின்னப் போத்தலுள் அடைபட்டிருந்தவைக்கு இத்தொட்டி ஒரு சமுத்திரமல்லவா.

மற்ற மீன்களையும் போட்டான். மகனின் மகிழ்ச்சியில் பங்கேற்று பார்த்துக்கொண்டிருந்தார். கனகலிங்கம். ஆறு மீன்கள்: அவ்வளவையும் தொட்டியில் இட்டான். அப்பா வாங்கி வந்த மீன்கள், மற்ற மீன்கள், பெரியமீன்கள். ஆனாலும் தனது குஞ்சு மீன்களின் அழகில் லயித்திருந்தது அச் சிறு பிஞ்சு.

'லபக்' - அடிமட்டத்தில் ஒதுங்கியிருந்த தொட்டியோடு கொண்டுவரப்பட்ட மீன், அச்சிறு மீன்குஞ்சுகளில் ஒன்றை 'லபக்' அப்படியே முழுதாக விழுங்கிக் கொண்டது.

காலை நிலத்தில் அறைந்து ஓங்கி அழுதான் கனகலிங்கத்தின் மகன். மற்ற மீனும் 'லபக்'.

பார்த்து இரசித்த கனகலிங்கம் சிகரட் கட்டையை எறிந்துவிட்டு ஏதோ தீர்மானத்திற்கு வந்தவராக ஒரு குரூரச் சிரிப்புடன் எழுந்து சென்றார். ஒன்றும் செய்ய இயலாது தனது கைகளைப் பிசைந்து கொண்டு சோகப் பார்வை பார்த்தது அந்தப் பிஞ்சு உள்ளம்.

அடுத்த நாள் வெள்ளிக்கிழமை தனது மீன் தொட்டியில் இரண்டு துண்டுகளாக மிதக்கும் மற்றைய குஞ்சு மீன்களை மகன் ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டிருக்க தொழிலுக்குப் புறப்பட்டார் கனகலிங்கம்.

சனிக்கிழமைகளிலும், புதன் கிழமைகளிலும் கீரை விலை கொஞ்சம் அப்படி இப்படித்தான். கோழிகளும் ஆடுகளும் குசினிச் சட்டிகளை அலங்கரிக்கும் நாள். நான்கு ரூபாவிற்கும் கீரை விலைபோகாத நாள். கீரை கொண்டு வந்த விவசாயிகளிடம் கீரைகளைக் கொள்வனவு செய்யத் தொடங்கினார் கனகலிங்கம். முகத்தில் மகிழ்ச்சி கொப்பளித்துக் கொண்டிருந்தது. மறுபக்கத்தில் சாக்கினை விரித்து தனது 'பிஸினைத்' தொடங்கினார் மருதலிங்கம்.

வழமையாக ஆறு, ஏழு ரூபாவிற்கு கொள்வனவு செய்யும் கீரையை ஒன்பது, பத்து ரூபாவிற்கு வாங்கத் தொடங்கினார் கனகலிங்கம். அதுவும் சனிக்கிழமை மருதலிங்கமும் தனது பங்கிற்கு ஒன்பது பத்துரூபாய் படி நூறு பிடிவரையில் வாங்கினார். கனகலிங்கம் பன்னிரெண்டு ரூபாப் படி வாங்கத் தொடங்கினார். போட்டி போட்டு மருதலிங்கமும் பதினைந்து ரூபாவிற்கு விவசாயிகளிடம் கொள்வனவு செய்தார்.


சந்தை களைகட்டத் தொடங்கியது. தான் வாங்கிய கீரைப் பிடிகளை ஆறு ரூபாவிற்கும், ஐந்து ரூபாவிற்கும், மளமளவென விற்கத் தொடங்கினார் கனகலிங்கம். 'மலிவு மலிவு' என்று கூவி விற்கத் தொடங்கினார். ஐந்து ரூபா விற்கு இரண்டு பிடிகளாக மொத்த வியாபாரிகளுக்கு... ஐந்நூறு அறுநூறு பிடிகளும் பத்து மணிக்கு முன் விற்றுத் தீர்த்திருந்தார். அப்படியிருந்தும் ஒரு ஐம்பது பிடிகள் எஞ்சியிருந்தன.

அவற்றை ஒரு மூலையில் குவித்து சாக்கை உதறி உருட்டிக் கொண்டார் கனகலிங்கம். வழமை போல வாழைக்குலை விற்கும் தனது சகலபாடியிடம் சாக்கைக் கொடுத்து விட்டு, வீட்டை நோக்கி நடையைக் கட்டினார் அவர். சந்தையும் கலையத் தொடங்கியது.

ஒருபிடி பத்துப் பதினைந்து ரூபாப் படி வாங்கிய கீரைப்பிடிகள் அனைத்தையும் பிடுங்கினால் மாலையில் மாடுகட்டப் போதும். நூறு நூற்றியம்பது வரையிலான கீரைப் பிடிகளை எந்த மூலையில் கொட்டுவது என தலையில் கைவைத்தபடி அமர்ந்து கொண்டார் மருதலிங்கம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உலகிலேயே விலை கூடிய துப்பாக்கி

உலகிலேயே அதி விலை கூடிய துப்பாக்கியாக நவீன ரக துப்பாக்கிகள் இருக்கும் என நீங்கள் நினைத்திருப்பீர்கள். எனினும் உலகில் அதி விலை கூடிய துப்பாக்கி மரத்தினால் ஆன துப்பாக்கியே ஆகும். இத்துப்பாக்கி சுவிஸ் கம்பனி ஒன்றினால் தயாரிக்கப்பட்டது.






# மிகப்பெரிய தங்க நாணயம்

1000 கிலோ நிறையுடைய உலகின் மிகப்பெரிய தங்க நாணயம் உருவாக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் உலகின் பல நாடுகளில் உருவாக்கப்பட்ட நாணயங்களை விட இது பல மடங்கு பெரியது எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அவுஸ்திரேலியாவின் பேர்த் பிரதேசத்தில் எடுக்கப்பட்ட 99.99 வீதம் தூய தங்கத்தில் இருந்து இந்த நாணயம் செய்யப்பட்டுள்ளது. இதன் பெறுமதி 35 மில்லியன் பவுண்கள் என மதிக்கப்பட்டுள்ளது. இது பிரித்தானியா மகாராணியில் அவுஸ்திரேலியா விஜயத்தின் ஞாபகார்த்த சின்னமாக உருவாக்கப்பட்டிருக்கிறது. இதன் ஒரு பக்கத்தில் மகாராணியின் சிரசு உருவமும், மறுபக்கத்தில் அவுஸ்திரேலியாவின் தேசிய மிருகமான கங்காருவின் உருவமும் அமையுமாறு பதிக்கப்பட்டிருக்கிறது. இந்தத் தங்க நாணயத்தை உருவாக்குவதற்கு 18 மாதங்கள் எடுத்ததாக தெரிவிக்கப்படுகிறது. இதன் பெறுமதி அதிகமாக இருந்த போதிலும் சட்டப்படி இதனை கொள்வனவு செய்தவர் 65,000 பவுண்கள் விலை மதித்துள்ளார். இதனைச் சட்டப்படி தங்கக்குவியலாக்க முடியாது. இதனை ஒரு சின்னமாக வைத்திருக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகிறது.




# அதிசயங்களுள் ஒன்றாகும் அமேசன் காடு!




இயற்கையாக உருவான அதிசயங்கள் பற்றிய பட்டியலை சுவிட்சர்லாந்தில் உள்ள புதிய அதிசயங்கள் அறக்கட்டளை வெளியிட்டுள்ளது. அதன்படி, உலக அளவில் 7 அதிசயங்களின் தற்காலிக பட்டியல் நேற்று வெளியிடப்பட்டது. அந்தப் பட்டியலில் ஆப்பிரிக்காவை சேர்ந்த அமேசான் காடு முதல் இடத்தை பிடித்துள்ளது. இரண்டாவது இடத்தை வியட்நாம் ஹலாங் வளைகுடாவும் மூன்றாவது இடத்தை அர்ஜென்டினா இருகு நீர்வீழ்ச்சியும் பெற்றுள்ளன.

# குளிரூட்டியில் அடைபட்டிருந்த வேற்றுக்கிரகவாசி.

ரஷ்யாவின் மேற்குப் பகுதியிலுள்ள Petrozavodsk நகரில் பெண்ணொருவரின் வீட்டில் இரண்டு வருடகாலமாக குளிர்சாதனப் பெட்டியில் அடைபட்டிருந்த விசித்திர உருவம் பலரையும் வியப்பில் ஆழ்த்திவருகிறது. ஒரு சிசு போன்றே தோன்றினாலும் முகம், கைகள் முற்றிலும் வேறுபட்டவை. பொலித்தீன் உறையால் சுற்றப்பட்ட நிலையில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தது. இது ஏலியனாக இருக்கலாமென்பது தான் பலரின் ஊகம்! இந்த பெண்ணுக்கும் இது தெரியாதாம். குளிரூட்டியில் பொருட்களை நிரப்பி வைத்ததால் தன்னால் இதை இனங்கான முடியவில்லையெனவும் குறிப்பிட்டார். இதை மேலதிக ஆய்வுகளுக்காக பயன்படுத்தவுள்ளனர்.





# 18 வயது அமெரிக்க மாணவர் மேயர் ஆனார்.


அமெரிக்காவின் லோவா பகுதியில் ஆர்டாம் என்ற சிறிய நகரம் உள்ளது. இந்த நகரத்துக்கான மேயர் தேர்தல் நடந்தது. அதில் போட்டியிட்ட 18 வயது வாலிபர் ஜெரமி மின்னியர் வெற்றி பெற்றார். இவர் ஹாம்டன் துமாந்த் என்ற இடத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் படித்து வருகிறார். இவர் தன்னை எதிர்த்துப் போட்டியிட்ட மேயர் வில்றில் ஹோமரை 24 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். மாணவர் மின்னியருக்கு அவர் தங்கியுள்ள ஆர்டாம் பகுதி மக்கள் அமோகமாக ஓட்டளித்து உள்ளனர். ஏனெனில் இப்பகுதியை முன்பு மேயர் பதவி வகித்தவர் இதில் போட்டியிட்டு கொள்ளவில்லை. இதனால் தான் இவர் வெற்றி பெற்றார். மாணவர் மின்னியரின் தந்தையும் முன்னாள் மேயர் ஆவார். மின்னியர் வருகிற ஜனவரி 3-ந்தேதி மேயர் ஆக பதவி ஏற்கிறார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெற்றுக்கண்களால் பார்க்க முடியாத முட்டைகள்!



நாம் பல்வேறு உயிரினங்களின் முட்டைகளை எமது வெற்றுக்கண்களால் கண்டிருக்கின்றோம். உண்டும் இருக்கின்றோம். ஆனால் நுண்ணங்கிகளின் முட்டைகளை பார்த்திருப்போமா? அல்லது ருசித்துத்தான் இருப்போமா? ருசிப்பது என்பது கடினமான காரியம்தான் ஆனால் நுணுக்குக்காட்டியினூடு அவற்றை அவதானிக்க முடியும். அவ்வாறு பெறப்பட்ட சில நுண்ணங்கிகளின் முட்டைகள் தான் இவை.



# நாசா 2025ல் வெளியிடவிருக்கும் எதிர்கால விமானங்கள்




அமெரிக்காவின் டெயிலி மெயில் பத்திரிகையில் வெளியான தகவலின்படி, நாசா தற்போதுள்ள விமானத்தின் வேகத்திலும் பார்க்க 85% மேலும் அதிவேகமாக செல்லக் கூடிய விமானங்களை 2025ம் ஆண்டுகளில் வெளியிடவிருக்கின்றது. இவ் விமானங்களிற்கான மாதிரி படங்களே இவை.


# நீங்கள் இதுவரை பார்த்திராத வாகனங்கள்.

[illegible] பார்த்திரு? [illegible] இவ்வாறான வாகனங்களை நீங்க(ள்) பார்த்திருக்கவே மாட்டீர்கள்






# கொஞ்சம் புதுமையான கழிவறை கழிப்பான் வடிவமைப்புக்கள்.




என்னவெல்லாம் இவர்கள் செய்றாங்கப்பா! கழிவறை கழிப்பான்களை எவ்வாறெல்லாம் புதுமையாக வடிவமைக்கின்றார்கள் என பார்த்தீர்களா? நீங்களும் கலையார்வம் கொண்டவரானால் ஏதாவது புதுமையாக செய்யலாமே.



# ஒப்பனை செய்யப்பட்ட கைகள்!

கைகளைப் பயன்படுத்தி பல கண்கவர் கலைகளை செய்ய முடியும் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. ஆனால் இங்கு பாருங்கள் கையையே ஒப்பனை செய்து பல்வேறு உருவங்களாக மாற்றி அமைத்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மண்டூர் ஓட்டுத்தொழிற்சாலை மீண்டும் உருப்பெறுமா?

■ மட்டக்களப்பிலிருந்து - சக்தி



மட்டக்களப்பு வாவியின் அழகும், சுற்றி வரவுள்ள நெல் வயல்களும் நிறைந்த இயற்கை எழில் மிக்க அழகிய கிராமம்தான் மண்டூர். கிழக்கிலங்கையின் "சின்னக் கதிர்காமம்" என்று போற்றப்படுகின்ற மண்டூர் முருகன் ஆலயமும் இந்த ஊருக்கு பெருமை சேர்க்கின்றது. விவசாயிகளை மட்டுமல்லாது கல்விமான்களையும், பண்டிதர்களையும், கவிஞர்களையும், உருவாக்கிய இந்தக் கிராமத்தில் கனிவளங்களும் உள்ளன.

கடந்த யுத்தத்திற்கு முன்பான காலப் பகுதிகளில் இந்தப் பகுதி மக்கள் மண்ணின் வளத்தைப் பயன்படுத்தி உச்சப்பயனை அடைந்து வந்தனர். ஆனால், நாட்டில் ஏற்பட்ட துரதிஷ்டவசமான யுத்தத்தின் காரணமாக இவை அனைத்தும் தூர்ந்து போய்க் கிடக்கின்றன. இவ்வாறான வளங்களை மீளப் பயன்படுத்துவதற்கு இந்தப் பகுதி மக்கள் எதிர்பார்த்துக் காத்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

மண்டூர் கிராமத்தின் கனியவளம் "களிமண்" ஆகும். இதனைப் பயன்படுத்தி மண்டூர் கிராமத்தில் பெரியதொரு ஓட்டுத் தொழிற்சாலை நிறுவப்பட்டது. அதன் மூலம் அன்றைய காலகட்டத்தில் அந்தப் பிரதேசம் மட்டுமல்ல, மட்டக்களப்பு மாவட்டமும் பிரபலம் பெற்றிருந்தது.

மட்டக்களப்பு நகருக்கு தெற்கே சுமார் 35கிலோ மீற்றர் தொலைவில்தான் இக்கிராமம் அமைந்துள்ளது. இங்குள்ள மூலவளங்களை கூர்ந்து ஆராய்ந்த அன்றைய தமிழர் விடுதலைக்கூட்டணி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் திரு.கணேசலிங்கம் தனது அயராத முயற்சியின் பலனாக ஓர் ஓட்டுத் தொழிற்சாலையை நிறுவ வேண்டும் அதன் மூலம் மக்களுக்கு தொழில்வாய்ப்பை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்ற நோக்குடன் 1977ம் ஆண்டு மண்டூர் ஓட்டுத் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்தார்.

அதன் பலனாக படிப்படியாக வளர்ச்சி அடைந்த ஓட்டுத் தொழிற்சாலை காலப் போக்கில் ஒரு பிரபல்யம் பெற்ற தொழிற்சாலையாக மாற்றமடைந்து மிளிர்ந்தது. இதில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளிகள் வேலைவாய்ப்பினைப் பெற்றிருந்தனர். அவர்களின் வாழ்வாதாரமும் வளர்ச்சியடைந்தது. இதுவே மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கிய ஒரே ஒரு ஓட்டுத் தொழிற்சாலையாகும். இதன்மூலம் மட்டக்களப்பு மாவட்டம் மாத்திரமல்ல கிழக்கு மாகாணமே பல நன்மைகளை அடைந்திருந்தது. இதனால் தூர இடங்களுக்குச் சென்று ஓடு எடுத்து வருவது முற்றாகத் தடைப்பட்டு மிகவும் பெறுமதி வாய்ந்த தரமான ஓடுகளை நியாயமான விலையில் உள்ளூரிலேயே கொள்வனவு செய்யும் வாய்ப்பு இம் மாவட்ட மக்களுக்கு மாத்திரமல்லாமல் கிழக்கு மாகாணத்துக்கே கிடைத்திருந்தது.

ஓடு வாங்குவதாக இருந்தால் மண்டூர் ஓட்டுத் தொழிற்சாலையின் ஓடுதான் வாங்க வேண்டும் என்று சொல்லும் அளவுக்கு மண்டூர் ஓடு தரமானதாக இருந்தது. இதனால் நல்ல வருமானம் கிடைத்ததோடு தொழில் வாய்ப்புக்களும் பெற்றுப் பயனடைந்தனர். இவ்வாறு இருக்கையில் 1980களில் இத்தொழிற்சாலை "சிங்கிங்ஸ் என்ரபிரைசஸ்" எனும் பெயரில் மாற்றப்பட்டு அதன் தரம் மேலும் உயர்த்தப்பட்டது. பின்னர் இத்தொழிற்சாலை 1983இல் பொன்.செல்வராசா என்பவரால் பொறுப்பேற்கப்பட்டு நடாத்தப்பட்டு வந்தது. எண்பதுகளின் பிற்பகுதி இந்திய இராணுவத்தினர் இங்கு நிலைகொண்டிருந்த நிலையில், மிகவும் சிரமமான சூழ்நிலையில் அவர் இத்தொழிற்சாலையை நடாத்தி வந்தார். இந்திய இராணுவத்தின் தொல்லைகள் இந்த தொழிற்சாலை மீது அடிக்கடி அதிகரித்த வண்ணமே இருந்தது.

பல சிரமங்களை எதிர் கொண்டு பலரின் தொழில் வாய்ப்புக்களையும் தக்கவைத்துக் கொண்டு 1988வரை மண்டூர் ஓட்டுத் தொழிற்சாலை இயங்கிவந்தது. இந்திய இராணுவம் நாட்டை விட்டு வெளியேறிய பின் 1990இல் இலங்கை இராணுவத்தின்





ஆக்கிரமிப்பு இத்தொழிற்சாலை மீது பாய்ந்தது. இக்காலகட்டம் மிகவும் கஷ்டமானதாக அமைந்தது. இடப்பெயர்வு, சொத்திழப்பு, உயிரிழப்பு என பல இழப்புகளை மக்கள் சந்தித்தனர். இவையெல்லாவற்றையும் கடந்து இத்தொழிற்சாலையை நடாத்தி வந்த வேளை 1990ல் இலங்கை இராணுவம் இத் தொழிற்சாலையை முற்றுகையிட்டு ஆக்கிரமித்து அங்கு இ[illegible] பெரியதொரு முகாம் ஒன்றையும் அமைத்துக் கொண்டது. அன்றிலிருந்து அத்தொழிற்சாலை இயங்கவில்லை. யாரும் அதன் அருகேயும் போக முடியாது. தொழிற்சாலையை நடாத்துவதற்கு அனுமதி மறுக்கப்பட்டது. இராணுவத்தினர் அத்தொழிற்சாலையின் அருகே செல்வதற்கும் அனுமதிக்கவில்லை. அதன் அனைத்துச் சொத்துகளும் அழிக்கப்பட்டன. கட்டிடங்கள் உடைக்கப்பட்டன. பின்னர் 2005ம் ஆண்டு இராணுவத்தினர் அந்த இடத்தை விட்டு வெளியேறினர்.

பின்னர் அங்கு சென்று பார்த்தால் தரிசு நிலமும் உடைக்கப்பட்ட கட்டிடமும் மாத்திரமே காணப்பட்டன. இந்தத்தொழிற்சாலையினை மீள்நிருமாணம் செய்து இந்தப்பகுதி மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களையும் சேவையினையும் மேற்கொள்ள இன்றுவரை யாரும் முன்வராத நிலையிலேயே காணப்படுகின்றது.

கிழக்கு மாகாண சபை இந்தத் தொழிற்சாலையை மீள இயங்கச் செய்யுமா என்ற கேள்வி இந்தப் பிரதேச மக்கள் மத்தியில் எழுந்துள்ளது. கிழக்கின் அபிவிருத்தி குறித்து திட்டமிட்டுள்ள மத்திய அரசும், கிழக்கு மாகாணசபையும் ஏன் இந்த விடயத்தில் இதுவரைக்கும் சிறிதளவேனும் அக்கறை காட்டவில்லை?

கிழக்கு மாகாணத்தில் தொழிற்பேட்டைகளை அமைத்து அதிகளவான தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டியது கிழக்கு முதலமைச்சரின் கடப்பாடு என இந்தப் பகுதி மக்கள் கருதுகின்றனர். இவ்வேளையில் மத்திய அரசாங்கம் "கிழக்கின் உதயம்" "கிழக்கின் அபிவிருத்தி" "கமநெகும" "மகநெகும" "திவிநெகும" என்றெல்லாம் புதிய திட்டங்களை முன்வைக்கின்ற போதிலும் தூர்ந்து போய்க் கிடக்கின்ற கனியவளங்களையும் தொழிற்பேட்டைகளையும் ஏன் இன்றும் கண்டு கொள்ளாமல் இருக்கின்றது? இதுபோன்ற திட்டங்களை உரியவர்கள் அரசுக்கு அறிவிக்கவில்லையா? கடந்த காலங்களில் நடைபெற்ற சோகமான நிகழ்வுகளைக் கடந்து, அவற்றை எல்லாம் மறந்து, தற்போது கஷ்டமான சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் இம்மக்களுக்கு வழிகாட்டல்களையும் தொழில் வாய்ப்புக்களையும் செய்து கொடுக்கவேண்டியது அரசியல்வாதிகளதும் அதிகாரிகளதும் கடமையல்லவா?

மண்டூர் ஓட்டுத்தொழிற்சாலையை புனர்நிர்மாணம் செய்து இயங்கச் செய்வது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் பொன்.செல்வராசா அவர்களிடம் கேட்ட போது, தற்போது மண்டூர் ஓட்டுத் தொழிற்சாலை சம்பந்தமான ஆவணங்கள் முன்னாள் கூட்டணி எம்.பியான கணேசலிங்கத்தின் துணைவி திருமதி.ஜே.என். கணேசலிங்கம் அவர்களின் பொறுப்பில் உள்ளது எனவும், தனியார் யாரும் இதனைப் புனரமைத்து நடத்த முன்வரும் பட்சத்தில் அவர்களுக்கு உரிய வசதிகளைச் செய்து கொடுக்கலாம் என்றும் கூறினார். இதனால் அதிகப்படியான மக்களுக்கு தொழில் வாய்ப்புக்களையும் பெற்றுக்கொடுக்கலாம் எனவும் அவர் கூறினார். இது சம்பந்தமாக அரசாங்கத்திற்கு எடுத்துக் கூறவுள்ளதாகவும் எதிர்காலத்தில் இத்தொழிற்சாலையை இயங்கச் செய்ய முயற்சிகள் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் கூறினார்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

13.11.2011 - 19-11-2011

# ராசி பலன்

எப்பொழுதும் மற்றவர்களுக்கு முன் உதாரணமாக வாழுபவர்களே! சுக்ரன் சாதகமான வீடுகளில் செல்வதால் உங்கள் செயலில் வேகம் கூடும். எதிர்பார்த்த பணம் வரும். கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். விரும்பிய பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். வீடு வாங்குவது, கட்டுவது சாதகமாக அமையும். பிள்ளைகளிடம் இருந்த பிடிவாதம் நீங்கும். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பூர்வீக சொத்துப் பங்கை கேட்டு வாங்குவீர்கள். வழக்கு சுமுகமாகும்.

தடைக்கற்களை படிக்கட்டுகளாக்கி முன்னேறுபவர்களே! செவ்வாய் சாதகமாக இருப்பதால் சவால்களில் வெற்றி பெறுவீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பணவரவு அதிகரிக்கும். எதிர்பார்த்த விலைக்கு பழைய மனையை விற்பீர்கள். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். மகளுக்கு தள்ளிப் போன திருமணம் கூடி வரும். வாகனம் சரியாகும். வீட்டில் கழிவு நீர், குடிநீர்ப் பிரச்னை தீரும். உறவினர்கள், நண்பர்களால் ஆதாயம் உண்டு.

லாப வீட்டிலேயே குரு தொடர்வதால் எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். நாடாளுபவர்களின் நட்பு கிடைக்கும். திருமணம், சீமந்தம் போன்ற சுப நிகழ்ச்சிகளால் வீடு களைக்கட்டும். குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து பழைய பிரச்னைகளுக்கு முக்கிய தீர்வு காண்பீர்கள். பிள்ளைகளின் உயர்கல்வி, உத்தியோக விஷயங்கள் நல்ல விதத்தில் முடியும். பழைய கடனில் ஒரு பகுதியை தீர்க்க முயல்வீர்கள். வழக்கு சாதகமாகும். உடன்பிறந்தவர்கள் வகையில் நிம்மதி பிறக்கும்.

அதிகாரப் பதவியில் இருப்பவர்களால் ஆதாயம் உண்டு. வர வேண்டிய பணம் கைக்கு வரும். வீடு, மனை வாங்குவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட வழக்குகள் வெற்றியடையும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்று வீர்கள். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். தூரத்து சொந்தங்கள் தேடி வருவார்கள். சகோதர வகையில் நன்மை உண்டு.

புதனும், சுக்ரனும் சாதகமான வீடுகளில் உங்களின் மாறுபட்ட அணுகுமுறையால் வெற்றி பெறுவீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வீட்டில் அடுத்தடுத்து சுப நிகழ்ச்சிகள் ஏற்பாடாகும். பணவரவு அதிகரிக்கும். பிள்ளைகளால் மதிப்புக் கூடும். விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். பால்ய நண்பர்கள் உங்கள் தேவையறிந்து உதவுவார்கள். பூர்வீக சொத்துப் பிரச்னை தீரும். சகோதரங்கள் பாசமழைப் பொழிவார்கள். சகோதரிக்கு திருமணம் கூடி வரும்.

தனுவும், சுக்ரனும் சாதகமாக இருப்பதால் பணப்புழக்கம் அதிகரிக்கும். வி. ஐ. பிகள் உதவுவார்கள். வீடு வாங்க வங்கிக் கடன் கிடைக்கும். குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். மகனுக்கு இருந்த பிடிவாதம் விலகும். மகளுக்கு விருப்பப்படி திருமணம் முடிப்பீர்கள். பழுதான மின்சார சாதனங்கள், மின்னணு சாதனங்களை மாற்றுவீர்கள். நட்பு வட்டம் விரியும். உறவினர்கள் சிலர் உங்கள் உதவியை நாடுவார்கள்.

செவ்வாய் வலுவாக இருப்பதால் தன் பலம் பலவீனத்தை உணர் வீர்கள்- எதிர்பாராத பணவரவு உண்டு. பழைய இடத்தை விற்று புது வீடு வாங்குவீர்கள். கணவன்-மனைவிக்குள் அன்யோன்யம் பிறக்கும். பிள்ளைகள் உங்கள் மனங்கோணாமல் நடந்து கொள்வர். சகோதரர்கள் உங்களின் பெருந்தன்மையைப் புரிந்துக் கொள்வார்கள். மனைவி வழியில் உதவிகள் உண்டு. வழக்கில் திருப்பம் ஏற்படும்.

எதிர்பாராத பணவரவு உண்டு. புது வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தின் அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். பிள்ளைகள் தங்கள் தவறை உணருவார்கள். உறவினர்கள், நண்பர்களால் இருந்த அன்புத் தொல்லை குறையும். வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். முன்கோபம், உடல் உஷ்ணத்தால் அடி வயிற்றில் வலி, வீண் டென்ஷன் வந்துச் செல்லும். ராகு, கேது சரியில்லாததால் சந்தோஷத்தால் நல்லவர்களை இழக்க வேண்டி வரும்.

சனி வலுவாக அமர்ந்திருப்பதால் தினந்தோறும் எதிர்பார்த்து ஏமாந்த தொகை கைக்கு வரும். எதிர்த்தவர்கள் நண்பர்களாவார்கள். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். பிள்ளைகள் படிப்பில் முன்னேறுவார்கள். தந்தை உடல் நிலை சீராகும். அரசால் அனுகூலம் உண்டு. வீடு கட்ட வாங்க வங்கிக் கடன் உதவி கிடைக்கும். அயல்நாடு செல்ல விசா கிடைக்கும். ஆபரணம் சேரும். உறவினர்கள், நண்பர்கள் வீட்டு விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.


சூரியன் சாதகமான வீடுகளில் செல்வதால் தடைப்பட்ட வேலைகள் உடனே முடியும். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிப்பீர்கள். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். உறவினர்கள், நண்பர்கள் மத்தியில் செல்வாக்குக் கூடும். பூர்வீகச் சொத்துப் பிரச்னை சுமுகமாகும். நீதிமன்ற வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். வெளிநாட்டிலிருந்து நல்ல செய்தி வரும்.


புதன் வலுவாக இருப்பதால் சோர்வு நீங்கி உற்சாகமடைவீர்கள். புது வேலை அமையும். தங்க ஆபரணம் வாங்குவீர்கள். அரைகுறையாக நின்ற வீடு கட்டும் பணியை தொடர்வீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனப் பழுதை சரி செய்வீர்கள். மனைவிவழியில் அனுகூலம் உண்டு. உங்களிடம் பழகும் நண்பர்கள், உறவினர்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வீட்டில் கழிவு நீர், குடிநீர் பிரச்னை தீரும். ராகு, கேதுவால் வேலைச்சுமை, இனந்தெரியாத கவலை, எதிலும் ஈடுபாடற்ற நிலை வந்து போகும்.


செவ்வாய் வலுவாக இருப்பதால் புகழ், கௌரவம் கூடும். பணவரவும் உயரும். உங்கள் ரசனைக் கேற்ப வீடு, மனை வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். தங்கப் பொருட்கள் வாங்குவீர்கள். வீட்டை அழகுப்படுத்துவீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். கேது 3-ம் வீட்டில் வலுவாக நீடிப்பதால் கற்றறிந்தவர்களின் சுயரூபத்தை அறியும் வாய்ப்பு வரும்.


# வியக்க வைக்கும் நீர்மூழ்கிக்கப்பல்கள்!

தொழில்நுட்ப வளர்ச்சியின் பயனாக உலகிற்கு அறிமுகப் படுத்தப்பட்ட சாதனங்களில் நீர்மூழ்கிக்கப்பலும் ஒன்றாகும். பெரும்பாலும் இராணுவ நோக்கத்திற்காகவே இது பயன்படுத்தப்படுகின்றது. அதனையும் எவ்வாறெல்லாம் மாற்றி வடிவமைத்துள்ளார்கள் பாருங்கள்...























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# அம்பாந்தோட்டை சுடலைஞானம்

## புலம்பல் – I

"இப்பிடி நடக்குமெண்டு முந்தியே தெரிஞ்சிருந்தால் அந்தப் பிழையை நான் விட்டிருக்க மாட்டன். தெரியாத்தனமா நான் செய்த பிழை இப்ப எனக்கே திருப்பி வந்து அடிக்குது. பெரிய ஆபத்தில இருந்து காப்பாத்தி விட்டனான் என்ட நன்றிக் கடன் கூட இல்லாமல் எனக்கு ஆப்பு அடிக்கிறதிலேயே குறியா இருக்கிறவங்களை ஒரு கை பாக்காம ஓயமாட்டன்"

வழமையான ஊர்க்குடிகாரர்களின் 'ரேஞ்சுக்கு' இப்படி வயிற்றிலும் மார்பிலும் அடித்து புலம்பிக் கொண்டிருப்பவர் வேறு யாருமல்ல. இலங்கையின் முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவேதான்.

பிரதம நீதியரசராக இருந்த காலத்தில் சரத் என்.சில்வா ஆடிய ஆட்டங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதிகாரத்தின் காலை கொஞ்சுகின்ற செல்லப்பிராணியாக நீதித்துறையை மாற்றியதில் சரத் என்.சில்வாவுக்கும் முக்கிய பங்குண்டு. ஆட்சியில் உள்ளவர்களின் தாளத்திற்கு ஏற்றபடி இவர் ஆடிய ஆட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களும், அதேபாளவிற்கு பயனடைந்தவர்களும் ஏராளம். இதனால்தான் நடுராத்திரியில் கடற்கரையோரமாக கார் பெரிதாகக் குலுங்குமளவுக்கு ஒரு இளம் பெண்ணோடு நின்றிருந்த சரத் என்.சில்வா மீது எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவே இல்லை.

சரத் என்.சில்வா விசாரித்த வழக்குகளில் 'ஹெல்ப்பிங் அம்பாந் தோட்டை' முக்கியமானது. இலங்கையின் கரையோரங்களில் சுனாமி அலைகள் சூறையாடியதால் உலக நாடுகளின் அனுதாபப் பார்வை பாதிக்கப்பட்ட பிரதேசங்கள் மீது விழுந்தது. பிணங்களை வைத்தே அரசியல் செய்யும் வல்லமை கொண்ட ஆட்சியாளர்கள், இதை வைத்தும் தம் பிழைப்பை நடத்த திட்டம் போட்டனர். சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் அம்பாந்தோட்டையும் ஒன்று. சிதைந்து போன அம்பாந்தோட்டையை மீளக் கட்டியெழுப்பவென இப்போதைய ஜனாதிபதியும் அப்போதைய பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவால் 'ஹெல்ப்பிங் அம்பாந்தோட்டை' என்ற நிதியம் ஆரம்பிக்கப்பட்டது. டொலர்களும், பவுண்களும், யூரோக்களும் குவியத் தொடங்கின. வந்த பணத்தில் பக்கநுக் குச் சென்றடைந்தது மிகச் சொற்பமான தொகைதான். ஏறக்குறைய 200 கோடி ரூபா வுக்கு மேல் மகிந்த ஏப்பம் விட்டுவிட்டார் என்ற குற்றச்சாட்டுகள் பலமாக எழத்தொடங்கின. வெறும் வாய்ப்பேச்சுகளோடு நின்றுவிடாமல் மகிந்தவுக்கெதிரான வழக்கும் தொடுக்கப்பட்டது. ஜனாதிபதி வேட்பாளராக மகிந்த அறிவிக்கப்பட இருந்த தருணத்தில் இந்த வழக்குத் தொடரப்பட்டதால் அவர் தேர்தலில் போட்டியிடுவது சந்தேகத்துக்குரிய விடய மாக மாறியது. மகிந்தவுக்குப் பதிலாக அனுரபண்டாரநாயக்கவே ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தப்படுவார் என்ற கதைகளும் எழத்தொடங்கின. ஆனால் யாருமே எதிர்பாராத வகையில் மிகச் சிக்கலான வழக்கை தூசிபோல ஊதித்தள்ளிக் கொண்டு மகிந்த விடுதலையானார். மகிந்தவை விடுவித்தவர் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா.

| | | |
|---|---|---|
| மாகாணம் | – | தென்மாகாணம் |
| தலைநகரம் | – | அம்பாந்தோட்டை |
| மக்கள் தொகை | – | 525000 க்கும் மேல் |
| பரப்பளவு (நீர்) | – | 2609 (4%) |
| மக்களடர்த்தி | – | 210 சதுர கி.மீ |

இலங்கையின் கரையோர மாவட்டமான அம்பாந்தோட்டை இலங்கை ஜனாதிபதியின் பூர்வீகப் பிரதேசம் என்பதால் இன்னும் இன்னும் பிரபலமாகிக்கொண்டே வருகிறது.

காலம் தனது சேணையில் அவசரத்தனத்தோடு திரைகளை இழுத்து ரூபடி. காட்சிகளில் எதிர்பாராத மாற்றங்களைக் கொண்டுவந்தது. சர்வ வல்லமையும் பொருந்திய ஜனாதிபதியாக மகிந்த உருவெடுக்க முன்னாள் பிரதம நீதியரசர் என்ற பெயரோடு சரத் என். சில்வா ஓரமாகச் சென்றார். எனினும் மகிந்தவின் ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவர சரத்பொன்சேகாவுக்குப் பின்னால் அணி திரண்டவர்களில் சரத் என். சில்வா முக்கியமானவர். எனினும் சரத் பொன்சேகா ஜனாதிபதித் தேர்தலில் தோற்றுப் போக மகிந்தவுக்கு எதிரானவர்கள் வேட்டையாடப்பட்டனர். பொன்சேகா சிறைப்பறவையானார். இப்போது அவருக்கு மூளையாகச் செயற்பட்ட சரத் என். சில்வாவுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்க அரசு கச்சையைக் கட்டிக்கொண்டு களத்தில் இறங்கியுள்ளது. இந்நிலையில் தான் பக்கச் சார்பாகச் செயற்பட்டு தவறான வகையில் தீர்ப்புக்கூறி மகிந்தவை 'ஹெல்ப்பிங் அம்பாந் தோட்டை' வழக்கிலிருந்து விடுவித்து சங்கடியைப் போட்டுடைத்துள்ளார் முன்னாள் பிரதம நீதியரசர். இப்படித்தான் அவர் தவறான வகையில் முடிவெடுத்து தமிழர்களின் தாயகப் பிரதேசமான வடக்குக் கிழக்கு மாகாணங்களை தனித்தனியாக துண்டாடியிருந்தார். வரலாற்றின் விதி ஊழ்வினை எப்போதுமே உறுத்தவே செய்யும். 'ஹெல்ப்பிங் அம்பாந் தோட்டை' வழக்கில் அதிகாரத்துக்காக நீதியை அடகுவைத்ததன் பலனை சரத் என்.சில்வா இப்போது அனுபவிக்கத் தொடங்கியிருக்கிறார்.

## புலம்பல் 2

"அவர்கள் மைதானத்தை முன்வைத்துப் போட்டியிட்டார்கள். நாங்கள் திட்டத்தை முன்வைத்துப் போட்டியிட்டோம். மேற்குலகத்தவர்கள் ஆடம்பரத்திற்குத் தான் முக்கியத்துவம் கொடுக்கிறார்களே தவிர ஒரு நாட்டின் அர்ப்பணிப்பை உணர மறுக்கிறார்கள். அதனால்தான் நாங்கள் தோற்றுப்போனோம்."

தலையில் துண்டைப் போட்டபடி வருவோர் போவோரிடமெல்லாம் இப்படித்தான் புலம்பிக்கொண்டிருக்கிறார் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால்.


பொதுநலவாயப் போட்டிகளை 2018ம் ஆண்டு இலங்கையில் அம்பாந்தோட்டையில் நடத்த இலங்கை பகீரதப் பிரயத்தனம் செய்தது. கோடிக்கணக்கில் பிரசாரத்திற்கும் செலவிடப்பட்டது. எப்படியும் தனக்கே இந்தச் சந்தர்ப்பம் கிடைக்குமென இலங்கை நம்பியிருந்தது. கொழும்புக்கு மாற்றான தலைநகராக அம்பாந்தோட்டையை உருவாக்குவதில் மகிந்தவாதிகள் கூடுதல் அக்கறை கொண்டு செயற்படுகிறார்கள். சர்வதேச கிரிக்கெட் மைதானம், இலங்கையின் மிகப் பெரிய செயற்கைத் துறைமுகம், சர்வதேச விமானநிலையம் என்பனவெல்லாம் அவசர அவசரமாக அம்பாந்தோட்டையில் அமைக்கப்பட்டன. சுற்றுலாப் பயணிகளுக்கு அம்பாந்தோட்டைக்குச் செல்லக்கூடிய வகையில் விசேட விளம்பரங்களும் தொனிக்கப்பட்டன. இதன் ஒரு அங்கமாகவே- கொழும்பை விடவும் நவீனத்துவம் கொண்ட நகராக- அம்பாந்தோட்டையை மாற்ற பொதுநலவாயப் போட்டிகளை பயன்படுத்த இலங்கை அரசு தீர்மானித்தது. ஆனால் அது நிராசையாகி விட்டது.


இலங்கை அதிகாரிகள் வெறும் கையால் முழம் போடுவது போல வெறும் திட்டத்தோடு மட்டுமே அவுஸ்திரேலியாவுக்குச் சென்றனர். அடிப்படை வசதிகளோ, பொருத்தமான மைதானங்களோ, பெருமளவு பார்வையாளர்கள் தங்கக் கூடிய விடுதிகளோ ஏனைய கட்டமைப்புகளோ பெரிதாகக் கொண்டிராத அம்பாந்தோட்டையை 2018 க்குள் போட்டிசேற்றவாறு தயார் செய்து விடுவோம் என்று இலங்கை அதிகாரிகள் முன்வைத்த கதைகளை எவரும் நம்பத் தயாராக இல்லை. ஏனெனில் இலங்கையைவிட பன்மடங்கு பொருளாதாரப் பலம் கொண்ட இந்தியாவால் கூட 2010ல் பொதுநலவாயப் போட்டிகளை ஒழுங்காக நடத்த முடியவில்லை. இந்த லட்சணத்தில் இலங்கையின் வாய்ப்பந்தல் எடுபடாமலே போயிற்று.

இவற்றின் மூலம் புலப்படும் அல்லது வெளிப்படுத்தப்படும் நீதி யாதெனில் அம்பாந்தோட்டை சரத் என். சில்வாவுக்கும், அஜித் நிவாட் கப்ராலுக்கும் சுடலை ஞானத்தைக் கொடுத்ததைப் போல ஆடிக்கொண்டிருப்பவர்களுக்கும் அம்பாந்தோட்டை சுடலை ஞானம் விரைவில் கிட்டும் என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# பெருந்தோட்டங்களும் கைவைக்கப்படலாம்

■ இரா. புத்திரசிகாமணி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரசின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமானின் சிலையை காரியாலயத்திலிருந்து அகற்றிவிடுவதாலோ அவரது திருவுருவப் படத்தை நாடாளுமன்றத்தில் மாட்டிவிடுவதாலோ இந்திய வம்சாவளி மலையக மக்களின் பிரச்சினைகள் எல்லாம் தீர்ந்துவிட்டதாக நாம் பெருமைப்பட முடியாது.

தலைவர் தொண்டமானுக்கு தேசிய அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பது பல நாடுகளிலும் பரந்து வாழும் இந்திய வம்சாவளி மக்களின் மத்தியில் பூரிப்பை ஏற்படுத்தி உள்ளது என்பதில் எவருக்கும் மாற்றுக் கருத்துக் கிடையாது.

ஆனால் இலங்கைவாழ் இந்திய வம்சாவளி மலையக மக்கள் தொடர்பாகப் பெருந் தலைவரின் இலட்சிய நோக்கங்களையும், அவரது சிந்தனைகளையும் அவரது கனவுகளையும் செயற்படுத்த வேண்டும். அதுதான் அந்தத் தலைவருக்கு நாம் செய்யும் கைமாறு. இப்பாரிய பொறுப்பு இளந் தலைவர் ஆறுமுகன் தொண்டமானிடமே ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அரசியல் தலைவர்களுடனும், ஊடக அமைப்புகளுடனும், தனிப்பட்ட ரீதியாகவும் உலக நாடுகள் பலவற்றிற்கு சென்றுள்ளோம். அங்கெல்லாம் 'தொண்டமான் காங்கிரஸ்' என்றுதான் அடையாளம் காண்கின்றனர். வேறு பெயர்களை அவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை. இலங்கையில் வாழும் மலையக மக்கள் என்றால் அது தொண்டமானின் மக்கள் என்றுதான் கூறுகின்றார்கள். அந்த அளவுக்கு தொண்டமானின் பெயர் மலையக மக்களின் சரித்திரத்துடன் இரண்டறக் கலந்துள்ளது.

அமரர் தொண்டமானின் பேச்சும், மூச்சும் மலையக மக்களின் விடிவு ஒன்றையே நோக்காகக் கொண்டிருந்தது.

- தோட்டத் தொழிலாளர்கள் அடிமைத் தனமின்றி சுபிட்சமாக வாழ வேண்டும்.
- ஏனைய சமூகத்தவர்கள் போன்று சமமாக மதிக்கப்பட வேண்டும்.
- நாடற்றவர்கள் என்று எவரும் இருக்கவே கூடாது.
- சொந்த இடம், சொந்தக் காணி, சொந்த வீடு என்று வாழவேண்டும்.
- அரச துறை நியமனங்கள் தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.
- பின் தங்கிய மலையகமாக அல்ல, வளர்ச்சி பெற்ற மலையகமாக மாற வேண்டும்.

இவ்வாறு போட்ட பல திட்டங்கள் இன்று நிறைவேறி வருகிறது. கனவுகள் நனவாகி வருகிறது.

ஆனால் இன்றைய அரசு சொல்வது ஒன்றாகவும் செய்வது ஒன்றாகவும் இருக்கின்றது. மலையக மக்களின் வாக்குகளை மட்டும் பெற நினைக்கும் அரசு அவர்களின் வாழ்க்கைத் தரத்தைப் பற்றிச் சிந்திக்கத் தவறிவிட்டது.

மலையகத் தொழிலாளர்களின் நலன் காப்பதற்காகவே உருவாக்கப்பட்டதுதான் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு காப்புறை அமைச்சு. முதல் இந்திய வம்சாவளி அமைச்சர்கள் என்ற பெருமை சௌமிய மூர்த்தி தொண்டமான் அலங்கரித்தார்.

தொழிலாளர் வீடமைப்பு முதல் அனைத்து நலன்புரி விடயங்களையும் சுதந்திரமாகத்

இது ஒன்றை ஆதாரமாகக் காட்டியே அரசாங்கம் எந்த விதமான முன் அறிவித்தலும் இன்றி தோட்டக் கம்பெனிகளை அபகரிக்கும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன. தோட்டக் கம்பெனிகள் நல்ல பயன் உள்ள சாறறை எல்லாம் உறிஞ்சிவிட்டு சக்கையை விட்டு வைத்துள்ளன. அந்தச் சக்கையை அரசு சுவீகரிக்கும் போது தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

தீர்மானிக்கும் வகையில் இந்த அமைச்சு அமைச்சரவை அந்தஸ்துள்ள தனி அமைப்பாக இயங்கியது. ஆனால் இன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு பல்வேறு அமைச்சுகளுடன் இணைக்கப்பட்டுள்ளது. பெயரளவில் பிரதி அமைச்சர் என்று ஒரு பதவியைக் கொடுத்து பொம்மையாக்கி விட்டார் ஜனாதிபதி.

அதே போன்று இந்நாட்டின் பல மக்களையும் (வடக்கு, கிழக்கு, தெற்கு, மலையகம் என்று இல்லாமல்) இணைத்து அனைத்து இந்து மக்களுக்கும் அவர்களுடைய மதம், பண்பாடு, கலாசாரம், பாரம்பரியம் என்பனவற்றைப் பாதுகாப்பதற்காகவே இந்து சமய கலாசார தமிழ் மொழி அலுவல்கள் அமைச்சு உருவாக்கப்பட்டது.

ஆனால் இப்பொழுது உலகை தெய்த்து உளிப்பிடியானது போல், ஒரு திணைக்களமாக மாற்றியது. [illegible] இந்துக்களின் மனங்களை மேலும் புண்படுத்தி உள்ளது.

அடுத்ததாக இப்பொழுது பெரும் தலையிடியாக மாறி இருப்பது நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை சுவீகரிப்பது.

இப்பொழுது அரசாங்கம் 37 நிறுவனங்களின் பெயர்களை உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ள போதும் நாளை பெருந்தோட்டங்களிலும் கை வைக்காது என்று கூறமுடியாது.

1999இல் இத்தகைய ஒப்பந்தத்தில் பெருந் தோட்டங்களைப் பொறுப்பேற்ற 22தோட்டக் கம்பெனிகளும் ஆரம்பம் முதல் நட்டத்தில் இயங்கியிருக்கின்றோம் என்று ஒரே ஒப்பாரியைத்தான் வைக்கின்றன.

உதாரணமாக தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பான பேச்சுகள் ஆரம்பிக்கும் போதெல்லாம் எந்த ஒரு கம்பெனியாவது இலாபம் அடைந்துள்ளோம் என்று கூறியது இல்லை.

பல கோடிரூபாய் நட்டம் சம்பள உயர்வு வழங்க முடியாது என்றுதான் கூறுகின்றன. இதனை தொழிற் சங்கங்களும் ஏற்றுக் கொள்கின்றன.

இது ஒன்றை ஆதாரமாகக் காட்டியே அரசாங்கம் எந்த விதமான முன் அறிவித்தலும் இன்றி தோட்டக் கம்பெனிகளை அபகரிக்கும் வாய்ப்புகள் நிறையவே உள்ளன.

தோட்டக் கம்பெனிகள் நல்ல பயன் உள்ள சாற்றை எல்லாம் உறிஞ்சிவிட்டு சக்கையை விட்டு வைத்துள்ளன. அந்தச் சக்கையை அரசு சுவீகரிக்கும் போது தோட்டத் தொழிலாளர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும்.

இப்பொழுதும் கூட பல கம்பெனிகள் தோட்டத் தொழிலாளர்களுக்கு செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி, ஊழியர் நம்பிக்கை நிதி என பல கோடி ரூபாக்கள் செலுத்தப்படாமல் இருக்கின்றன. அதற்கெல்லாம் பொறுப்பு கூறுவது யார்?

வெள்ளம் வருமுன் அணை போட வேண்டும். கடந்த காலங்களைப் போன்று ஈகோ காட்டாமல் அனைத்து தொழிற்சங்கங்களையும் அழைத்து முதலில் ஒரு முடிவு காண வேண்டும்.

இந்தத் தகுதியும், திறமையும் ஆறுமுகம் தொண்டமானுக்கு நிறையவே உண்டு. மலையக தலைவர் மட்டுமல்ல, தேசிய மட்டத்தில் ஒரு அமைச்சர்.

இலங்கையின் தேசிய வருமானத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்துள்ளவர். எனவே துணிச்சலுடன் செயல்பட்டு அவர் தொண்டமானின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டியது இளைய தொண்டமானின் அதி முக்கிய கடமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூக்கமும் கண்களைத் தழுவட்டுமே...

**கேள்வி : நல்ல சாப்பாடு, நண்பர்களுடன் அரட்டை, குழந்தைகளுடன் விளையாட்டு, இப்படி ஒரு திட்டமிட்ட வாழ்க்கை இருந்தும் இரவில் தூக்கம் வரவில்லை என்றால் என்ன காரணம்?**



பதில்: உடலில் நோய்கள் இருந்து தூக்கம் இல்லை என்றால் சமாளித்து விடலாம். நோய்களுக்காக மாத்திரைகள் எடுத்துக்கொள்ளும் போது தூக்கம் வராது. இது ஒரு அசாதாரண சூழ்நிலை. மாத்திரைகள் எடுத்துக் கொள்வதை நிறுத்தி விட்டால், தூக்கம் நன்றாக வரும். இப்படி எந்தக் காரணமும் இல்லாமல், தூக்கம் வரவில்லை என்றால், அதற்கான காரணத்தைக் கண்டுபிடிப்பது அவசியம். தூக்கம் வராததற்கு பத்து காரணங்கள் உண்டு என்று வேடிக்கையாகச் சொல்வார்கள்.

தூக்கத்தால் அவதிப்படுபவர்கள் ஒரு வாரம் வரை தூங்கும் நேரத்தை டயரியில் குறிப்பெடுத்து வைத்துக் கொள்ளலாம். அதன்படி எழுந்திருக்கும் நேரத்துக்கும் தூங்கும் நேரத்துக்கும் இடையில் இருக்கும் இடை வெளியை அவதானிப்பது அவசியம். தூக்க ஊக்கிகள் பயன்படுத்தாமல் தூக்கம் வருகிறதா என்பதை உறுதிசெய்து கொள்வதும் அவசியம்.

தினமும் ஏழு மணி நேரம் மட்டுமே தூங்கும் பழக்கம் இருந்தாலும், மீதியிருக்கும் ஒருமணி நேரத்தை உடல் ஈடுசெய்ய விரும்பும். சிலர் அதனை ஈடுசெய்யும் விதமாகப் பகலில் குட்டித் தூக்கம் போடுவார்கள். இருப்பினும் நாள்பட்ட தூக்கமின்மையால் உயர்ரத்த அழுத்தம் ஏற்பட வாய்ப்பு உண்டு. வயதானவர்களாக இருந்தால், நீரிழிவு நோய் உண்டாகும் வாய்ப்பும் அதிகம்.

தூக்கமின்மை இருந்தால், சீக்கிரம் படுக்கச் செல்லவேண்டும். பொதுவாக தூக்கமின்மைக்கு அவ்வப்போது குட்டித் தூக்கம் வரும். இதனால் ஓரளவு சமாதானம் அடையலாம். இரவு வேலை செய்பவர்களுக்கு, தூங்குவதற்கு வாய்ப்பில்லை. அதனால் குட்டித் தூக்கம் போடுவதில் தவறில்லை. அதற்காக, பலமணி நேரம் குட்டித் தூக்கம் போடாமல் இருப்பது நல்லது. இரவில் தூக்கம் பாதித்தால், மறுநாள் உடலில் அசதி ஏற்படும். சுறுசுறுப்பாக இயங்க முடியாது.

தொடர்ந்து ஒருவாரம் வரை இப்படியே இருந்தால், உடல் சூடு அதிகரிக்கும். அதைத் தவிர்ப்பது முக்கியம். வாரத்தின்

சிலர் கடுமையான வேலைகளுக்கு இடையில் அன்றாடம் ஒரு குட்டித் தூக்கம் மட்டும் போடுவது உண்டு. தூக்கமின்மைப் பாதிப்பு இருப்பவர்கள் தவிர, மற்றவர்களுக்கு இந்த பயிற்சி மிகவும் மோசமான பின்விளைவுகளை ஏற் படுத்தும்.

எத்தனை வேலைப்பளு இருந்தாலும் முடிந்த வரை தினமும் இரவில் தூங்குவது அவசியம். வேறு வழியில்லை என்றால், குட்டித் தூக்கம் போட்டாவது நிலைமையைச் சமாளிப்பது முக்கியம்.

உடற்பயிற்சி காலையில் செய்யலாம். படுக்கப் போகும் முன்பு பெரும் பாலோர் உடற்பயிற்சி செய்வதில்லை. ஒரு சிலர் மட்டுமே செய்வதுண்டு. தேவையேற்பட்டால், இரவுச் சாப்பாட்டுக்கு முன்பு எளிய உடற்பயிற்சி செய்யலாம். இருப்பினும் முடிந்தவரை காலையில் நேரம் ஒதுக்கி உடற்பயிற்சி செய்வதுதான் நல்லது.

தூக்கமின்மை நிரந்தர நோயாக மாறுவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. தூக்கம் வரவில்லையே என்பதற்காகப் படுக்கை அறைக்குச் செல்லவே சிலர் விரும்புவதில்லை. நமக்குத்தான் தூக்கம் வருவதில்லையே என்று எரிச்சல்.

வழக்கத்தை விட, ஒரு மணி நேரம் தமதமாகப் படுக்கச் செல்லலாம். தூக்கம் வருவதற்கு உரிய சில எளிய பயிற்சிகள் மேற்கொள்ளலாம். உதாரணமாக எண்களை மனதிற்குள் சொல்வது, எளிதான யோகப் பயிற்சியில் ஈடுபடுவது, படுக்கச் செல்லும் முன் வெதுவெதுப்பான தண்ணீரில் குளிக்கலாம். இதன் மூலம் தசைகள் இலகுவடையும். உடல் சூடு குறையும். தொடர்ந்து தூக்கமின்மை இருந்தால், டாக்டர் அறிவுரைப்படி மாத்திரைகள் எடுத்துக் கொள்ளலாம்.

தூக்கமின்மை இருப்பவர்களுக்கு முன்பு மாத்திரைகள் எடுப்பது நல்லது. ஆனால், டாக்டர்கள் ஆலோசனை அவசியம். ஒரு சில மாத்திரைகள் வீரியம் மிகுந்ததாக இருக்கலாம். இதன் காரணமாக பக்க விளைவுகள் (வாந்தி, தலை வலி, சோர்வு) ஏற்படும். அதனால் கவனம் தேவை. தூக்க மாத்திரைகளுக்கு அடிமையாதல் இது ஆபத்து.

நேரமில்லை. நான்கு மணிநேரம் மட்டுமே தூங்க முடியும் என்ற நிலை இருந்தால், இரவில் தாமதமாக (இரண்டு மணி) தூங்கி, அதிகாலை ஆறு மணிக்கு எழலாம். இரண்டு மணி வரை தூக்கம் வருவதற்குரிய வழிகளில் இறங்கலாம். (பொழுதுபோக்கு புத்தகம் படிப்பது, பாடல்கள் கேட்பது இப்படி....)


தூக்கமின்மை இருப்பவர்கள் டாக்டரிடம் உங்களுக்கு இருக்கும் பாதிப்புகளை ஒளிவு மறைவின்றிச் சொல்லிவிட வேண்டும். குறிப்பாக,

இரவில் தூங்காமல் இருந்தால் மறுநாள் உடல், மனச்சோர்வு ஏற்படும். ஹார்மோன் அளவு அதிகமிருந்தாலும் தூக்கம் வராது இந்த அறிகுறி தெரிந்தால் உடனே டாக்டரிடம் செல்வது அவசியம்.

**கேள்வி: சிறுநீர்ப்பை அழற்சி என்றால் என்ன?**

**பதில்: சிறுநீர்பையில் பாக்டீரியா தொற்றால் ஏற்படும் எரிச்சல் அல்லது வீக்கத்தால், சிறுநீர்ப்பை அழற்சி ஏற்படுகிறது.**

இதனால், அவசரமாக மற்றும், அடிக்கடி சிறுநீர் கழிக்கவும், அத்தகைய சமயங்களில் வலி அல்லது குத்தல், ஆண் அல்லது பெண் இனப்பெருக்க உறுப்பில் அசௌகரியம், ஒரு சிலருக்கு சிறுநீருடன் ரத்தமும் வெளியேறும். பொதுவாக, பெண்களுக்கு சிறுநீர்ப்பையில் அழற்சி ஏற்படக் காரணம், குறுகிய அளவிலான சிறுநீர்ப்பை நாளம் கொண்டிருப்பது அல்லது தொற்று ஏற்படுவது தான். பெரும்பாலான பெண்கள், வாழ்க்கையில் ஒரு முறையேனும் இதனால் பாதிக்கப்படுகின்றனர். இதற்கான சிகிச்சை அளிக்கா



விடில், சிறுநீரகத்தில் பாதிப்பை ஏற்படுத்திவிடும். சிறிய அளவிலான சிறு நீர்ப்பை அழற்சிக்கு, வலி நிவாரணி மற்றும் போதிய அளவிற்கு நீர் அருந்துவதன் மூலம், 4 முதல் 9 நாட்களில் சரியாகிவிடும். மிதமான நிலையிலுள்ளசிறு நீர்ப்பை அழற்சிக்கு, தேவையான சிகிச்சையுடன் 7 நாட்களுக்கு மருந்து உட்கொள்ள வேண்டும். சில சமயம், இது அடிக்கடி நிகழ்ந்தால், எந்த வகை பாக்டீரியாவால் பாதிப்பு ஏற்படுகிறது என்பதைக் கண்டறிந்து, அதற்கேற்றவாறு மருந்து உட்கொள்ள வேண்டும். நிறைய நீர் அருந்துதல், மற்றும் குறித்த காலங்களில் சிறுநீர் கழித்தல் ஆகியவற்றை மேற்கொள்வதன் மூலம், சிறுநீர்ப்பை அழற்சி ஏற்படு வதை குறைக்கலாம்.

# குளிர்காலத்திற்கேற்ற சருமப் பராமரிப்பு

குளிர்காலத்தில் கதகதப்பான உடைகள் அணிந்து கொள்ளுதல், நெருப்புக்கு அருகில் அமர்ந்து குளிர் காய்தல், தலை முதல் கால் வரை மூடிய நிலையில் உடைகள் அணிதல் ஆகியவை மட்டும் போதாது. குளிர்காலத்தில், சருமத்திற்கு பிரத்தியேக கவனம் செலுத்தி பராமரிப்பது அவசியம்.



அதற்காக சில குறிப்புக்கள் இதோ:

கூந்தல் பராமரிப்பு : வாரத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை ஒலிவ் எண்ணெய் தடவலாம். இதனால், கூந்தலின் ஈரத்தன்மை வலுவடையும். எண்ணெயை சூடுபடுத்தி, தலையில் தேய்த்து வெயில் காலத்தில் ஊறவிடுவதை விட குறைந்த நேரம் மட்டுமே ஊற விட வேண்டும். தலையில், அதிக நேரம் எண்ணெயை ஊறவிட்டால், அதனால், உடல் நலம் பாதிக்கப்படலாம்.

அதே போல், மூலிகைச் சாறுகள் ஏதாவது தலையில் தேய்ப்பதாக இருந்தாலும், அவற்றையும் அதிக நேரம் ஊறவிடக் கூடாது. மூலிகை சாறுகள் பெரும்பாலும் குளிர்ச்சி தருபவை. அவை வெயில் காலத்திற்கே உகந்தவை.

குளிர்காலத்தில், கூந்தலை விரித்து விடுவதை தவிர்த்து, பின்னுவது அல்லது கொண்டை போடுவது ஆகியவற்றை செய்யலாம். இதனால், குளிர்ந்த காற்றால் கூந்தல் வறண்டு போவது தடுக்கப்படும்.

அடிக்கடி ஹேர் கலரிங் செய்வது, சுருட்டை முடிகளை நீண்ட முடியாக மாற்றும் ஸ்ட்ரெயிட்னிங், ஆகியவற்றால், கூந்தலின் ஈரப்பதம் வறண்டு போவதால், அவற்றையும், சூடான சாதனங்களை கூந்தலில் பயன்படுத்துவதையும் தவிர்ப்பது நல்லது. கூந்தலில் இயற்கையான 'டை'கள் பயன்படுத்தலாம். குளிர்ந்த காற்றில் இருந்து கூந்தலை காப்பாற்ற, 'சில்க் பேப்ரிக்' துணிகளை பயன்படுத்தலாம்.

சரும ஆரோக்கியம் வெளிப்புறத்தில் செய்யும் சிகிச்சையைப் பொறுத்து மட்டுமல்லாது, நாம் சாப்பிடும் உணவையும் பொறுத்தது. முறையான ஊட்டச்சத்துள்ள உணவு, சருமம் ஆரோக்கியமாக இருக்க உதவுகிறது. அதிலும் குறிப்பாக, சருமத்தில் ஈரப்பதத்தை பராமரிப்பதில் தண்ணீர் முக்கியப் பங்காற்றுகிறது. தினமும், உணவில் அதிகளவில் பழங்கள் மற்றும் காய்கறிகள் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவையும், நம் உடலின் செயல்பாட்டிற்கான தண்ணீரை வழங்குகின்றன.

குளிர்காலத்தில், சருமத்தின் மென்மை மற்றும் நெகிழ்வுத் தன்மை ஆகியவற்றை பராமரிக்க, சோப்பிற்கு பதிலாக கடலை மாவைப் பயன்படுத்தலாம்.

தோல் வறண்டு போதல் மற்றும் வெடித்தல் ஆகியவற்றை தவிர்க்க, குளிக்க செல்வதற்கு சிறிது நேரத்திற்கு முன், தேங்காய் எண்ணெயை தேய்க்கலாம். குளிர்காலத்தில் 'மாய்ச்சரைசர்கள்' மற்றும் கிரீம்கள் தடவ வேண்டியது அவசியம்.

குளிக்கப் பயன்படுத்தும் தண்ணீரில் சில துளிகள் எண்ணெய் சேர்த்துக் கொள்ளுங்கள். இது, குளிப்பதால், ஏற்படும் ஈரப்பதம் இழப்பை மீண்டும் பெற உதவும். மிகவும் சூடான நீரில் குளிப்பதை, தவிர்க்க வேண்டும். ஏனென்றால், சூடான நீரில் குளிப்பதால், உடலின் இயற்கையான எண்ணெய்ப் பசை குறைந்துவிடும்.

குளிர்காலத்தில் பெரும்பாலானவர்களுக்கு ஏற்படும் பொதுவான பிரச்சினை உதடு வெடிப்பு. இதற்கு, சிறந்த பெட்ரோலியம் 'ஜெல்'லை உதட்டில் தடவலாம். பெட்ரோலியம் 'ஜெல்'க்கு பதிலாக வெண்ணெயையும் உதட்டில் தடவலாம். இதனால், உதடு வெடிப்பு குணமாவதோடு, கூடுதல் மென்மையும் கிடைக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித வாழ்க்கையில் சுக துக்கம் சுழல் சக்கரம்



## பித்தன் பதில்கள்

ம.அங்கையற்கண்ணி,
மட்டக்களப்பு.

**கேள்வி:** மனித வாழ்க்கையில் இன்பத்தையும் துன்பத்தையும் ஒன்றாகக் கருதி ஏற்க வேண்டுமெனத் தத்துவம் பேசுகிறார்களே? இன்பமும் துன்பமும் நிலையானவைதானா?

**பதில்:** மனித வாழ்க்கையில் சுக துக்கம் சுழல் சக்கரம்.



பொ.புஸ்பலீலா,
மன்னார்.



**கேள்வி:** திருமணத்தின் போது மணமகன் மணமகளின் கழுத்தில் தாலி கட்டுவதன் அர்த்தம் என்ன?


**பதில்:** இனி நீ கட்டுப்பாட்டுடன் நடந்தாக வேண்டும், என்பதற்கான எச்சரிக்கைக் குறியீடாக இருக்கக்கூடும். குதிரைக்குக் கடிவாளம் மாட்டுவது குதிரையை அடக்க அல்ல, கட்டுப்பாட்டில் வைத்திருக்கவே.



கண்ணன்,
கிளிநொச்சி.

**கேள்வி:** காதலியை நிலவுக்கு ஒப்பிட்டு வர்ணிக்கும் காதலன் குறித்து என்ன நினைக்கிறீர்?

**பதில்:** அந்தக் காதலி எச்சரிக்கையாய் இருத்தல் நல்லது. நீல் ஆம்ஸ்ரோங் மாதிரி இறங்கித் தடம் பதித்துவிட்டு மாறிவிடப்போகிறான் அந்தக் காதலன்.



வே.வேணுகோபால்,
பருத்தித்துறை.

**கேள்வி:** இலேசில் மற்றவர்களிடம் ஏமாறுபவர்கள் குறித்து.......?

**பதில்:** அப்பாவித்தனமாக மற்றவர்களிடம் ஏமாறுபவர்கள் இருக்கும் வரை ஏமாற்றுபவர்களும் இருக்கத்தான் செய்வார்கள். எதிலும் ஆழ்ந்த நோக்கும் அவதானமும் இருந்தால் ஏமாற நேராது.

ம.செல்லத்தம்பி,
நுணாவில்.

**கேள்வி:** வீடொன்றைக் கட்டிக்கொள்வதிலும் திருமணம் செய்து கொள்வதிலும் மிக மிக அவதானம் தேவை என்கிறார்களே? இதன் உட்பொருள் என்ன பித்தரே?

**பதில்:** இரண்டுக்கும் அத்திவாரம் பலமாக அமையாவிட்டால் இடை நடுவில் இடிந்து விழுந்துவிடும். அதனால்தான் இவ்வித முன்னெச்சரிக்கை சமிக்ஞை.



ம.ஆனந்தராணி,
கெருடாவில்.

**கேள்வி:** நாட்டின் சனத்தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த குடும்பக் கட்டுப்பாட்டு நடைமுறை அவசியம் தானா பித்தரே?

**பதில்:** கண்மண் தெரியாது மோட்டார் சைக்கிளோட்டும் இக்கால இளசுகளும், போக்குவரத்து விதிகளை மதிக்காது தான்தோன்றித்தனமாக வாகனங்களைச் செலுத்தும் சாரதிகளும் இதற்கு ஒரு அளவுக்கு உதவி புரிந்தாலும் குடும்பக்கட்டுப்பாட்டு நடைமுறையும் அவசியம் தான்.

தே.ஜயாத்துரை,
வரணி.



**கேள்வி:** நடை, உடை, பாவனை என்பதன் மூலம் குறிப்பிட்டு உணர்த்த விழைவது எதனை?

**பதில்:** முக்கியமாகப் பெண்களின் ஒழுக்கத்தை நடை - பணியையும், உடை-பண்பையும், பாவனை- அப்பெண் மீது மதிப்பையும் ஏற்படுத்த வேண்டுமென்பதே எதிர்பார்ப்பு.

அ.இளங்கோ,
கொழும்பு -06.

**கேள்வி:** நீண்ட நாள்களாக என்னைக் காதலித்து வரும் பெண்ணொருத்தி அண்மையில் ஒரு இளம் டாக்டரைச் சந்தித்ததில் இருந்து கட்சிமாற எத்தனிக்கிறாள் போலப்படுகிறதே?



**பதில்:** உமது கேள்வியை வாசித்த போது 'Apple a day keeps the doctor away' என்றொரு பழமொழி ஞாபகத்துக்கு வருகிறது. உமது காதலிக்குத் தினமும் ஒரு ஆப்பிள்பழம் வாங்கிக் கொடுத்துப் பாருமேன்?

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 496

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | 6 |
| 7 | | | ■ | 8 | | | |
| 9 | | | 10 | ■ | 11 | | |
| | ■ | 12 | | 13 | | ■ | |
| ■ | 14 | ■ | 15 | | ■ | 16 | |
| 17 | | 18 | | ■ | 19 | | ■ |
| 20 | | | ■ | 21 | | | |
| 22 | | ■ | 23 | | | | ■ |

### மேலிருந்து கீழ்

01. புத்திக்கூர்மை
02. வாட வை
03. பருமை
04. சுந்தரன்
05. வதனம்
06. யானையின் விசேட உறுப்பு
10. மகன்
13. குளிர்மை
14. கற்புடையவள்
16. வேறு ஒன்றாய் பாவனை செய்தல்
17. பாக்குத் தரு
18. படுதா
19. நீர் தேங்கி நிற்கும் இடம்
21. உயிரின் ஆரம்ப நிலை

### இடமிருந்து வலம்

01. வாதம்
04. அமிர்தம்
07. தமிழர்களின் பாரம்பரிய ஆடைகளில் ஒன்று
08. கூட்டுச் சேர்ந்து அமைப்பது
09. எரிச்சலால் வருவது
11. நீண்டது உலோகத்திலானது
12. புத்த சமயத்தின் வழிகாட்டி
15. வலிமை
16. சிரி
17. வெட்டிவிடு
19. இது குடியைக் கெடுக்கும்
20. பலகைக்கு உகந்த மரம்
21. கடலின் நடுவே உள்ள திடல்
22. முதுகை வளைத்துக் கூனிக்கொள்
23. இனிப்புச் சுவைதரும் பயிர்

அனுப்புபவர் பெயர்:...............................................

விலாசம்:...............................................

...............................................

கையொப்பம்:...............................................

---

### சொற்சிலம்பம் போட்டி இல. 496

சொற்சிலம்பம் 496 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு டிசம்பர் 4ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் டிசம்பர் 11ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தாளைவெட்டியில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பதில் விடைகளைச் சரியாக எழுதி யிருப்பவர்களின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தெரிந்தெடுக்கப்படுவார்கள்.

*அனுப்பவேண்டிய முகவரி:*
**சுடர் ஒளி யாழ். அலுவலகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 493 இல் பரிசு பெற்றோர்

1 ஆம் பரிசு: செல்வி. கௌசிக்கா மோகனதாஸ், வெள்ளிமலைப்பிள்ளையார் கோவில் வீதி, சென்கலை.

2 ஆம் பரிசு: மு.பா.கேஸ்வரி, திரிவேள்,தும்பளை, பருத்தித்துறை.

3 ஆம் பரிசு: எம்.எப்.ஷிம்லா, 57, உதுமான்லெப்பை வீதி, தருகன்தோட்டை.

## சொற்சிலம்பம் போட்டி இல.493 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01.சிவப்பு, 02.கிளி, 03.கைசலம், 04.முத்தம், 05.காதம், 06.மைல், 09.குமரன், 10.சன்னி, 12.தமது, 14.குடும்பம், 16.தலைப்பு, 17.நட, 18.மருது, 19.கடுகு, 20.சாய்

**இடமிருந்து வலம்**

01.சிகிச்சை, 04.முகாமை, 07.வலி, 08.வதைத்தல், 10.சாதம், 11.புதன், 13.மும், 15.மனிதன், 17.நடு, 18.எது, 19.கடம், 20.சாப்பாடு, 21.துரும்பு, 22. குலம்,

### பாராட்டுப் பெறுவோர்

(1) **க.சூரியகுமாரன்,**
இல.136,ஜெயந்திநகர்,கிளிநொச்சி.

(2) **எம்.பீ.முகைடீன்,**
இல.352, மதரசா லேன், மருதமுனை.

(3) **மு.சித்திரவேல்,**
இல.45 J/1,ஜோசப்லேன்,பம்பலப்பிட்டி.

(4) **க.நடராஜா,**
துணவி குடியேற்றத்திட்டம்,
இல. 01, வட்டுக்கோட்டை.

(5) **திருமதி.வசந்தா பாலேந்திரா,**
இல. 21,நெல்சன் பிளேஸ்,வெள்ளவத்தை.
கொழும்பு -06

(6) **வை. தனபாலசிங்கம்,**
நுணாவில் மேற்கு, சாவகச்சேரி.

(7) **சு.பரத்வாஜ்,**
இல.85/2, சங்கமித்த மாவத்தை,
கொழும்பு -13.

(8) **யோ.டிலானி,**
இல.38/32,மணல்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,யாழ்ப்பாணம்.

(9) **கலாவதி குமாரசாமி,**
இல.27/125, பரக்கும்பா பிளேஸ்,
வெள்ளவத்தை.

(10) **எஸ்.வசந்தபிரியன்,**
போக்காலை ஒழுங்கை, உடுப்பிட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் சுடர்



## மகிழ்ச்சியாக வாழ மந்திரம்

ஒரு அரசனின் மந்திரி மிகவும் அறிவாளி. எல்லாவற்றிற்கும் நல்ல தீர்வை சீக்கிரமே கொடுத்துவிடுவார். அரசன் இவரை சோதிக்க ஒரு சோதனை வைத்தார்..

அவர் அந்த மந்திரியை அழைத்து இவ்வாறு சொன்னார்.

"எனக்கு ஒரு மந்திர மோதிரம் வேண்டும். நான் மகிழ்ச்சியாக இருக்கும் போது அதைப் பார்த்தால் எனக்கு துக்கம் வந்துவிட வேண்டும். வருத்தமாக இருக்கும் போது அதைப் பார்த்தால் மகிழ்ச்சியாகிவிட வேண்டும்"

இதைக்கேட்ட அமைச்சர் குழம்பிப்போனார். அமைச்சருக்கு ஆறு மாத கால அவகாசம் கொடுத்து அனுப்பி வைத்தார் அரசர்..

அமைச்சர் தேடித்தேடி அலைந்து போனார். காலக்கெடு முடிவடையும் தருவாயில் அவர் அரசனிடம் வந்தார்.

அவர் கையில் ஒரு சாதாரண மோதிரம் இருந்தது.



அமைச்சர் "அரசே இதோ நீங்கள் கேட்ட மோதிரம்" என அரசரிடம் அம்மோதிரத்தை கையளித்தார்.

அரசருக்கு வியப்பு. அப்படி என்ன அதில் இருக்கிறது எனப்பார்க்க அதில்

**'இதுவும் கடந்து போகும்'** என எழுதப்பட்டிருந்தது.

அதிக மகிழ்ச்சியையும் அதிக கவலையையும் தடுக்கக்கூடிய இது ஒரு பிரபலமான தாரக மந்திரம்.

இவ்வாசகத்தை நாம் மகிழ்ச்சியில் நினைத்துக்கொண்டால் மகிழ்ச்சியால் மதிமயங்காமல் இருக்கவும், தலைக்கனம் வராமல் இருக்கவும் உதவும்.

இதே மந்திரத்தை கவலையாக இருக்கும் போது நினைத்தால் கவலை மாறும் என்ற தன்னம்பிக்கை வந்துவிடும்.

எனவே இம்மந்திரத்தை எப்போதும் அரசர் ஞாபகத்தில் வைத்துக்கொண்டார்.


## என்ன செய்யும் சின்ன மைனா?

1





தொடரும்...

கீழே படத்தில் கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளின்படி வண்ணம் பூசுங்கள்





தம்பி தங்கைகளே! இங்கு தரப்பட்டுள்ள இரண்டு படத்திற்கும் இடையே உள்ள ஏதேனும் நான்கு வித்தியாசங்களை வட்டமிட்டுக் காட்டுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகின் பிரமாண்டமான குழிகள்!





உலகின் பல்வேறு இடங்களிலும் காணப்படும் மிகப் பிரமாண்டமான குழிகளே இவை. பார்ப்பதற்கு மிக அழகாக தோற்றமளிக்கின்ற போதிலும் அவை ஆபத்து மிகுந்தவையாகும்.








உலக நீரிழிவு மாதத்தை முன்னிட்டு விஷேட சலுகை.

உங்கள் குருதியில் சக்கரையின் அளவை கணித்துக்கொள்ள ப்ரொடிஜி ஓட்டோகோட் மற்றும் ப்ரொடிஜி பொக்கட்

இந்த விளம்பரத்தை எந்தவொரு பிரதான பாமசி, Arpico மற்றும் Laugfs சுப்பர்மார்கட்களில் வழங்கி இந்த சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

இலங்கையில் கோர்ட் முறை இல்லாமல் ஒரு துளி இரத்தத்தில் உங்கள் சக்கரையின் அளவை கணிக்கும்

Approved by the US FDA

கேளுங்கள்

எந்த ஒரு பழைய கருவியையும் கொடுத்து புதிய கருவியை பெற்றுக்கொள்ளலாம்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக தகவல்களுக்கு இப்போதே அழையுங்கள் 0773138023



PRODIGY AutoCode
Handy Easy Fast
~~Rs. 5950/=~~
Rs. 4950/=

PRODIGY Pocket
Small Fast Convenient
~~Rs. 3950/=~~
Rs. 2950/=



விஷேட சலுகை 30ம் திகதி நவம்பர் 2011 வரை மட்டுமே.

Service for Health

Imported and Marketed by Emar EMAR PHARMA (PVT) LTD.

No.23, Anderson Road, Kalubowila, Dehiwela.
Ter.:2810917 ... emar79@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாசமான வடிவத்தில் உள்ள பெண்டிரைவ்

பெண்டிரைவ் என்பது இப்பொழுது கணனி உபயோகிப்பவர்கள் அனைவரும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் ஒரு பொருளாகும். இதன் மூலம் நமக்கு தேவையான File-களை அல்லது புகைப் படங்களை சேமித்து கொண்டு மற்றவர்களுக்கோ அல்லது வேறொரு கணனியில் பதியவோ பயன் படுத்துகிறோம். இங்கே சில வித்தியாசமான பெண்டிரைவ் களைக் காணலாம்.




லொறி, டிப்பர், ட்ரக் வாகனங்களுக்கு

## லீசிங் சுமை குறைக்கப்பட்டுள்ளது



பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத
லொறி, டிப்பர், ட்ரக் கனரக வாகனங்களை
மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில்
லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள
சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.



CF

சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி

உடன் தொடர்புகளுக்கு 0112315215

கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள சென்ட்ரல் பினான்ஸ் கிளை அலுவலகத்திற்கு வாருங்கள் வெப்.தளம். www.cf.lk & www.cfautomart.com

# TIEFSTE PREISE!

Möbel Ferrari

**HINWIL**

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

**Öffnungszeiten**
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00



SOLANGE VORRAT!

1290.-
statt 2450.-

ECHTES LEDER

**CESARE**
Komplette Polstergruppe
Echt Leder schwarz
2er Br. 185 cm
3er Br. 195 cm
Chromfuss

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.

0.0% Direkt Finanzierung



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்டமார்க் எண்டர் பிறைஸ் ஸ்தாபனத்தில் 2011, நவம்பர் 06 ஆம் திகதி வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org